மு. வ. புதினங்களில்

# தமிழ் - தமிழினம்

முனைவர் பொன். சௌரிராசன்

# மு. வ. புதினங்களில் தமிழ் - தமிழினம்

முனைவர் பொன். சௌரிராசன்
பேராசிரியர், தமிழ்த்துறை
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113

முனைவர் மு. வரதராசனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு—1
(18 & 19—9—1989)

Dr.M. Varadarajanar Endowment Lecture No. 1
ENDOWMENT LECTURE — Publication No. 18

BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title | *M. Va. Putinankalil Tamil, Tamil Inam* |
| Author | Dr.P. Sourirajan, Professor, Dept. of Tamil, Sri Venkateswara University Tirupati. |
| Publishers | International Institute of Tamil Studies |
| Copyright | T.T.T.I. Post, Taramani, Madras-600 113 |
| Publication No | 146 |
| Language | Tamil |
| Date of Publication | January 1990 |
| Edition | First |
| Paper used | Mantia 15.5 kg. |
| Size | 21 × 14 cms. |
| Printing types used | 10 pt. |
| Number of Copies | 1200 |
| Number of Pages | VIII + 130 |
| Price | Rs. 20 |
| Printers | Amudhan Achagam, 66, Periyar Street, M.G.R. Nagar, Madras-78. |
| Binding | Card Board |
| Artist | Sathya |
| Subject | A Study on Mu.Va's Novels. |

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

முனைவர், சிலம்பொலி சு. செல்லப்பன்,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை-600 113.

நிறுவனச் செயற்பாடுகளில், புறத்தே இருக்கும் தமிழறிஞருக்கும் பங்களிக்க வேண்டும் என்ற பெருநோக்கில் அறக்கட்டளைகள் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இந் நூற்றாண்டின் மூத்த தமிழறிஞர், சிறந்த படைப்பாசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் சிறப்பு இயக்குநர் எனப் பல நிலைகளில் புகழ் கொண்டுள்ள முனைவர் மு. வரதராசனார் பெயரில் அமைந்துள்ள அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவாக இந்நூல் அமைகிறது.

முனைவர் மு. வ. நாடறிந்த படைப்பாசிரியராதலின் அவர் பெயரில் அமைந்துள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், படைப்பிலக்கியங்கள் மீது அமையும். அவ்வகையில் முதலாவதான இச்சொற்பொழிவு அவரது புதினங்களையே ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. பேராசிரியர் மு. வ. உடன் நெருங்கிப் பழகிய நல்மாணாக்கருள் ஒருவரான, திருப்பதி, திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பொன். சௌரிராசன் இச்சொற்பொழிவினை நிகழ்த்தி, நூலாக்கம் தந்துள்ளார். முற்றிலும் புதிய கோணங்களில் மு. வ. புதினங்களை அணுகி, நுணுகியாராய்ந்து, அவரின் தமிழ்மொழி, தமிழ் இனம் பற்றிய எண்ணங்களைச் சிறப்புற வடித்துத் தந்துள்ளார். தம் கடின உழைப்பால் புதின ஆய்வில் சிறந்ததொரு நூலைத் தந்து, மு. வ. புகழிற்கு மேலும் மெருகூட்டியுள்ள பேராசிரியரைப் போற்றிப் பாராட்டுகிறேன்.

நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வியமைச்சர், பேராசிரியர் முனைவர் க. அன்பழகனார் அவர்கட்கும் எங்கள் நன்றி. நூலைச் செம்மையுற வெளியிடப் பணிபுரிந்த அறக்கட்டளைச் சொற் பொழிவுப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்கட்கும் நன்றி. நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள அமுதன் அச்சகத் தாருக்கும் எங்கள் நன்றி.

சென்னை
12-1-90

அன்புடன்
சு. செல்லப்பன்.

# நன்றியுரை

பேராசிரியர் மு.வ. அப்பா அவர்கள் என்பால் கொண்ட அன்புக்கும் அருளுக்கும் கைம்மாறில்லை. வள்ளுவர் கூறுவது போலச் செய்யாமல் செய்த, எதிர்பார்ப்பு இல்லாமல் செய்த, ஈடு செய்ய முடியாது செய்த அவர்தம் உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது. பிற்காலத்து ஔவையார் கூறியது போல இன்றுங்கூடக் கனவிலும் நனவிலும் அவர் காட்சி நிறைந்து, நெறிகாட்டிப் பேரின்ப வாழ்வை எனக்கு நல்கி வருகிறது.

உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன மு.வ. அறக்கட்டளை சார்பாக மு.வ. புதினங்கள் பற்றிச் சொற்பொழிவு ஆற்று கின்ற, நினைவில் நிறுத்துகின்ற வாய்ப்பை முதன்முதலில் அதன் இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் எனக்கு அளித்தார்கள். அடுத்து, தொடர்ந்து இயக்குநர் பதவியேற்ற முனைவர் ஏ.என். பெருமாள் அவர்களும், முனைவர் க.த. திருநாவுக்கரசு அவர்களும் என்னை மறவாமல் சொற்பொழிவை விரைவில் நிகழ்த்தித் தருமாறு நினைவூட்டி னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் கடமைப்பட்டுள்ளேன்.

இன்று சாதி, சமயக் கட்டுகள் கடந்து தமிழ்மொழி, இன உணர்வோடு தமிழர் அனைவரையும் அணைத்து ஆதரித்துச் செல்லும் மு. வ. போன்ற நல்லுள்ளம் கொண்ட முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் அவர்கள் நிறுவன இயக்குநர் பதவி ஏற்றதும் மு.வ.வை நினைந்து தம் காலத்து முதல் அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்தித் தரும் வாய்ப்பை எனக்கு அளித்தார்கள். அந்த வாய்ப்பின் பயனே இந்நூல்.

இதில் கூறிய குறிப்புகள் பலவற்றைப் பல இடங்களுக்குச் சென்று திரட்டினேன். அப்போதெல்லாம் எனது முதல்மகன் திரு.சௌ. முத்தன் என்னுடன் வந்து குறிப்பெடுத்து உதவினார். அத்தகு குறிப்புகளை ஒழுங்குபடுத்த உதவியவர்கள் மயிலம் செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் முனைவர் ஆர். இலட்சாராமனும், தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் முனைவர் கோவி. இராசகோபாலும், கிருட்டிண தேவராயர் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு.கோவி. நரசிம்மனும் ஆவர். இப்போது அதனை நூல் வடிவாக உருவாக்கும்போது எனக்குத் துணை செய்த முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் திரு. அருண். தங்கப்பாவும், திரு. கருணாசேகரும் ஆவர். அவர்களுக்கெல்லாம் என் வாழ்த்துகள்.

சொற்பொழிவு நிகழ்ந்த இரு நாட்களிலும் ஆராய்ச்சி நிறுவன அறிஞர் பெருமக்களும் பேராசிரியர் மு.வ.வின் மூத்த முதுமாணவர்களும் அங்கு வந்திருந்து எனக்கு ஊக்கம் தந்தனர். அவர்களுக்கு எல்லாம் என் வணக்கங்கள்.

அன்பன்

**பொன். சௌரிராசன்**

# உள்ளுறை

**பக்கம்**

**மு. வ. புதினங்களில் தமிழ்மொழி** 1–68

I மு. வ. புதினங்களின் பொதுவியல்பு—1, II கலை—கலைக்காகவே; கலை வாழ்க்கைக்காகவே — 7, III தமிழ் மொழிச் சிறப்பு— வாழ்வு— வளர்ச்சி—9: தமிழும் தமிழரும் 10, தமிழில் இசையும் கூத்தும் 16, IV தமிழ் உரைநடை வளர்ச்சி— 18, V தமிழ்ச் சொல்லாக்கம்— 32: வழக்கிலுள்ள பெயர்களை அவ்வாறே வழங்குதல் 35, புதினங்களில் குழந்தைகளுக்குப் பெயரிடுதல் 36, பாத்திரங்களுக்கு இயற்கைச் செடி கொடிப் பெயர்களை இடுதல் 37, பாத்திரங்களுக்குத் தமிழ்ச் சான்றோர், தமிழ்க்காப்பிய மாந்தர் பெயர்களை இடுதல் 37, புதின மாந்தர்களுக்குப் புதுப் பெயரிடுதல் 38, பெருவழக்குக் கருதிப் பிறமொழிப் பெயர்களை அவ்வாறே வழங்குதல் 38, தமிழ் மொழியில் பெயர்களை அமைத்தல் 39, பண்புநலன் அடிப்படையில் பெயரிடுதல் 40, VI புதினங்களில் தமிழ் இலக்கிய அறிமுகம்— 42: சங்க இலக்கியம் 44, திருக்குறள் 49, குறளும் கீதையும் 57, சிலம்பு 58, தேவாரம்— திருவாசகம் 63, தாயுமானவர் பாடல்கள் 65, இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் 66

**தமிழ் இனம்** 71— 126

I தமிழ் இனம் — 71: விருந்து 78, புகழ் 79, கற்பு 80, II தமிழருடைய இன உணர்வு, நாட்டுப்பற்று 84, III தமிழர்மறை திருக்குறள்— 93, IV பெண்மை நலம்—

97: கற்பு 97, இல்வாழ்க்கை 100, மனைவிக்கு உரிமை 102, தமிழ்நாட்டுச் சமையலும் பெண்ணடிமையும் 103, V சில தொடர்கள்— 105: நல்லவன்—வல்லவன் 105, எப்படியும்—இப்படியும் 110, VI சாதி-சமய நெறிகள் 110: சமய நெறிகள் 111

கருவி நூற்பட்டியல் 127

துணை நூற்பட்டியல் 127

சிறப்புச் சொல்லகராதி 129

❋

# மு. வ. புதினங்களில் தமிழ் மொழி

## I மு. வ. புதினங்களின் பொதுவியல்பு

பேராசிரியர் மு. வ. சங்க இலக்கியம் நடத்தினார்; திருக்குறள் கற்பித்தார்; சிலப்பதிகாரம் பயிற்றுவித்தார். சங்க இலக்கியத்தில் நற்றிணை முழுதினையும் சிறப்புப் பாடமாக அவரிடம் கற்றேன். திருக்குறளை வகுப்பிலும் வேறிடங்களிலும் அவரிடம் கேட்கும் வாய்ப்புக் கிட்டிற்று. சிலப்பதிகாரத்தை அவரிடம் கற்று, கேட்டதோடன்றி, அவருடனிருந்து உரையாடி அவர் எண்ணி எண்ணிக் கூற எழுதிப் பயின்றேன். அந்தக் கல்வியால், கேள்வியால், பயிற்சியால் சங்கப் புலவர்களையும், திருவள்ளுவர் பெருந்தகையையும், இளங்கோ அடிகளாரையும் உணர்ந்து கொள்ள இயன்றது. தமிழ் மொழி, இன உணர்வைக் கொள்கையாகவும் குறிக்கோளாகவும் கொண்டு காப்பியம் யாத்த இளங்கோ அடிகளார் என் இதயத்தில் ஆழ்ந்து படிந்துவிட்டார். அந்த அடிகளாரை எண்ணும் போதெல்லாம் தமிழை வளர்த்த, தமிழின வாழ்வு வளம்பெற முயன்ற இரண்டாவது தமிழனாகப் பேராசிரியர் மு. வ. என் நெஞ்சில் நிலவுகிறார்.

தம் சிந்தனையின் ஒவ்வோர் அசைவையும், தம் பேனாவில் ஊற்றப்பெற்ற மையின் ஒவ்வொரு துளியையும் தமிழ் மொழி, தமிழ் இன உணர்வோடு தமிழகம் வாழ, உலகம் வளரப் பயன்படுத்திய எழுத்தாளர், பேராசிரியர் மு. வ.

எழுத்தாளர் மு. வ. விற்குக் கைவந்த எழுத்துக் கலைகள் பல. கவிதையில் துவங்கிக் கதையாய் மலர்ந்து புதினமாய்க் கனிந்தது ஒருநிலை. உரையாய்த் தோன்றி, உணர்வுச் சித்திரமாய் உருவாகி, கற்பனைக் கட்டுரைகளாய் வடிவானது இன்னொரு நிலை. ஆராய்ச்சியாய்த் தொடங்கி, மொழியியலாய், திறனாய்வாய் உருவானது பிறிதொரு நிலை. இம் மூன்று நிலைகளில் கவிதையாய்த் தொடங்கிக் கதையாய் வளர்ந்த புதினம் என்னும் படைப்பிலக்கியக் கலையைத் தன் கொள்கைக்கும் குறிக்கோளுக்கும் உரிய நல்ல ஊர்தியாக்கிக் கொண்டார்.

''புதுமைத் தமிழ் இலக்கியத்திற்குரிய பேராசிரியர் மு. வ. அவர்களின் கொடையாகப் புதினத்தில் இடம் பெறும் பல வகை நோக்கு நிலைகளையும், கடித இலக்கிய மரபினைத் தொடங்கி வைத்தமையையும், உண்மை காண இயலும் தற்சார் பற்ற ஆராய்ச்சி நெறியையும், இன்தமிழ் எழில் நடையையும் குறிப்பிடலாம். நடுத்தர வகுப்பு மக்களின் குடும்பச் சிக்கல் களைச் சித்திரிக்கும் அவருடைய புதினங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. இவற்றோடு இலக்கிய மறுமலர்ச்சிக்கும், சமுதாய விழிப்புணர்ச்சிக்கும், தலைமுறை இடையீட்டைக் குறைத்துப் புத்துலக மனப்பாங்கினைப் புரிந்து கொள்வதற்கும், அவர் ஆற்றியுள்ள படைப்பிலக்கியப் பணியையும் சேர்த்து மதிப்பிட வேண்டும். முதன் முதலாகப் பண்டிதர்கள் இடையே, 'புதினம்' எனும் புதிய இலக்கிய வகைக்கு ஒருவகை மதிப்பைத் தேடித் தந்தவர் மு. வ. என்பதை நாம் மறக்க இயலாது''[1] என்று பேராசிரியர் க. அன்பழகன் கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது. இக் கூற்றை மேலும் சிறப்பிக்கும் வகையில் க. நா. சுப்பிரமணியம் கீழ்வருமாறு கூறியிருப்பதும் கருதத் தக்கது.

''சென்ற தலைமுறையில் வாசகர்கள் இடையே கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் வகித்த ஸ்தானத்தை இந்தத் தலைமுறையில் பேராசிரியர் வரதராசர் வகிக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. கவியோகியைப் போலவே வரதராசரும் இலக்கியத்தில் பல துறைகளில் ஈடுபட்டு எழுதியிருக்கிறார்.''[2]

'மண்வெட்டிக் கூலி தின்னலாச்சே, சோற்றுக்கோ வந்த திந்த பஞ்சம்' என்று பாரதி கதறியது போல, கூலி எழுத்தாளனாக, சோற்றுக்கு எழுதுபவனாக மு வ எழுத்துலகில் நுழையவில்லை. ''எளிமையும் இனிமையும் கொண்ட அந்தத் தமிழ் நெஞ்சம் தமிழை வளர்த்தது. தமிழால் தான் வயிறு வளர்க்கவில்லை. உண்மையாகவே தமிழை வளர்த்தவர்கள் என்ற பட்டியல் தயாரிக்கப்படும்போது வரலாற்றில் மு. வ. வின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதை

1. க. அன்பழகன்; பேராசிரியர் மு. வ. வின் படைப்பு இலக்கியம்; ப VI–VII முன்னுரை.

2 க.நா. சுப்பிரமணியம், படித்திருக்கிறீர்களா? நேஷனல் புக் டிரஸ்ட்; சென்னை; 1957; ப. 97

யாராலும் மறுக்க முடியாது''[3] என்னும் நெ. து. சுந்தரவடிவேலுவின் கருத்து மு. வ. தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டினை நினைவுகூர்கிறது.

''எளிய, இனிய, தெளிவான தம் நூல்களால் படிப்பவர் நெஞ்சைப் பற்றிப் பிடித்துக் கொண்டு உயிரும் உணர்ச்சியும் ஊட்டித் தமிழின் சிறப்பை நாட்டியவர்''[4] என்று எஸ். ஜே, சாதிக்பாட்சா அவர்கள் கூறும் கூற்று அவர்தம் நூல்களின் சிறப்பை நுவல்கிறது.

தமிழை, உடலாகக் கொண்டு வாழ்ந்தார் மு வ. என்பதைக் கீழ்வரும் க. த. திருநாவுக்கரசு கூற்று அறுதியிட்டு உரைக்கிறது. ''தமிழே அவருடைய உடல். அறமே அவருடைய உயிர். அன்பே அவருடைய நெறி. பண்பே அவருடைய வாழ்க்கை.''[5]

''மக்களிடையே நல்ல தமிழ் நடை பரவ வேண்டுமானால், நல்ல தமிழ் நடையில் நவீனங்களை எழுதுவது சிறந்த முறை என்று அடிக்கடி நான் கருதுவதுண்டு. டாக்டர் மு.வ அவர்கள் இந்தத் துறையில் சிறந்த தமிழ்ப்பணி செய்துள்ளார்''[6] என்று மயிலை. சீனி வேங்கடசாமி மு. வ. வின் நற்றமிழ்ப் பணி குறித்து நல்லதொரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்ப் புதின வளர்ச்சி பற்றி எண்ணும் திறனாய்வாளர்கள் நாடு தன்னுரிமை பெறுவதற்கு முற்பட்ட, அதாவது கி.பி. 1947க்கு முற்பட்ட காலத்தையும், அதற்குப் பிற்பட்ட காலத்தையும் இரு பெருங் கால கட்டங்களாகக் கொண்டு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

''ஆங்கில ஆட்சியின் தாக்கங்கள் யாவும் சமுதாயத்தின் மேல் நிலையிலிருந்த நிலவுடைமையாளர், பிராமண சமூகத்தினர் ஆகியோரையே பாதித்தன. எனவே, ஆங்கில ஆட்சிக் காலத்தில் தோன்றி வளர்ந்த தமிழ்ப் புனைகதைத் துறை 1947ஆம் ஆண்டு வரை அம் மக்கட் பிரிவினரின் வாழ்க்கையையே பிரதிபலித்தது. சுதந்திரத்தின் பின்னர், திட்டமிடப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளினால், சமுதாயத்திற்குக்

---

3. நெ. து சுந்தரவடிவேலு; மு. வ. நினைவுமலர்; ப. 48
4. எஸ்.ஜே. சாதிக்பாட்சா; மு. வ. நினைவுமலர்; ப. 210
5. க. த. திருநாவுக்கரசு; மு. வ. நினைவுமலர்; ப. 94
6. மயிலை. சீனி. வேங்கடசாமி; மு. வ. நினைவுமலர்; ப. 219

கீழ் நிலையிலிருந்தோர் வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. தொடங்கவே அவர்களும் புனைகதைகளில் இடம் பெற்றனர்''[7] என்பர் கா. சிவத்தம்பி. இவர்தம் கூற்றுக்கு ஏற்ப, ஐம்பதுகளில் சிறந்து விளங்கிய புதின ஆசிரியர்களுள் மு. வ. ஒருவர். மு. வ. தன் மொழி, இன உணர்வால் தம்மை வேறுபடுத்திக் கொண்டு, பிற புதின ஆசிரியர்களி னின்றும் சிறப்புற விளங்குகிறார்.

''நான் அறிந்த முதல் நாவலாசிரியர் கல்கி. அப்புறம் அகிலன், நா. பா., மு. வ. ஆகியவர்கள். இவர்களிடம் 'நான் மயங்கிக் கிடந்தது ஒரு காலம். பிறகு இவர்களிடமிருந்து நான் என் வாழ்க்கை அனுபவங்கள், கல்வி, பயிற்சி முதலிய வற்றின் மூலம் மீண்டிருக்கிறேன். அப்புறம் லா. ச. ரா., சுந்தர ராமசாமி, தி. ஜானகிராமன், ஜெயகாந்தன், நீல பத்ம நாபன் முதலியவர்களின் நாவல்களோடு உறவு கொண்டிருந் தேன்.கூடவே மார்க்சியம் பற்றியகல்வியிலும்பயிற்சிபெற்றேன். இப்படியாக ஐம்பதுகள், அறுபதுகளில் நான் மாறியிருக் கிறேன். அறுபதுகளில் சிறப்பாகத் தோற்றம் பெற்ற தி. ஜானகிராமன், ஜெயகாந்தன் முதலியவர்களோடு எழுபது களில் வித்தியாசமான சில நாவலாசிரியர்கள் தோற்றம் பெற் றுள்ளனர்''[8] என்று ஞானி கூறுவார். இவர் கூற்றிலிருந்து மு. வ. தொடக்க காலப் புதின ஆசிரியர்களுள் ஞானியின் மனதைக் கவர்ந்தவராக விளங்குகிறார் என்பது கண்கூடு. ''தமிழ் எழுத்துலகில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக் கியவர் டாக்டர் மு. வரதராசனார்''[9] என்று இரா. மோகன் கூறுவார்.

மேற்கண்ட கூற்றுக்களிலிருந்து மு. வ. வின் தனித்தன்மை புலனாகிறது, அவருடைய புதின படைப்புகள் எளிய, இனிய நடையில் அமைந்து விளங்கியமையை மேற்கண்ட கூற்றுக்கள் வழி அறியலாம். மேலும் முந்தைக்கும் பிந்தைக்கும் மாறு பட்ட, தனித்த புதிய நடையைக் கையாண்ட புதின ஆசிரிய ராக மு. வ. விளங்கியது தெளிவாகிறது.

''எழுத்தாளர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் இடையில் அகப்பட்ட மத்தளமானார் மு வ... தம் காலத்து எழுத்துலகின்

7. கா. சிவத்தம்பி; நாவலும் வாழ்க்கையும்; ப. 11
8. ஞானி; எழுபதுகளில் நாவல்; ப. 31—52
9. இரா. மோகன்; மு. வ. நினைவு மலர்; ப. 171

போக்கிற்கு முற்றும் மாறுபட்ட ஒரு போக்கை மு. வ. வகுத்துக் கொண்டு எழுதியதால் தான் அவருக்கு எழுத்தாளர் களிடமும் பதிப்பாளர்களிடமும் தொடக்க காலத்தில் சிறிதும் ஆதரவு கிடைக்கவில்லை''[10] என அகிலன் கூறுவது இதனால் தான்.

மு. வ. ஒரு சிறந்த தமிழாசிரியராக இருந்தார்; அதே நேரத்தில் ஒரு தலைசிறந்த இலக்கியப் படைப்பாளராகவும் விளங்கினார். அந்தக் கால கட்டத்தில் சிறந்த தமிழாசிரிய ராகவும், சிறந்த புதின இலக்கியப் படைப்பாளராகவும் ஒரு சேர விளங்கியவர் மு. வ. ஒருவரே எனலாம். மு. வ. வெறும் பொழுது போக்கிற்காகவும் பணம் பெறு வதற்காகவும் புதினங்கள் படைத்தார் இல்லை. ஏதாவது ஒரு சீரிய செய்தியை, சிறந்த கருத்தை, உயரிய உண்மையைச் சமுதாயத்திற்கு, சிறப்பாகத் தமிழ் இனத்துக்கு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே மு. வ புதினங்கள் படைத் தார். அந்தப் படைப்பின் ஒவ்வொரு துடிப்பிலும் மொழி வளர்ச்சியையும் வாழ்வையும் கண்ணாக, கருத்தாக அவர் கொண்டதை அந்தப் புதினங்கள்வழி அறியலாம்.

## II கலை-கலைக்காகவே; கலை-வாழ்க்கைக்காகவே

கலை — கலைக்காகவே, கலை — வாழ்க்கைக்காகவே என்னும் இருவேறு கொள்கைகள் கலையுலகில் ஆற்றலோடு விளங்கி வருகின்றன. மார்க்சியச் சிந்தனைகள் இலக்கிய உலகில் இடம் பெறுவதற்கு முன்னர், கலை — கலைக்காகவே என்னும் கொள்கை மேலோங்கி இருந்தது. பின்னர், கலை— வாழ்க்கைக்காகவே என்னும் கொள்கை உறுதி பெற்று வளர லாயிற்று. இரு கொள்கைகளும் எதிர் எதிர் முனையில் இருப்பன போல் தோன்றினும் இரண்டும் இயையும்போதே உண்மை முழுமையடைகிறது; கலைக் கொள்கை நிறை வடைகிறது.

உண்மையில் கலை, கலைக்காகவும் வாழ்க்கைக்காகவும் அமைகின்றது. ஏனெனில் கலைஞன் வாழ்கிறான்; வாழ்கின்ற போது வடிவாக்குகின்றான். வாழ்வு, கால, இட நிகழ்ச்சி களுக்குக் கட்டுப்பட்டது. இந்தக் கட்டுக்களின் தாக்கங்க ளோடு கட்டற்ற கலைக் காட்சிக்கும் கலைஞன் முயல்கிறான்.

10. அகிலன்; மு. வ. நினைவுமலர்; ப. 5

எனவே இரு கொள்கைகளும் இயைந்து அமைவதே ஒரு கலை; நிறை கலை எனலாம்.

கலை— கலைக்காகவே என்று வாதிடுவோர் படைப்பிலும் வாழ்க்கைப் பயனைக் காணலாம். கலை— வாழ்க்கைக்காகவே என்பார் வடிவாக்கத்திலும் கலை நலன்கள் மிளிரக் காண லாம். எனவே, இரு சாராரும் படைக்கும்போது தம்மையறி யாமலே தம் கொள்கைகளிலிருந்து நெகிழ்ந்து போவதைக் காணலாம்.

இப்படி இருவேறு கொள்கைகளைக் கொண்டு படைக்கும் போது பெரும்பாலும் ஓர் உணர்வினராகக் கரைந்து கலந்து போகும் கலைஞர்கள் ஒருபால் இருக்க, இரு கொள்கைகளும் ஒன்றி நிகழ்வதே கலை என்னும் கருத்துப் புலப்படப் படைத் தோரும் சிலருண்டு. அவர்களுள் பேராசிரியர் மு. வ. ஒருவர்.

"இலக்கியம் போதைப் பொருள் அல்ல. அது ஒரு பேராற்றல், மூன்றாம்தர அரசியல்வாதிகளுக்கு இலக்கியம் ஆள் பிடித்துக் கொடுக்க முடியாது. நாம் எதற்காகக் கம்பனை யும் வள்ளுவனையும் இளங்கோவையும் படிக்க வேண்டும்? அதுபோலவே டால்ஸ்டாயையும் ஷேக்ஸ்பியரையும், இவர் களைப் பற்றிய படிப்பிலிருந்து எவற்றை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்? இவையெல்லாம் உயிருள்ள கேள்விகள். இவற்றுக்கு விடை அறிவிப்பதில்தான் நம் இலக்கியத்திற்கான எதிர்காலமும் அடங்கி இருக்கிறது"[11] என்று ஞானி கூறுவார். பேராசிரியர் மு. வ. புதினங்கள் கலை நலம் உடையன. அதே நேரத்தில் அவர் மனிதனுடைய, சிறப்பாக இளந்தமிழ னுடைய வாழ்வையும் வழியையும் நினைந்தே பெரிதும் எழுதி யிருக்கக் காணலாம். ஏனெனில் அவருடைய புதினங்களில் தனித்தன்மையை எண்ணும்போது தமிழர் வாழ்வு, தமிழ் மொழி நிலை என்பனவற்றுள் முதலாவது மேலோங்கி நிற்பதைக் காணலாம். ஐம்பதில் தோன்றிய புதினங்களுள் தமிழ் மொழி — இன உணர்வுக்கு எழுதப் பெற்ற புதினங்கள் மு.வ. வின் புதினங்கள் என்று கூறுவது சரியே.

" 'நாவல்கள்' என்று சொல்லப்படும் நெடுங் கதைகளைத் தூய தமிழில் எழுத முடியும்; நல்ல கருத்துக்களைச் சொல்லும் 'நாவல்'களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று செய்து

11. ஞானி, மு. நூ; ப. 64

காட்டிய பேரறிஞர் அவர்.''[12] ''இருபதாம் நூற்றாண்டில் தமிழைப் பல்வேறு நிலைகளிலும் வளர்த்துத் தமிழர்க்கு என்றென்றும் வழிகாட்டியாக அமைந்தவர் டாக்டர் மு வரத ராசனார் அவர்கள்.''[13] ''அவருடைய நாவல்கள் தமிழ் இலக்கியத் துறையில் ஒரு புதுப்பாதை அமைத்துத் தந் துள்ளன.''[14] புதிய இலக்கியங்களின் வளர்ச்சிதான் 'தமிழை—மொழி'யாகச் செய்யும் என்ற உயர்ந்த உண்மையை உணர்ந்து புதிய இலக்கியங்களை அறிஞர்களும் மாணவர்களும் கற்கவும் துணை நின்றார்கள்.''[15]

மு. வ. வின் புதினங்கள் படிப்பினைப் புதினங்கள் ஆகும். வெறுமனே படிக்க மட்டும் எழுதப் பெற்றவை அல்ல அவை. வாழ்க்கையின் அர்த்தமுள்ள உண்மையை உரைக்கும் தன்மை யில் கலை நயத்தோடு எழுதப் பெற்றவையே மு. வ. வின் புதினங்கள் ஆகும். மு. வ. வின் புதினங்களிலே கலை நயம் உண்டு; வாழ்க்கைப் படிப்பினையுமுண்டு.

## III தமிழ் மொழிச் சிறப்பு-வாழ்வு-வளர்ச்சி

தமிழ் உணர்வை, தமிழ் மொழிச் சிறப்பைத் தம் புதினங் களில் வாய்க்கும் போதெல்லாம் எடுத்துரைத்தும், தாம் சொல்ல வந்த சொற்களை எல்லாம் இனிய, எளிய, தூய தமிழ்ச் சொற்களால் எடுத்துக் கூறியும் தமிழ்மொழிக்கு ஆக் கம் தேடியவர் மு. வ. எதிர்காலத்தில் தமிழ்மொழி வாழ, வளர எழுத்தாளர்கள் எப்படியெல்லாம் சொற்களை அமைத்து இலக்கியம் படைக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக அமைந்தவர் மு. வ. தமிழ்மொழியைக் கற்பதோடு, அறிவியல், வரலாறு பொருளியல், வணிகவியல் முதலான பாடங்களையும் அம்மொழியின்வழி கற்கவேண்டும். அப் போதுதான் 'மெல்லத் தமிழினிச் சாகாது' நல்ல வளர்ச்சி பெறும்; வாழ்வு உறும் என்ற நம்பிக்கையோடு புதின்ங்களைப் படைத்தவர் மு. வ. தமிழில் உள்ள இசைப் பாடல்களை, தமிழ்ப் பாடல் வழி விளங்கும் நாட்டியக் கலையைக் காத்தால்தான் தமிழின் பெருமை நின்று நிலவும் என்பதில் நிலையான எண்ணம் கொண்டவர் மு. வ. இன்னும் எத்துணை புதுப்புது அறிவியல், மெய்ம்மையியல் சிந்தனைகள் எழுந்தாலும் அவை நம் முன்னோர் படைத்த இலக்கியங்களுள்

12. ராணிமுத்து, மு. வ. நினைவுமலர்; ப. 222
13. பதிப்பாசிரியர், மு. வ. நினைவுமலர், பதிப்புரை
14. கோ. வில்வபதி, மு. வ. நினைவுமலர்; ப. 189
15. கண. முத்தையா, மு. வ. நினைவுமலர், ப 168

காணப்படும் சீரிய, நல்ல வளமான **வாழ்வுக்கு வழிகாட்டும்** நற்சிந்தனைகளுக்கு இணையாகா என்ற இலக்கியப் படைப் பாளார்களுள் மு. வ வும் ஒருவர். அவர்தம் புதினங்கள் இத் தகைய வழியின் விளக்கங்களாக அமைந்திருக்குமாற்றைக் கற் போர் அறிவர்.

''தமிழ் இனம் எப்படிப்பட்ட சிந்தனையும் குறிக்கோளும் முயற்சியும் ஒற்றுமையும் கொள்ள வேண்டுமோ, அவற்றை உணர்த்துவதற்குரிய மாந்தர்களைக் கொண்ட களனும் காட்சி யும் கருவும் கருத்தோட்டமும் கொண்ட காதை (புதினங்)க ளைப் படைத்து சமுதாயத்திற்கு வழிகாட்டியவர் அவர்.''[16]. இக்கூற்றை மேலும் வலியுறுத்தும் வகையில், ''மு. வ. பழமைக் கும் புதுமைக்கும் பாலமாய்த் திகழ்ந்தார். பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றுவதிலும் தொன்று தொட்டு வரும் தமிழ்ப் பண்பாடுகளை, நெறிகளைக் காப்பதிலும் அவர் தலை சிறந்து நின்றார். அதே சமயத்தில் இன்றைய உலகப் போக்கை ஒட்டி அறிவுக்கு ஒத்த முறையில் நம் மொழியை வளர்க்க வேண்டும்; நம் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்பவற்றிலும் அவர் முன்னோடியாக விளங்கினார்''[17] என்று கோ. வில்வபதி கூற்று அமைகிறது

புதினங்களில் மேற்குறிப்பிட்ட மொழி நலன்கள் எல்லாம் இயல்பாக அமைந்தன போல் காணப் பெற்றாலும், அவை எல்லாம் மு. வ. வினால் எண்ணி எண்ணிப் பல நாள் இதயத் தில் தேக்கி, தகுந்த வடிவம் தந்து வெளியிடப் பெற்றவையே ஆகும்.

## தமிழும் தமிழரும்

மு. வ. தம் புதினங்களில் எங்கெல்லாம் தமிழைப் பற்றி, தமிழரைப்பற்றித் தம் கருத்தை வெளியிட முடியுமோ அங்கெல் லாம் தயங்காமல் எடுத்துரைப்பார். ''தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழி யாகவும் கல்வி மொழியாகவும் ஆனால் தவிர, தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்ட சபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும். கல்வி மொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும். குறைகள் பல இருக்கலாம். குறைகளுக்காகத் தயங்காமல் ஆட்சி மொழி

16. க. அன்பழகன்; முன் சுட்டியது
17. கோ. வில்வபதி; மு.நூ; ப. 188

யாகவும் கல்வி மொழியாகவும் ஆக்க வேண்டும் என்று உணர்ந்திடு. இவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் போதாது. உன்னால் ஆனவரையில் செய். கடிதம், மணியார்டர், விளம்பரப் பலகை, விற்பனைச் சீட்டு (Bill) முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. மராத்தியர், குசராத்தியர் முதலானவர்களிடம் இந்த வழக்கம் உள்ளது. இவற்றைத் தமிழில் எழுதினால், தபால்காரர், வியாபாரிகள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழ் படிக்கச் செய்வதுபோல் ஆகும். இல்லையானால் அவர்கள் தமிழை மறக்கும்படிச் செய்வதுபோல் ஆகும். நீ யாருடனும் தமிழிலேயே பேசு(உலகத்தார் எல்லாரும் அவரவர் தாய்மொழியில்தான் பேசுகிறார்கள்). தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டுமே பிற மொழிகளில் பேசு. திருமணம், வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து''[18] என்று மு. வ. 'தம்பிக்கு' என்னும் தம்நூலில் குறிப்பிடுவார்.

மொழி என்றும் வாழும் உயிருள்ள ஒன்று; நாளும் வளர்ந்து, நாட்டை வாழ்விக்கும் ஒன்று மொழிதான் அனைத்துக்கும் அடிப்படையான ஒன்று. ''மொழி உண்மையாக உள்ள ஒன்று; அது கண்ணுக்குத் தெரியும்; காதுக்கும் தெரியும்; மூளைக்கும் தெரியும். மொழியால் இனம் அமைவதும் நாடு அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். இவற்றையெல்லாம் பொய் என்றும் வேண்டாதவை என்றும் உபதேசம் செய்கிறவர்கள், நம்மைப்பற்றி நல்லெண்ணம் இல்லாதவர்கள். அவர்களுக்கு நம்மிடம் வேலை இல்லை''[19] என்று மு.வ. 'தம்பிக்கு' என்னும் அதே நூலில் கருத்துதெரிவிப்பார். மேலும் இதேநூலில் மொழி பற்றித்தம் கருத்தை வலியுறுத்த விழையும் இவர், ''மொழி மனிதனுடைய உடலில் ஊறாததாக இருக்கலாம்; ஆனால் அவனுடைய மூளையை உருவாக்கியது அதுவே. அவன் எண்ணும் எண்ணம், பேசும்பேச்சு, எழுதும் எழுத்து மூன்றிலும் மொழி உள்ளது; அதன் செல்வாக்கு உள்ளது. மொழி வேறுபாடு குழந்தையின் தொட்டிலிலேயே தொடங்குவது; மரணப் படுக்கை வரையில் தொடர்ந்து வருவது''[20] என்று கருத்துத் தெரிவிப்பார். இவ்வாறான மொழியுணர்வு அவர் உள்ளத்தில் ஊற்றாய்க் கிடந்து அவ்வப்போது அவர் எழுத்துக்களில் குமிழியிடக் காணலாம்.

---

18 மு. வ.; தம்பிக்கு; ப. 68
19 மேற்படி; ப. 28 – 29
20 மேற்படி; ப. 35

மொழியின் தனித்தன்மையை, தமிழ்மொழியின் உயர்வை வாய்க்கும் போதெல்லாம் எழுதிச் செல்லுதல் மு. வ வின் இயல்பு ஆகும். ''கள்ளோ? காவியமோ?'' கதைத் தலைவன் அருளப்பன் பம்பாயில் நிகழ்ந்த கீழ்த்திசை மொழிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு,'வடஇந்திய மொழிகளின் அடிப் படை' என்னும் ஆய்வுத் தலைப்பில் வடநாட்டு மொழி களையும் தென்திராவிட மொழிகளையும் சிறப்பாகத் தமிழை யும் ஒப்பிட்டு அக் கருத்தரங்கில் சொற்பொழிவு ஆற்றுகிறான்.

''மொழியின் உயிர், சொல் தொடர் அமைப்பே; மொழி யின் உடல், சொற்களின் கூட்டம்... அதனால் அறிவது வட இந்திய மொழிகளின் உடல் ஐரோப்பிய மொழிச் சொற்கள். வடஇந்திய மொழிகளின் உயிர் தமிழ் அமைப்பு, இந்தி முதலான மொழிகள் ஐரோப்பிய இனம் அல்ல,தமிழ் இனம்''[21] என்று மு. வ. 'கள்ளோ? காவியமோ?' என்னும் அந்தப் புதினத்தில் அருளப்பன் பாத்திரத்தின் வழி, தமிழ் மொழி முன்னைப் பழமைக்கும் பழமை என்பதை மனதிற் கொண்டு. அம்மொழியின் அமைப்போடு வடஇந்திய மொழிகளின் அமைப் பும் ஒத்திருப்பதைக் காரணத்துடன் காட்டுகிறார். மேலும் இதுபற்றி அருளப்பன் வாதிக்கையில், 'ஜெர்மன் மொழி, பிரெஞ்சுமொழி, ஆங்கிலமொழி,லத்தீன்மொழி,கிரேக்கமொழி சமஸ்கிருதமொழி இவைகளில் ஒத்த பொருளுடைய ஐந்து வாக்கியங்கள் எழுதச் சொல்லி அந்தப் பொருளுடைய இந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி மொழிகளின் வாக்கியங்களை யும் எழுதச் சொன்னேன். மேற் சொன்னவற்றோடு இவற்றை ஒப்பிடச் சொன்னேன். ஒப்பிட்ட பிறகு ஐரோப்பிய மொழி களுக்கும் இந்த வடஇந்திய மொழிகளுக்கும் உள்ள வாக்கிய அமைப்பு வேறுபாட்டை அவர் ஒப்புக் கொண்டார். தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளின் அந்தப் பொருள் தரும் வாக்கியங்களை எழுதினேன். வாக்கிய அமைப்பைச் சொன்னேன்... ஆகையால் சொற்களைப் பற்றி ஆராயக் கூடாது. சொக்காய் மாறுவது போலச் சொற்கள் மாறும்''[22] என்று கூறுகிறார். வடஇந்திய மொழிகள் தமிழ்மொழியோடு அமைப்பில் ஒத்திருப்பதனால், இதற்கும் அம்மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை புலப்படுகிறது என்கிறார். அம்மொழிகளில் உள்ள சொற்கள் தாம் வேறுபடுமே தவிர, அமைப்பு வேறு படாது. ''சமஸ்கிருதம், அரபி முதலானவற்றின் சொற்

21 மு. வ ; கள்ளோ? காவியமோ?; ப.186

22 மேற்படி; ப. 187

களைப் பெற்று, வேறு மொழிபோல் வாழ்கின்றது (இந்தி). நீங்கள் அதை ஐரோப்பிய மொழிகளோடு சேர்த்து எண்ணு கிறீர்கள். உண்மை நிலை தெரிந்து கொள்வதற்கு ஒரு காலம் வரும் என்றேன்''[23] என்று, அருளப்பன் சொற்கள் மூலம் தமிழுக்கும் வட இந்திய மொழிகளுக்குமுள்ள ஒற்றுமையைக் கூறித் தமிழ்ச்சிறப்பை உணர்த்துவர் மு. வ.

ஒவ்வொருவரும் அவர்அவர்தம் மொழியில் சிந்தித்து, தம் எண்ணத்தை அம்மொழியில் வெளியிட்டாலே சிறப்போடு ஆற்றலோடு, அது விளங்கும். பிறமொழிக் கல்வியினால் தமிழர்தம் சிந்தனை ஆற்றல் சிதைந்து போகிறது என்கிறார் மு. வ. இதை 'நெஞ்சில் ஒருமுள்' என்ற புதினத்தில் உரைக் கிறார்.

''மற்ற எல்ல நாடுகளிலும் மாணவர்கள் தாய்மொழியில் படிக்கிறார்கள். சிந்திக்கும் வல்லமை பெறுகிறார்கள். இந்த நாட்டில் ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருப்பதால் சிந்திக்கும் ஆற்றல் இளமையிலேயே கெட்டுப் போகிறது. அந்நிய மொழி யில் சொல்லும் வல்லமையும் எழுதும் வல்லமையும் பெற வேண்டுமே என்ற கவலையே எங்கள் காலத்தைக் கொள்ளை கொள்கிறது. பொருளில் அறிவு பதியாமல் சொற்களிலேயே மிதந்து போகிறது. கடைசியில் எந்த வல்லமையும் இல்லாமல் பட்டத்தை மட்டும் பெற்று வெளியே வருகிறோம்.''[24]

நம்மவரிடையே இன்று பெரும்பான்மையில் காணப் பெறும் இந்தக் குறையை மு. வ. தெளிவு பெற 'நெஞ்சில் ஒரு முள்' ளில் கூறியிருப்பது நினைக்கத்தகுந்தது. 'அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதை' போல நம்மவர்களில் பெரும் பாலோர் நம் தாய்மொழியிலும் வல்லமை இல்லாது உழல்வது வருந்தத் தக்கது என்பது அவர் கருத்து ஆகும். ஆம் ஒவ் வொருவனும் அவனவன் தாய்மொழியில் வல்லமை பெற்றிருத் தல் மிகமிக இன்றியமையாததன்றோ? இன்று உலக நாடு களிடையே சிறந்த வளர்ச்சி பெற்றிருக்கும் ரஷ்யா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகள் தத்தம் தாய்மொழியில் மிகுந்த கவனம் செலுத்துவது அவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்திருக்கிறதன்றோ? இதைப் போல் நாமும் நம் தாய் மொழி மீது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

---

23 மேற்படி; ப 195
24 மு. வ. நெஞ்சில் ஒரு முள்; ப. 374

"அறிவு வளர்ச்சிக்காகத் தாய்மொழியின் எழுத்துக்களைக் கற்று, சொற்களைக் கற்று, வாக்கியங்களை எழுதக் கற்பதே பெருமுயற்சியாக இருக்கிறது. ஆனால் ஒரு நன்மை. தாய்மொழியில் பேசுவது குழந்தைப் பருவத்திலிருந்து இயல்பாக அமைந்துவிடுகிறது. அதனால் தாய்மொழியில் எழுதுவதும் எளிதாகிறது. அதன் வாயிலாகவே உலகத்து அறிவை எல்லாம் பெற வழி உண்டு"[25] என்று 'நெஞ்சில் ஒரு முள்' புதினத்தில் தாய்மொழிக் கல்வியின் நன்மையை எடுத்துரைக்கிறார் மு.வ.

தமிழர் பலர் தமிழில் போதிய அறிவு இல்லையென்றாலும் கவலைப் படுவதில்லை, ஆயின் ஆங்கிலத்தில் போதிய அறிவு இல்லை யென்றாலோ அரற்றுகின்றனர். தமிழிலன்றி ஆங்கிலத்தில் பிறர் பேசினரால் அவரே அறிவுடையவர் என்று எண்ணுகின்றனர். அதுபோல அறிவுடையவராகத் தம்மையும் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற அதிவிருப்பில் தாமும் ஆங்கிலத்தில் பேச முனைகின்றனர். தமிழில் பேசும் போதும் எழுதும் போதும் நிகழ்கிற பிழைகளுக்கு நம்மவரில் பெரும்பாலோர் வருந்துவதில்லை, ஆயின் அப்பிழையே ஆங்கிலத்தில் நிகழ்ந்துவிட்டால் அதற்காகப் பெரிதும் வருந்துகின்றனர். அப் பிழை மேலும் தொடராமல் இருக்க முயல்கின்றனர். இந்தத் தவறான போக்கைக் கண்டிக்கும் வகையில் தம் புதினங்களில் மு. வ. எழுதியிருக்கிறார்.

'கள்ளோ? காவியமோ?' புதினத்தில் மங்கை என்னும் பாத்திரத்தோடு மார்வாரிப்பெண் உரையாடும் போது மு. வ. அவர்கள் கீழ் வருமாறு எழுதுகிறார்.

"நானும் (மார்வாரி) பார்த்திருக்கிறேன்; தமிழர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள், எங்கள் பேச்சை நீங்கள் நன்றாகக் கற்றுக் கொள்கிறீர்கள். ஆனால் உங்கள் தாய் மொழியே உங்களுக்கு நன்றாகத் தெரியவில்லையே."[26]

மேற்கண்டவாறு மங்கை மூலம் தம்கருத்தை வெளியிட்ட மு. வ. அதே புதினத்தில் அருளப்பன் என்ற பாத்திரத்தின் வழி கீழ்வருமாறும் பேசுகிறார்.

---

25 மேற்படி; ப. 271 — 272

26 மு. வ. கள்ளோ? காவியமோ? ப. 156

''தமிழ் பேசித் தமிழ் நாட்டில் மதிப்போடு வாழ வழி இல்லாத போது, என்ன செய்வது? இந்தி கற்க வேண்டியிருக்கிறது என்றார்'இந்திப் புலவர்.''[27]

மேற்கண்ட வரிகள் மு. வ. வின் ஏக்கத்தைப் புலப்படுத்தக் காணலாம், ஆம். தமிழ்நாட்டில் தமிழ் மட்டும் பேசி மதிப்போடு வாழ முடியவில்லையே என ஏங்கும் சில ஏழை தமிழ்நெஞ்சங்களின் ஏக்கத்தை மு. வ. ஓர் இந்திப் புலவர் வாயிலாகக் கூறக் காணலாம்.

ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என இன்றும் பல தமிழ் நெஞ்சங்கள் ஏங்குகின்றன. அன்றைய நாளில் ஆங்கிலம் படிப்பதும் பேசுவதும் இன்றைய நாளினும் மிகுதியாகப் பெருமையாக எண்ணப் பெற்றது. ஆங்கிலம் தெரியாதவர்கள் மிகவும் தாழ்வு மனப்பான்மையோடு வருந்தும் வருத்தத்தைப் போக்கும் வகையில் மு. வ. 'மண்குடிசை'யில் கீழ்வருமாறு கூறுகிறார்.

''தடுமாறுவது பற்றித் தயங்க வேண்டா, அது இயற்கை. எவ்வளவு படித்தாலும் ஆங்கிலம் நம் தாய்மொழி அல்ல. தாய்மொழி ஒன்றில்தான் தடுமாறாமல் பேச முடியும். போப், கால்டுவெல் முதலானவர்கள் நிரம்பத் தமிழ் படித்தார்கள், அவர்களும் தமிழில் தடுமாறியிருப்பார்கள், அது இயற்கை.''[28]

இவ் வரிகள்மூலம் தாய்மொழியோடு பிறமொழி கற்பது தவறல்ல என்று கருதுவதை அறிகிறோம். அதே நேரத்தில் பிறமொழியில் வல்லமை வரவில்லையே என ஏங்காமல் முயல வேண்டும் என்பதை வலியுறுத்துவதையும் அறிகிறோம். ஆனால், தம் தாய்மொழியை விடுத்துப் பிறமொழிக் கல்வியிலே காலத்தை வீணாக்குவது குறித்து வருந்துகிறார் மு. வ. அரிய உழைப்பும், பெறுவதற்கரிய இளமையும்,காலமும் வீணே கழிவது குறித்து அவர் உளம் வெதும்புகிறார்.

''என் உள்ளத்தில் இருந்ததை ஒளிக்காமல் பேசியதைக் கேட்ட நண்பன், 'நீ சொன்னதெல்லாம் சரி. அறிவுக் கூர்மை தவிர வேறொன்றும் இக் காலத்துக் கல்வி அளித்ததாகக் காணோம். வீண் செருக்கை வளர்க்காமல் இருந்தால் போதும்.

---

27 மேற்படி ; ப. 192

28 மு. வ. மண்குடிசை; ப. 151

தாய்மொழியில் கற்றிருந்தால் இவ்வளவு காலத்தையும் மூளை உழைப்பையும் திரும்பத் திரும்ப உதவாப் பாடங்களுக்குச் செலவாக்கியிருக்க வேண்டியதில்லை''[29] என்று 'கள்ளோ? காவியமோ? புதினத்தில் மு வ. வீணாக இக்காலத்துக் கல்வியில் நாம் மூளை உழைப்பை இழந்து தவிக்கும் துன்ப நிலையை உரைக்கிறார்.

தமிழோடு தொடர்புடைய எச் செய்தியும் மு. வ. விற்குப் பெரிய மன மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிக்கும் தன்மையது. ஆம் எங்கெல்லாம் தமிழுக்கு ஏற்றம் அளிக்க இயலுமோ, அங்கெல்லாம் தயங்காமல் தமிழுக்கு ஏற்றம் தந்து இனிது மகிழ்பவர் மு.வ 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதை வெறும் சொற்களில் அன்றி, செயலில் காணத் துடித்த தூய தமிழ் நெஞ்சமே மு. வ. வின் நெஞ்சமாகும்.

'தாயுமானவர் தெரு' என்ற பெயரைப் படித்தபோது அப்படியே நின்றேன். தமிழ்நாட்டின் மிகப்பெரிய ஞானி ஒருவருடைய பெயரை இந்த ஊரில் இந்தத் தெருவுக்கு சூட்டு வழங்குகிறார்களே என்று மகிழ்ந்தேன்''[30] என்று மு. வ. 'மலர்விழி' என்ற புதினத்தில் ஒரு பாத்திரத்தின் வாயிலாகக் கூறிமகிழ்கிறார். மு வ. உள்ளம் எந்த அளவுக்குத் தமிழ்மீதும் தமிழ்ச் சான்றோர் மீதும் பற்று கொண்டிருக்கிறது என்பதை இதன்வழி நாம் அறிகிறோம்.

## தமிழில் இசையும் கூத்தும்

தமிழிசை மிகப் பழமையானது; சிலப்பதிகார காலத்திற்கும் முந்தியது; குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு சுரங்களைத் தனக்கென உரிமையாகக் கொண்டது; குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப் பண், நெய்தல்பண், பாலைப்பண் என உள்ளத்து உணர்ச்சிக்கும் பருவப் பாங்கிற்கும் ஏற்ற இயற்கைப் பண்களைக் கொண்டது. பதிற்றுப்பத்து, பரிபாடல்கள் பண்ணின்வழி அமைந்திருக்கக் காணலாம். இவற்றின் அடிப்படையில் எழுந்ததே பின்வரும் 'நெஞ்சில் ஒரு முள்'. புதினத்தில் காணப்படும் தமிழிசை பற்றிய உரையாடல் ஆகும்.

---

29 மு. வ. ; கள்ளோ? காவியமோ?; ப. 38

30 மு.வ. மலர்விழி; ப. 201

''உண்மைதான் அம்மா. எங்கள் இசை ஆசிரியர் அடிக்கடி சொல்வார். கருநாடக இசைக்கே பிறப்பிடம் தேவார இசை என்று சொல்வார். தமிழ் நாட்டின் பெருமை அதில் இருக்கிறதாம்' என்றாள்.

'திருத்தாண்டகம் தெரிந்தால் பாடலாமே' என்றேன். 'முன்னம் அவனுடைய' என்று பாடத் தொடங்கினாள். என் உடல் சிலிர்த்தது. பாட்டு முடியும் வரையில் என் உயிரை உருக்கி ஓடச் செய்வது போலிருந்தது. அதற்கு அடுத்தாற் போல்'பாராதி விண் அனைத்தும்' என்ற ஒரு நல்ல பாட்டை ராகமாலிகாவில் பாடினாள். உயர்ந்த கருத்து அமைந்திருந்தது கேட்டு மகிழ்ந்தேன். பாட்டு முடிந்ததும், 'இது யார் பாடியது?' என்றேன்.

'தாயுமானவர்' என்றாள்''.[31]

இவ் வரிகள் மு.வ. விற்குத் தமிழிசை மீதிருந்த உயர்வான எண்ணத்தையும், உறுதியான பற்றினையும் எடுத்தியம்புகின்றன. மு. வ. விற்கு உண்மையிலே, தமிழ்ப் பக்தி,இலக்கிய அறிவு சிறந்து இருந்தது. தாயுமானவர் பாடல்கள் மீது அவருக்குத் தனிப்பெரும் ஈடுபாடு இருந்தது. அந்தத் தனிப் பெரும் ஈடுபாட்டை அவர் புதினங்களில் பல இடங்களில் காணலாம்.

தமிழ்மொழியில் பாடல்,ஆடல் நிகழவில்லையே எனப்பெரிதும் ஏங்குகிறார். 'மண் குடிசை'(ப.157)யில் ஒரு வங்காளியின் வாயிலாக, தாய் மொழியில்தான் பாட்டுக்கள் உள்ளத்தைத் தொடும் என்ற உண்மையை வரவழைத்து, தமிழில் அப்படிப் பட்ட பாட்டுக்கள் எண்ணற்றவை உண்டு என்பதைக் கதை மாந்தர் வழி நிலை நாட்டுகிறார். 'மலர்விழி' (ப.136)யில் இந்தவிதச் சிந்தனையை அவர் பெரிதும் வலியுறுத்துகிறார்.

'நெஞ்சில் ஒரு முள்'(ப.50)ளில், அமரகவி பாரதியாரின் 'சின்னஞ்சிறு கிளியே' என்ற பாட்டும், அப்பர் பெருமானின் 'முன்னம் அவனுடைய' என்ற பாட்டும் அபிநயம் செய்யப் பெறுகின்றன.

---

31 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 335

கோயிலில் இறைவன் திருமுன்னர், தமிழ்ப்பாடல் பாடப் பெறும் காட்சி 'கயமை' (ப.165)யில் இடம் பெறக் காணலாம்.

குடும்பம் குடும்பமாகத் தமிழ் இசை பயின்று பாட வேண்டும் என்பது அவர் விருப்பம். இல்லத்தில் நடைபெறும் விழாக்களில் எல்லாம் உறவினர்களையும் நண்பர்களையும் உடன் வைத்துக் கொண்டு தெய்வத் தமிழ்ப் பாடல்களைப் பாடுவது அவர்தம் இயல்பு. இந்த விழைவு 'மலர்விழி' (ப.209) கனகாவின் குடும்பத்தில் உருப்பெற்றிருப்பதைக் காணலாம்.

''கனகாவின் வாய் எந்த நேரமும் நல்ல பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தது. அவள் தம்பி ஆராவமுதும் அவற்றை அரைகுறையாகக் கற்று எப்படியோ தாறுமாறாகப் பாடிக் கொண்டு இருந்தான். இரண்டு பேரும் சேர்ந்து தாயையும் தகப்பனையும் உட்கார்ந்து பாடும்படிச் செய்தார்கள். அவர் களும் சின்னப் பிள்ளைகள் போல் உட்கார்ந்து பாடினார்கள். என்னையும் கனகா விடவில்லை. ஒரு பாட்டாவது பாடும்படி என் கையைப் பிடித்துக் கொண்டும் கன்னத்தைத் தடவிக் கொண்டும் வற்புறுத்தினாள். வேறு வழியின்றி நானும் அருட் பாவிலிருந்து ஒரு விருத்தம் பாடினேன்''[32] என்பது சான்று.

## IV தமிழ் உரைநடை வளர்ச்சி

'நூறாண்டுத் தமிழ் நாவல்' என்ற நூலின் பொருளடக் கத்தை நோக்கினால் ஓர் உண்மை புலனாகும். 1879 லிருந்து 1910 வரை ஏறக்குறைய தொடக்க காலமாகிய 30 ஆண்டுகள் பண்பாடு,சமய உணர்வுகளையே கதைக் கருப்பொருள்களாகக் கொண்டு புதினங்கள் தோன்றின என்றும் அதன் பின்னர் ஓர் இருபத்தைந்து ஆண்டுகள் அதாவது 1935 வரை, சமுதாய விமர்சனங்களும் தேசிய உணர்வுகளும் பொழுது போக்கையே பொருளாகக் கொண்ட புதினங்களும் தமிழகத்தில் எழுந்தன என்றும் அதன்வழி அறியலாம்.

எழில் முதல்வன் கணிப்புப்படி கே.எஸ். வெங்கடரமணி யின் 'தேசபக்தன் கந்தன்' என்ற புதினம் மட்டும்தான் தேசியப் புதினம் என்ற பெயருக்குப் பொருத்தமானது என்பது ஏற்கத் தக்கதே. இக்காலக் கட்டத்தில் தமிழில் தேசியப் புதினம்

---

32 மு. வ.; மலர்விழி; ப. 233

தோன்றாமைக்குக் காரணங்களாக இரண்டை அவர் கூறு கிறார். ஒன்று புதினத்தின் ஆற்றலைப் புரிந்துகொள்ளாமல், போற்றாமல் புதின வடிவத்தின்பால் ஈடுபாடு கொண்டமை, மற்றொன்று, தேசியஉணர்வை எழுப்ப அஞ்சினமை என்று அவர் கூறுகிறார். அவர்தம் கூற்றுப் பொருத்தமாகவே படுகிறது.

அடுத்த காலக்கட்டத்தில் அதாவது 1936 முதல் 1960 வரை, ஏறக்குறைய 25 ஆண்டுகளில் வெளிவந்த புதினங்கள் கடந்த காலப் பெருமையினையும் தற்காலச் சமூகச் சிக்கல் களையும் கதைக் கருப்பொருட்களாகக் கொண்டிருந்தன. அடுத்து 1961 லிருந்து 1977 வரை வெளிவந்த புதினங்களில் இலட்சிய நோக்கு, புரட்சிக் கொள்கை ஆகியன கதைக்கருப் பொருட்களில் முதலிடம் பெற்றன. விடுதலை பெற்றதும் மானுடம் முழுவிடுதலை பெற வேண்டும் என்ற நோக்கத் திலே இவ்வகைக் கதைக் கருப்பொருட்கள் புதினங்களில் உருக் கொண்டன.

1941 லிருந்து 1961 வரை இடைப்பட்ட காலக்கட்டத்தின் மையமாக மு. வ. வின் புதினங்கள் அமைந்தன. 1961 க்குப் பின் எழுந்த இலட்சிய நோக்கு மற்றும் நல்ல தமிழ்நடை கொண்ட பல புதினங்களுக்கு முன்னோடியாக இவர்தம் புதினங்கள் அமைந்தன.

மு. வ. ஒரு சிறந்த புதினவாசிரியராகத் தாம் வாழ்ந்த காலத்திலேயே தம்மை நிலைநாட்டிக் கொண்டவர். 1949க்கு முன்னர்த் தோன்றிய புதினங்களின் பெயர், கதைக் கருப் பொருட்களையும், 1961 க்குப் பின்னர்த் தோன்றிய புதினங் களின் பெயர், கதைக் கருப் பொருட்களையும் ஒப்பிட்டால் ஓருண்மை புலனாகும். மு. வ. கைக் கொண்ட இலட்சிய நோக்கு, புதின நடைப் புரட்சி, கதைமாந்தர் பெயரிடுதல் முதலியன இவர்தம் காலத்தை ஒட்டித் தோன்றிய பிற எழுத்தாளர் புதினங்களிலும் எதிரொளித்தன. இதனால் மு.வ. ஒரு செல்வாக்குப் பெற்ற புதினவாசிரியராக விளங்கினார் என்பது புலனாகும்.

1948 ல் வெளியான 'ராணி சீலாபதி', 'நாட்டியக்காரி', 'சிவகாமியின் சபதம்', 'கீதாமோகன்', 'சாவித்திரி', 'சித்திரா குணசுந்தரம் அல்லது மித்திர துரோகம்' முதலிய புதினங்

கள், பெயர் வைப்பில் அக்கால நெறியைப் பின்பற்றியவை எனலாம். இவற்றிலிருந்து குயிலனின் 'புரட்சிப் பெண்', நடேச ஐயரின் 'நம்பினார் கெடுவதில்லை', மாயாவியின் 'மறுமலர்ச்சி', சுத்தானந்த பாரதியின் 'கலைக்கோயில்', சேது ராமனின் 'என் கண்ணீர்' முதலியனவற்றை விதிவிலக்குப் புதினங்களாகக் கொள்ளலாம். 1948 முதல் 1961 வரை வெளிவந்த புதினங்களில் தூய தமிழ்ச் சொற்களைப் பெயர்களாகக் கொண்டு அமைந்தவை மிகுதியாம். இந்தவித மாறுதலுக்குக் காரணம் மு. வ. வின் செல்வாக்கு என்பது குறிப்பிடத் தக்கது.

கோவி. மணிசேகரனின் 'பொற்காலப் பூம்பாவை', ஜகதீஸின் 'மணக்கும் மல்லிகா', சண்முகனின் 'காத்திருப்பேன் உனக்காக', சந்திரமோகனின்'காணாமல் போன கற்புக்கரசி', சாமியின் 'காணாமல் போன கன்னி', ஆர். வி. யின் 'கிளையில் இரு கிளிகள்', 'காவேரி', மேதாவியின் 'கைதியை மணந்த காவல்காரி', வெங்கடேசனின் நல்ல முடிவு', வாசவனின் 'நீதி பிழைத்தது', கா. மு. ஷெரீப்பின் 'விதியை வெல்வோம்', சண்முகசுந்தரத்தின் 'தூய உள்ளம்', 'பள்ளிநட்பு', கல்யாணி யின் 'புகழ்ஏணி', நாரண. துரைக் கண்ணனின் 'உயிரோ வியம்', ஆர். சண்முக சுந்தரத்தின் 'அன்பு உள்ளம்', ரெங்க மணியின் 'இதயத்தில் ஓர் இடம்', சீனிவாசனின் 'சிறுதுளி பெருவெள்ளம்', வெங்கடேசனின் 'காலவெள்ளம்' முதலிய புதினங்கள் தூய தமிழ்ச் சொற்களைப் பெயர்களாகக் கொண்டு அமைந்தமை மு. வ. புதினங்கள் ஏற்படுத்திய பாதிப்பே எனலாம்.

இந்தப் பாதிப்புக்கு உட்படாத சில விதிவிலக்கான புதினங் களும் எழுந்தன என்பதில் மறுப்பில்லை. சுவாமி துர்க்கா தாசின் 'சிங்கப்பூர் சிங்காரி', பாண்டியனின் 'குமரி கோலா லம்பூர்', சண்முக சுந்தரத்தின் 'சந்தியா' என விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் மிகச் சில புதினங்கள் வேறுபட்டு எழுந்தன. இவற்றுள் 'சந்தியா' சரத் சந்திரர் புதினத்தின் மொழி பெயர்ப்பு என்பது அறியத் தகுந்தது.

தலைப்பை இடுதலில் மட்டுமல்லாமல் கதைக் கருப் பொருட்களில் இலட்சியப் போக்கையும், புரட்சிக் கொள்கை களையும் புதினங்களில் மிகுதியாக இடம்பெற வைத்ததில் மு.வ.புதினங்களுக்கும் பெரும்பங்கு உண்டு என்பது குறிப்பிடத் தகுந்தது. அவருடைய இலட்சிய நோக்கும் புரட்சிக் கொள்கை யும் வெறும் பேச்சளவில், எழுத்தளவில் நின்றுவிடும்

தன்மையனவல்ல. அவை செயல் வடிவம் பெறத் தகுதி யுடையன; மக்களால் ஒப்புக் கொள்ளத் தக்கன. அவர் வாழ்க்கைக்கு ஏற்புடையனவற்றையே கதைக் கருப் பொருட் களாகக் கொண்டார். எங்கோ கற்பனை உலகில் மிதந்து கொண்டு இலட்சிய நோக்குகளையும் புரட்சிக் கொள்கைகளை யும் அள்ளித் தெளித்தவரல்லர். தான் எழுப்பிக் கொள்ளும் ஒவ்வொரு சிக்கல்களுக்கும் இலக்கியப் படைப்பாசிரியன் என்ற நிலையில் அந்தந்தப் பாத்திரங்களின் கால, இட, மனச்சூழ் நிலைகளிலிருந்து தீர்வு கண்டெழுதுவார். இதுவும் அவருடைய புதினங்கள் ஒரு சிறப்பான நிலையை எய்துவதற்குக் காரண மாக அமைந்தது எனலாம்.

இங்கு, ''காலந்தோறும் ஏற்படும் புதிய வளர்ச்சிகளை யெல்லாம் ஏற்றுத் தனதாக்கிக் கொண்டு வளர்ந்துவரும் தமிழ்மொழிக்கு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தமது படைப்பு முயற்சிகளாலும் பயிற்று முறையில் காட்டிய ஊக்கத்தாலும் தகர்த்து, நம் தாய்மொழி தனது இயற்கை வழியில் வளர்ச்சியுற உதவிய டாக்டர் மு. வ. அவர்களைத் தமிழுக்கு விடுதலை தந்தவர் என்று போற்றுவது முற்றிலும் பொருத்தமேயாம்''[33] என்னும் கண. முத்தையா கூற்று நினையத்தகுந்ததாகும் ஆம் மு. வ. தமிழ்ப் புதினங்களில் தமிழோடு புரியாத பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதிவந்த காலக்கட்டத்தில் தூயதமிழ்ச் சொற்களை அமைத்து, வேண்டிய மிக இன்றியமையாத இடங்களில் மட்டும் மக்களிடம் வழங்கப் பெறும் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதி, தமிழ்ப்புதின இலக்கிய உலகிற்கு ஒரு திருப்புமுனை தரும் படைப்பாளராக உலவினார். புதினங்களில் உரைநடை எழுதுவதில் பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலப்பது மட்டுமல்லாமல், படிப் பவர் தலை சுழலும்வகை நீண்ட, நெடிய தொடர்களை எழுதிவந்த மரபையும் உடைத்தெறிந்து சிறிய சிறிய தொடர் களை வைத்துப் புதினம் புனைந்தவர் மு. வ.

நீண்ட 'நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் உடைய தமிழ் உரைநடை சீர்கெட்டிருந்த நிலையில், குறிப்பாகப் புதினங் களில் அவை புரையோடிப் போயிருந்த நிலையில் மு. வ. உரைநடை வளர்ச்சிக்குப் புத்துணர்ச்சி எழுப்பினார் எனலாம்.

---

33 கண. முத்தையா; மு.நூ.; ப. 170

தமிழில் உரைநடை நூல்கள் இருந்த செய்தியை நாம் தொல்காப்பியம் வழி அறிகிறோம். உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகாரத்தைக் குறிக்கிறோம். ஆயின் நல்ல உரைநடை நூல்களையும், அந் நல்ல உரைநடை தாங்கிய கதை, கட்டுரை, புதினங்களையும் இந் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்த நம்மனோர் வழங்கினரா என்றால், இல்லை என்பதே விடை ஆகும். இத்தகு காலக்கட்டத்தில் ஒரு தமிழாசிரியர் புதின இலக்கியப் படைப்பாசிரியராகவும் இருந்த நிலையில் மு. வ. மிக அழகான எளிய, இனிய சொற்களைப் பெய்து சிறிய சொற்றொடர்களில் புதினம் புனைந்து தமிழுக்கு நல்லாக்கம் தேடினார்.

இறையனார் களவியல் உரை என்ற நூலும், இளம்பூரணர் முதலிய மிகச் சிறந்த உரையாசிரியர்களும் உலவிய இத் தமிழுலகில் உரைநடைக்கு ஏற்றம் அழிந்திருந்த காலத்தில் ஏணியாக இருந்தவர் மு. வ. ஆவர்.

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல் லாகும்மே''
(தொல், சொல், எச்சவியல் நூற்பா 5)

என்னும் தொல்காப்பிய நூற்பா, வடமொழி பிறமொழிகளை ஆண்டதுபோல் தமிழ் மொழியை ஆள முடியாமல் இருந்த நிலையைக் காட்டுகிறது. எனினும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால எழுத்தாளர்கள் இதனை நினைந்தார் இல்லை. அதனால்தான் திருமறைக்காட்டை வேதாரண்யம் என்றும், பழமலையை விருத்தாசலம் என்றும், திருவரங்கத்தை ஸ்ரீரங்கம் என்றும், ஏழுமலையை ஸப்தகிரி என்றும் எழுதி வந்தனர். தானாக உலவி வந்த தமிழை, வடமொழித் துணையோடுதான் இனி வாழ முடியும் என்ற ஒரு மாயையைத் தோற்றுவித்தனர். இத்தகைய நிலையிலே மறைமலையடிகள் என்னும் பெரியார் தனித் தமிழ் இயக்கம் என்ற ஓர் இயக்கத்தை ஏற்படுத்தி, விழிப்புணர்ச்சியை எழுப்பினார். சுவாமி வேதாசலம் எனும் தம் பெயரை மறைமலையடிகள் எனத் தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டார்.

அவரோடு பணி செய்த சூரிய நாராயண சாஸ்திரியாரும் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் எனத் தூய தமிழில் அமைத்துக் கொண்டார். சீர் கெட்டிருந்த தமிழ் உரைநடை, இவர்தம் முயற்சியாலே ஒரு தனித்த வளர்ச்சிப் பாதையை

ஏற்படுத்திக் கொண்டது. ஆம். முழுக்க முழுக்கத் தூய தமிழ்ச் சொற்களை மட்டுமே அமைத்து உரைநடை இலக்கியத்தை மறைமலையடிகளும் அவர் போன்றோரும் வளர்த்தனர்; வாழ்விக்க முனைந்தனர்.

''அற்றேற், பகலவன் வெளிச்சம் இல்லாத இராக்காலத்தில் இறைவன்றன் ஒளிவிளக்கம் இல்லாது போதல் என்னையெனின் அற்றன்று; இராக்காலத்தும் மதியொளி வான்மீனொளி மின்னொளி முதலான இயற்கையொளிகள் காணப்படுதலுடன், பல்வகை விளக்கொளியாகிய செயற்கையொளியும் மக்களின் அறிவு முயற்சியால் எங்கும் கிளர்ந்து தோன்றி மக்களும் ஏனைச் சிற்றுயிர்களும் இயங்குவதற்கு உதவி புரிகின்றதாதலின் இராக்காலத்தில் ஒளியே இல்லையென்று சுட்டுரைத்துச் சொல்லுதலும் அடாது, அஃதொக்கும்; மக்களின் அறிவு முயற்சியாற் றோன்று செயற்கை விளக்கொளியும் இறைவனொளி யென்றல் ஒக்குமோவெனின், ஒக்கும்; என்னை? விளக்கொளி தோன்றுவதற்கேற்ற எண்ணெய் கற்பூரம், எரிகந்தகம், பஞ்சு முதலான பொருள்கள் மக்களாற் படைக்கப்பட்டன அல்ல; அவையும் அவைபோல்வன பிறவும் இறைவனொருவனாலேயே படைக்கப் பட்டனவாகும்; அவை தம்மையெடுத்துப் பயன்படுத்தி ஒளியினை வருவித்துக் கொள்ளும் அத்துணையே மக்களின் செயலாகுமன்றி, அப்பொருள்களின் உதவியின்றி ஒளியினை யுண்டாக்குந் திறம் அவரது செயலுக்கு இல்லாமையின், அங்ஙனம் அவராற் செயற்கையாய்த் தோற்றுவிக்கப்படும் விளக்கொளியும் இறைவனொளியே என்றற்கு ஏதும் ஐயம் இல்லையாதலின் என்க.''[34]

இவ்வுரைநடைப் பகுதி மறைமலையடிகள் எழுதிய 'தமிழர் மதம்' என்னும் நூலில் உள்ளதாகும். இவ்வுரைநடைப் பகுதி முழுக்க முழுக்கத் தூய தமிழ்ச் சொற்களாலேயே அமைந்திருப்பதைக் காணலாம். மறைமலையடிகளாரின் நடை தனித்தமிழ்நடை கேயாயினும் பண்டிதர்களுக்குப் புரியக்கூடிய கடும் நடை ஆகும். பண்டைய உரையாசிரியர்களின் உரைநடையைப் போன்று இவர்தம் உரைநடையிலும் நீண்ட தொடர்கள், திரிசொற்கள் முதலியன அமைந்திருக்கக் காணலாம். உரைநடை சரியாக இல்லாத காலத்தில், பண்டைய

34 மறைமலையடிகள்; தமிழர் மதம்; பக். 145—146

உரையாசிரியர்களே முன் மாதிரியானவர்களாக விளங்கிய காலத்தில் இவர் உரைநடை எழுதத் துணிந்ததால் இவரின் உரை நடையில் அத்தாக்கம் இடம் பெற்றிருக்கிறது.

தமிழுக்கு மிகப் பெரும் தொண்டு செய்த, 'தமிழ்த்தாத்தா' எனப் போற்றப் பெறும் டாக்டர் உ. வே சாமி நாதய்யரும் தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள். இவரின் உரை நடை எளிமையாக இருக்கும். எனினும் வடசொற்கள் விரவிவர அமைந்திருக்கும்.

பாரதிக்கு முன்னோடியாக விளங்கிய வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் உரை நடை அவர் பாடல்போல் எளிமையானதன்று. தமிழ்ச் சொற்களோடு வடமொழிச் சொற்களையும் தன்னுள் தாங்கியிருக்கும். பாரதியாரின் உரை நடையும் வடசொற்கள் விரவி அமைந்ததாகவே இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் எளிமையும் இனிமையும் தெளிவும் செறிவும் நிறைந்த தமிழ் உரைநடையை வழங்கிய பெருமை மு.வ. அவர்களையே சாரும்.

''தமிழ் வசன நடை இப்போதுதான் பிறந்தது. பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும்...... வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையனவாயிருக்கவேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவதுதட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ்நடை எழுதும்''[35] என்று பாரதியார் கூறுவார். இவர் கூறிய தற்கேற்ப உரைநடையில் தெளிவையும், ஒளித்தன்மையையும், தண்மையையும் ஆற்றொழுக்கையும் வழங்கியவர் மு.வ. மு. வ. வின் நெஞ்சிலே தமிழ்த்தாய் நிலை பெற்றிருந்தாள். அவருடைய நினைவுகளில் தமிழ் இனத்தைப்

---

35. பாரதியார்; கட்டுரைகள்; இன்பநிலையம்; சென்னை; 1963, பக். 56 — 57

பற்றிய சிந்தனை இருந்தது. அவருடைய சிந்தனையில் தெளிவு இருந்தது. அதனால் அவருடைய உரைநடையிலும் தெளிவு இருந்தது; தெம்பு இருந்தது.

''இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும்; ஈ எறும்பாலும் முடியும்; தேவையானது கிடைக்கும்போது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே மொய்க்கின்றன. அதுபோல் இன்பம் உள்ள போது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆகையால் இன்பத்திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லவரைத் தேடு. உறவானாலும் நட்பானாலும் காதலானாலும் இப்படித்தான் தேட வேண்டும்.''[36]

மேற்கண்ட இவ்வரிகள் மு.வ.வினால் 'அல்லி' என்னும் புதினத்தில் எழுதப்பெற்றவையாகும். இவ்வரிகளில் நாம் சிறுசிறு தொடர் அமைப்பைக் காணுகிறோம்; தெளிவைக் காணுகிறோம்; தேவையின்றி ஒரு சொல்லும் இடம்பெறாத ஓர் இரத்தினச் சுருக்க அழகைக் காணுகிறோம்.

இவர் காலத்தில் இவர்போன்று ஆற்றலோடு உரைநடை எழுதியவர்கள் சிலர் இருந்தனர். பேரறிஞர் அண்ணா, கல்கி, கலைஞர் கருணாநிதி, திரு. வி. க. முதலானோர் அத்தகையோருள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் நடைக்கும் மு. வ. வின் நடைக்கும் வேறுபாடு இருந்தது.

''எரிமலையும், சுடுமணலும், நெடுங்காடும், பெரு வெள்ளமும், வறண்ட நிலமும், வளமற்ற நீர் நிலையமும் படைத்த இடமாக இன்றி, நன்செயும் புன்செயும், நடுநடுவே நறுமணப் பூங்காவும், பழமுதிர் சோலையும், பாங்குடன் விளங்கும் குன்றும், மலையும், மலைபடு பொருளும், மக்களின் தேவைக்கேற்றவைகளை நல்கும் கனிகளும், சிந்து பாடும் சிற்றாறும், வள்ளல் போல் தரும் ஆறுகளும், பிறவுங் கொண்டு பொன்னாடாக விளங்கும் இந்நாடு நம் நாடு என்று கூறிக் கொள்வதிலே ஓர் பூரிப்பும் பெருமையும் நமக்கிருப்பது இயல்பே. இருத்தலும் அவசியமே. ஆனால் இத்தகைய நாட்டிலேயுள்ள நலிவுகளையும் நாம் மறக்கலாகாது.

---

36 மு.வ. அல்லி; ப. 127

திட்டிய வைரம் போல், தணலில் வெந்து கைத்திறனால் உயிர் பெறும் தங்கம் போல், அரைத்தெடுத்த சந்தனம் போல், நலிவு நீக்கப்பெற்று, அயர்வு போக்கப் பெற்று. ஆற்றல் வளப் படுத்தப் பெற்ற நாடு அழகுடன் விளங்கும். அங்கு அறிவு மணங்கமழும்; இன்ப விழா என்றென்றும் இருக்கும்.''[37]

இவ்வரிகள் பேரறிஞர் அண்ணா எழுதியவை ஆகும். இவ் வரிகளில் நல்ல தமிழ் நடையை நாம் காணலாம். அண்ணாவின் நடை அடுக்குத் தொடர்களால் எதுகை கொண்டதாய் ஆகி யுள்ளது என்பதை அறியலாம். ஒரு சமமான போக்கில் செல்லும் உரைநடையை அறியலாம். ஆனால் இதே கருத்தை மு. வ. எழுதுவாரேயானால் இத்தனைச் சொற்கள் வேண்டி யிரா. அவர் அடை மொழிகள் தவிர்த்திருப்பார்; அலங்காரம் நீக்கியிருப்பார்; நீண்ட தொடரைச் சுருக்கியிருப்பார்; ஆற் றொழுக்கு நிலையில் சொல்ல வந்த செய்தியைச் சொல்லிப் போவார்.

''அரண்மனை நிலா மாடத்தில் சரத்காலச் சந்திரனின் அமுத கிரண போதையை அநுபவித்துக் கொண்டு, சிநேகிதர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, மாமல்லர் தம்முடைய இருதயத்தையே அவருக்குத் திறந்து காட்டிவிட்டார். இத்தனை நாளும் மாமல்லரின் உள்ளத்தில் அணைபோட்டுத் தடுத்து வைத்திருந்த பிரேமைப் பிரவாக மானது அவருடைய இருதய அந்தரங்கத்தை வெளியிடக்கூடிய உற்ற தோழன் ஒருவன் கிடைத்த உடனே அணையை ஒரே மோதலில் இடித்துத் தள்ளிவிட்டு அமோக வெள்ளமாகப் பாய்ந்தது. பரஞ்சோதி அந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு திக்குமுக்காடிப் போனார்.

இந்தமாதிரி காதல்வெறி அவருக்கு முற்றிலும் புதுமையா யிருந்தது. திருவெண் காட்டில் நமசிவாய வைத்தியர் வீட்டில் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்த நங்கை ஒருத்தியும் இருக்கத் தான் இருந்தாள். ஆனால், அவளுடைய நினைவானது பரஞ்சோதிக்கு அமைதி கலந்த இன்பத்தையே உண்டாக்கியது. மாமல்லருடைய காதலோ அவருடைய உள்ளத்தைக் கடும் புயலால் சுழன்று சுழன்று அடிக்கும் மலை சூழ்ந்த பிரதேசமாக

37 சி. என். அண்ணாதுரை; அண்ணாவின் முத்துக் குவியல் பக். 15 - 16

வும், திடீர் திடீர் என்று தீயையும் புகையையும் கக்கும் எரி மலையாகவும் பிரம்மாண்டமான அலைகள் மலை மலையாக எழுந்து மோதும் குடாக் கடலாகவும் செய்திருப்பதைப் பரஞ்சோதி கண்டார்.''[38]

இவ் வரிகள் கல்கி அவர்களால் 'சிவகாமியின் சபதம்' என்னும் வரலாற்றுப்புதினத்தில் எழுதப் பெற்றவை ஆகும். இது கல்கியின் காவிய நடை ஆகும்.

''சிந்தாமணி, தனது சிறுத்த இடையில் செப்புக்குடம் தாங்கி நட்சத்திரங்களிடையே நிலவுபோல நடை போட்டாள். தாமரையில்லாத அந்தத் தடாகத்திற்கு அவள் தாமரை யானாள். தந்தமோ, தங்கமோ என மயங்கிடும் நிலையிலுள்ள அவளது அழகுமேனி முழுமையும் சுவைத்திடும் பாக்கியம் அவள் உடுத்தியிருக்கும் பச்சை வர்ணச் சேலைக்குக் கூட கிட்டு வதில்லை. அந்தப் பளிங்கு நீர்த்தடாகம் அந்தப் பெரும் பாக்கியத்தை நாள்தோறும் அதிகாலையில் பெற்று மகிழ்கிறது.''[39]

இவ்வரிகள் கலைஞர் கருணாநிதியால் 'வெள்ளிக் கிழமை' என்னும் புதினத்தில் எழுதப் பெற்றவையாகும். இவ்வுரை நடைப் பகுதியைப் படித்த பிறகு ஒருவித நடை நமக்குப் புலனாகிறது. மோனையை வரிகள் தோறும் அவர் அமைத்துச் செல்லும் நடையைக் காண முடிகிறது. சிறந்த உருவக நலன் இருப்பது புலனாகிறது. இந்த நடையும் மு. வ. வின் நடை யினின்று வேறுபடுவதை அறியலாம்.

ஆயின் மு. வ. வின் நடை ஒருவரின் நடையோடு மட்டும் மிகவும் ஒத்திருக்கும். அந்நடை தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் நடையே ஆகும். நல்ல தமிழை உரைநடையில் மட்டு மன்றி, மேடைப் பேச்சிலும் உலவச் செய்தவர் திரு வி. க. இவரின் நடையே ஒரு தனித்தன்மை வாய்ந்தது. தமிழ் நடையைத் தூய தமிழ்ச் சொற்களில் சிறுசிறு தொடர்களில் வழங்கிய முதல் ஆள் என்ற பெருமைக்குரியவர் இவரே ஆவர். உரை நடை இலக்கியத்தை ஓர் ஆற்றல் வாய்ந்த இலக்கிய வகை யாக எழுதிக் காட்டியவர் இவரே ஆவர்.

---

38 கல்கி; சிவகாமியின் சபதம்; ப. 256
39 மு. கருணாநிதி; வெள்ளிக்கிழமை; ப. 11

"இயற்கைக்கு மாறுபட்டு மனிதன் புரிந்த மீச் செயல்களை என்னென்று கூறுவது? அவை ஒன்றா, இரண்டா? கோடி கோடி! பெண்ணுலகை அடிமைப் படுத்தியது; பிறப்பில் உயர்வு தாழ்வு வகுத்தது; தீண்டாமை நுழைத்தது; முத்தொழில் எனப் பிரித்தது; சிற்றுயிர்களை வதைப்பது; இவைகளினின்றெழும் கொலை களவுகள் காமம் பொய் என்னும் பாவங்களைப் புரிய முனைந்து நிற்பது; இவைகளில் நியாய அநியாயங் காண மன்றங்களை அமைத்தது; பொல்லாத வக்கீல் தொழிலைக் கண்டது; சமரசத்தை மறந்து அன்புக் கடவுளை அலட்சியம் செய்தது— இன்னோரன்ன இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் கோடி! கோடி!"[40] எனும் இப்பகுதி திரு. வி. க. வின் உரை நடைக்குச் சான்று.

இவ் வரிகள் சிற்சில சொற்களைக் கொண்டு சிறுசிறு தொடர்களாய் அமைந்திருக்கின்றனவெனினும் இவற்றில் காணப்படும் மீச்செயல், சிற்றுயிர் முதலியன திரிசொற்களாய் பேச்சு வழக்குச் சொற்களின்று மாறுபட்டனவாய் அமைந் திருக்கக் காணலாம். மேலும் இவர் நடையில் ஒரு கேள்வி ஒன்றை முதலில் கேட்டுக் கொண்டு அதற்கு விடையிறுக்கும் வகையில் எழுதிச் செல்லும் நிலையையும் காணலாம் இவரை தொடர்ந்து மு.வ.வும் சிறுசிறு தொடர்களில் உரைநடை எழுதினார் எனினும் திரு.வி.க. நடையில் காணப் பெறுவது போன்ற கற்றவரே புரிந்துகொள்ளும் படியான திரி சொற்கள் இன்றி எளிய இயற்சொற்களால், ஓரளவு கற்றோரும் புரிந்து கொள்ளும்படியாக அவர்களின் உரை நடை இருந்தது என்பது அறியத் தகுந்தது.

மறைமலை அடிகளாரிடம் இருந்த தனித்தமிழ் உணர்வு இவரிடம் இருந்தது. அதேநேரம் திரு.வி.க. நடையில் இருந்த எளிமையும் தெளிவும் இருந்தன எனலாம். மறைமலை அடிகளாரிடம் இருந்த நீண்ட தொடர் அமைப்பு இவரின் உரைநடையில் இல்லை. உ.வே. சாமிநாதய்யர் உரைநடையில் இருந்த எளிமை இவர் உரைநடையில் இருந்தது. ஆனால் உ. வே. சா. உரைநடையில் விரவியிருக்கும் வடமொழிச் சொற்கள் இவரின் உரைநடையில் இடம் பெறவில்லை. பேரறிஞர் அண்ணாவின் ஆற்றல் நடையும் இவருக்குக் கைவந்தது. ஆனால் அலங்காரத்தை விரும்ப

40 திரு. வி. க.; தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு; ப. 232

வில்லை. கல்கியின் புனைந்துரையும் மு.வ.விடம் உண்டு. எனினும் அவை காவியம்போல் நீள்வதில்லை. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையின் எதுகை நடையும், கலைஞரின் மோனைக் கவிதை நடையும் மு.வ.விடம் காணப் பெறவில்லை. மாதரி வீட்டுக் கண்ணகி போலச் 'செய்யாக் கோலமொடு' விளங்கும் எளிய நடையே மு.வ வின் இயல்பான நடை ஆகும். திரு.வி.க. உரைநடையில் இருந்த எளிமை இவர்க்கு இயல்பாக அமைந்திருந்தது. அதில் இயல்பாகப் பொதுமக்கள் வழங்கும் சொற்களே இடம் பெற்றிருக்கும். மொத்தத்தில் மு.வ.வின் நடையில் எளிமை உண்டு; இனிமை உண்டு; திண்மை உண்டு; தெளிவு உண்டு; சிந்தனைக்கோர்வை உண்டு; இவற்றால் தமிழுக்கெனத் தனித்தன்மை உடைய அனைவருக்கும் விளங்கும் ஒரு நடையைத் தோற்றுவித்து வளர்த்த பெருமைக்கு அவர் உரியராவர்.

கழுகுகள் கொத்துக் கொத்தாய்க் கொத்தி ஈத்துண்ணக் காணலாம். காகங்கள் குவியல் குவியலாய்த் தன் அலகு கொண்ட அளவு அள்ளியுண்ணக் காணலாம். சிட்டுக்குருவிகள் ஒவ்வொரு மணிமணியாய்ப் பொறுக்கித் தின்னக் காணலாம். மு. வ. நடை சிட்டுக் குருவி உண்பது போன்றது: ஒரு கருத்துக்கு ஒரு தொடர் என்பது அவருடைய உத்தி; உரைநடைக் கொள்கை.

''ஆமாம்! நான் கணவரைத்தேர்ந்தெடுத்தது அப்படித்தான். அதனால் தான் ஏமாந்தேன்; என் தவறு, என் அறியாமை என்று நொந்து கொண்டேன்.''[41]

இவ்வரிகள் மு. வ.வினால் 'அல்லி' என்னும் புதினத்தில் எழுதப்பெற்றவையாகும். இதில் ஒரு கருத்துக்கு ஒரு தொடர் என்ற நிலையில் அனைத்துவரிகளும் அமைந்திருக்கக் காணலாம். அவை அனைத்தும் சிறுசிறு தொடர்களாக அமைந்திருக்கும் திறமே மு. வ.வின் உரைநடைச் சிறப்பு ஆகும்.

புகை வண்டியில் செல்லும்பொழுது எந்தவொரு முயற்சியுமின்றி. கண் எதிரே பலகணி வழியாகக் காட்சிகள் பல தொடர்ந்துசெல்வதுபோல, பலவற்றை நினைவில் நிறுத்திக்கொண்டு மேலும் மேலும் தொடர்ந்து செல்லாமல் நினை வோட்டத்தைச் சிறுசிறு தொடர்களாய் ஈர்த்துக் கொண்டு செல்வதன் மூலம் தமிழ்மொழிக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில்

41 மு. வ.; அல்லி; ப. 127

சிறந்ததோர் உரைநடையை வழங்கிய பெருமை அவரைச் சார்கிறது.

ஒரு மலரில் மணமும், மகரந்தத் தேனும், அழகும் இயல்பாக இயைந்திருந்தால் எவ்வளவு சிறப்பெய்துமோ, அவ்வளவு சிறப்பு மு. வ. உரைநடைக்கு உண்டு எனலாம். அவரின் உரைநடையில் இயல்பாக எளிமை இருந்தது; இனிமை இருந்தது; கருத்து இருந்தது. இவை மூன்றும் இயல்பாக இயைந்திருந்ததனால் அறிஞர் பலர் பலவாறு இவரைப் போற்றியுரைக்கின்றனர்.

''மக்களிடையே தமிழ் ஆர்வம் தழைத்திட தமதுபணியால் உரையால், உரைநடையால் வழிகண்டவர் அவர். அவருடைய படைப்பு இலக்கியங்கள் மூலம் இலக்கியம் பயிலும் ஆர்வம் ஓங்கியது; தமிழ்வழிச் சிந்தனை மேம்பட்டது; உரை நடை புதுப்பொலிவு பெற்றது; தமிழர்தம் அறிவு நிலையும் முற்போக்கு உணர்வும் சிறந்தது. இதைக் குறித்து இருவேறு கருத்துக்கு இடமில்லை''[42] என்று பேராசிரியர் க.அன்பழகன் கூறுவார். இந்தக் கூற்றுப் பொய்யுரை அன்று; புனைந்துரை அன்று; மெய்யுரை ஆகும். எத்தனையோ எளிய தமிழ்மக்கள் மு.வ. புதினங்களால் உள்ளம் ஈர்க்கப் பட்டிருக்கின்றனர். இவர்தம் நடை கங்கையைப் போல் அமைதியாக அதே நேரத்தில் ஆற்றலோடு செல்லும் தன்மையது. மென்மையாகச் சொல்ல வந்த கருத்தைத் தெளிவாக, சுருக்கமாகச் சொல்லும் அவர் உரை நடை பல எழுத்தாளர்களையும் ஈர்த்திருக்கிறது.

''டாக்டர் மு.வ. அவர்கள் தமிழுக்குப் பல நல்ல நாவல்களை மட்டும் படைத்துத் தரவில்லை. தமிழின் தன்மை கெடாத நல்ல நடையில் படைப்பிலக்கியங்கள் பல தமிழில் தோன்ற மறைமுகமான காரணமாகவும் விளங்குகிறார்கள். திரு. அகிலன், திரு. கு. ராஜவேலு, திரு. நா. பார்த்தசாரதி போன்ற சிறந்த நாவலாசிரியர்கள் நல்லதமிழ் நாவல்களைப் படைப்பதற்கு டாக்டர் மு. வ. அவர்களின் தாக்கமும் ஒரு காரணமாகும்''[43] என்ற கண. முத்தையா கூற்று இங்கு நினையத் தகுந்தது.

மு. வ. தமிழகம் முழுவதும் புரிந்து கொள்ளக் கூடிய பொது வழக்குத் தமிழிலேயே புதினங்கள் படைத்தார். எந்த

42. க. அன்பழகன்; மு.நூ; முன்னுரை
43. கண. முத்தையா; மு. நூ.; ப. 170.

வொரு வட்டாரத்திற்கும் இனத்திற்கும் உரிய பேச்சு மொழியை அவர் கையாளவில்லை. ''தமிழருக்கு ஒரு பொற் காலம் வந்தது. 'அவாள் பாஷையும்' அல்லாமல், கடுந்தமிழும் அல்லாமல் எளிய செந்தமிழில் புதுமைப் படைப்புகள் வந்தன! அவற்றைப் படைத்தவர் யார்?

தற்கால இலக்கியத்தில் தமிழர்களின் பொற்காலத்தை ஏற்படுத்திய 'பொற்—கையர்' டாக்டர் மு. வ. தான்''[44]

மு வ. நெஞ்சில் தமிழ் நிலைத்த இடம் பெற்றிருந்தது. எனவே, அவர் நடையில் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடும் முயற்சியும், தமிழ்ச் சமுதாயத்திற்கு ஊக்கம் தரும் முயற்சியும் இயைந்திருந்தன. ''மு. வ. அவர்களின் தமிழ்ப் புலமைக்கு உயிர் தமிழ்ப்பற்று, தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தும் நன் முயற்சியிலும் முனைந்து வெற்றி கண்டார். மு. வ. தமிழ் இலக்கண மரபு கெடாது, புத்தம் புதிய கோணங்களில் கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள் ஆக்கித் தந்த சிறந்த எழுத்தாளர்''[45] ஆவர்.

அவருடைய எழுத்துக்களில் எளிமை இருந்த அளவிற்கு இனிமை இருந்தது. இனிமை இருந்த அளவிற்குத் தெளிவும் இருந்தது. அவரது நடையில் சிந்தனை ஓட்டத்தின் செறிவு இருந்தது. எந்தவிதச் சிந்தனையும், எவ்விதச் சிக்கலுமின்றி, சிதைவுமின்றித் தெள்ளத் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனி போல் உரைக்கப்படும் நிலையும் இருந்தது.

''நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்கு படுத்திக் கொள்வது போல், தன் உள்ளத்தையும் ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். தலை வாரி அமைத்துக் கொள்ளக் கண்ணாடி வேண்டும். அதுபோல் உள்ளத்தை ஒழுங்குபடுத்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும். அல்லது ஏசு, புத்தர், திருநாவுக்கரசர் போன்ற அறத்தின் வீரர்களைத் தியானம் செய்து கொண்டு, நேற்றைய இன்றைய செயல்களையும் சிந்தனைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்''[46] என்பார் மு. வ. இவ்வுரைநடைப் பகுதியில் எளிமையான சொற்களும், ஆற்றொழுக்கான இனிய நடையும், சொல்ல

44 அடியார்; மு. வ. நினைவுமலர்; ப. 15
45 நெ. து. சுந்தரவடிவேலு; மு.நூ; ப. 43
46 மு. வ.; அல்லி; ப. 130

வந்த செய்தியின் தெளிவும் இடம் பெற்றிருக்குமாற்றை அறியலாம். மிகவும் சிக்கலான செய்தியைக் கூட எவ்வளவு எளிமையான உவமான, உவமேயங்கள் மூலம் உரைத்திருக்கிறார் மு. வ. நாளும் நமக்குப் பழக்கப்படும் கண்ணாடி, சீப்பு, முதலியனவற்றால் சொல்ல நினைத்த செய்தியை, எள்ளளவும் சிக்கலின்றி எவ்வளவு சிறப்பாகச் சொல்லியிருக்கிறார் என்பதை அறியலாம்.

''பசியில் பெரிய பசி, ஆற்றல் மிக்க பசி எது? உனக்கு வேண்டா என்று தடுக்கப்பட்டதை எப்படியாவது அறிய வேண்டும், அடைய வேண்டும் என்னும் பசியே.

தியாகத்தில் பெரிய தியாகம், அப்படிப்பட்டதை அறியாமலே அடையாமலே செத்துப் போவோம் என்று அமைதி அடைதலே ஆகும்''[47] என்று இன்னோரிடத்தில் விருப்பம் அறுப்பது பற்றித் தெளிவாகக் கூறுவார் மு. வ.

மேற்கண்டவாறு மு. வ. உரைநடையில் எளிமை, இனிமை, தூய்மை தெளிவு, முதலியன சிறந்திருந்தமைக்கு அவருடைய ஆழ்ந்த அறிவும் தமிழ்ப் பற்றுமே காரணங்களாகும்.

## V. தமிழ்ச் சொல்லாக்கம்

ஒரு மொழியில் வழங்கும் பெயர்கள் அம் மொழியின் ஆற்றலையும் அம் மொழி பேசுவார் பண்பாட்டையும் உணர்த்தவல்லன. இந்த உண்மை மொழிநூல் அறிஞரான மு. வ. நன்கு அறிந்ததே ஆகும். மேலும், முன்பு கூறியது போலத் தமிழ்மொழி, இன மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு புதினம் எழுதத் தொடங்கிய நல்லார் அவர். எனவே தாம் எழுதிய புதினங்களுக்கு அவர் இட்ட பெயர்களும், அப்புதினங்களுள் இடம் பெறும் மாந்தர்களுக்கு அவர் வழங்கிய பெயர்களும், கதை நிகழ்ந்த ஊர்கள், இடம் பெயர்களாக அவர் குறிப்பிட்டனவும்; அந்நிகழ்ச்சிகளில் பயன்படும் சிதைவுச் சொற்கள், வழக்குச் சொற் ள், வேற்றுமொழிச் சொற்களுக்கு நல்ல வடிவம் தந்தமையும் — மேற்குறிப்பிட்ட அவர்தம் கருத்தைத் தெளிவு செய்யவல்லனவாக அமைந்துள்ளன.

---

47. மேற்படி

'செந்தாமரை' தொடங்கி அவர் இட்ட, புதினப் பெயர்கள் எல்லாமே இனிய நல்ல தமிழ்ப் பெயர்களாக இருக்கக் காண லாம். இயல்பாகவே இ. ற்கையிட - தும், பயிற்சியால் சங்க இலக்கியத்தின் மீதும் அவர் கொண்டிருந்த பற்று, தமிழர் தம் மரபு — ஆகியன எல்லாம் அவ்வாறு அவர் இயற்கைப் பெயர் களைப் பெரிதும் தம் நூல்களுக்கு இட்டு வழங்கக் காரணங்க ளாக அமைந்தன.

செந்தாமரை, கள்ளோ? காவியமோ?, பாவை, அந்த நாள், மலர் விழி, பெற்றமனம், அல்லி, கரித்துண்டு, கயமை, நெஞ்சில் ஒருமுள், அகல்விளக்கு, மண் குடிசை, வாடாமலர் ஆகிய பதின்மூன்று புதினங்களும் செந்தமிழ்த் தீஞ்சொற் பெயர்களில் அமைந்து இலங்கக் காணலாம்.

செந்தாமரை, மலர்விழி, அல்லி, வாடா மலர் என்னும் பெயர்கள் இயற்கைமீது அவருக்கிருந்த ஈடுபாட்டைப் புலப் படுத்தவல்லன. சிறப்பாக மலர் பற்றிய பெயர்களாய் அமைந் திருப்பது குறிப்பிடத்தகுந்தது. அவர் எழுதிய எண்பத்தைந்து நூல்களில் ஒன்றில் கூடப் பிறமொழிச் சொற் பெயரைக் காணவியலாது (இயற்பெயர்களாகிய பெர்னார்ட்ஷா, தாகூர் முதலியன விதிவிலக்கு).

''இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்''

என்பது திருக்குறள் (91). இந்தத் திருக்குறளின் கருத்துக் கேற்பச் சொற்களை உருவாக்கி இலக்கியம் படைத்தவர் மு.வ. அவருடைய சொற்களிலே எளிமை, இனிமை, தூய்மை என்ற மூன்றும் குடிகொண்டிருந்தன என்பது, முன்னமே சொல்லப் பெற்றுள்ளது. செம்பொருள் கண்டார் வாய் என்பது சொற்பொருண்மையின் காட்சியுடைமை. இனிமை என்பது இனிய ஒலிக்கூறுகள். ஈரம் அளைதலாவது, சமுதாயத்தின் பால், மொழியைப் பயிலுகின்ற மக்கள்பால் அருள்கொண்டு அவர்கள் எளிதாகக் கையாளும் வகையில் சொல்லாக்கம் செய்தல் ஆகும். படிறிலவாவது பொருட் குறைபாடோ, வேறு பொருள் புலப்பாடோ, தமிழனுடைய நாவில் தவழமுடியாத ஒலிப்பாடோ இல்லாது இருத்தல் ஆகும். இந்த நான்கு கூறு களையும் சொல்லாக்க நெறியாகக் கொண்டு விளங்குவது மு. வ புதினங்கள்வழி புலப்படும் உண்மையாகும்.

எளிமை என்கிறபோது அவருடைய சில சொல்லாக்கங்கள் ஒரு பொருளை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் தன்மையனவாக இருக்கும். எடுத்துக் காட்டாக ஆங்கிலத்தில் 'மார்க்கட்' என வழங்கப்பெறும் சொல்லை, மு. வ. தூய தமிழில் 'காய்கறிக் கடை' என வழங்கினார். இதற்கு ஈடாகத் தமிழில் முன்னமே 'அங்காடி' எனும் பெயர்ச்சொல் இருக்கவும் அதைக் கையாளாமல், 'காய்கறிக் கடை' எனக் கையாண்டிருப்பது எளிமை கருதியே. அங்காடி என்பது பலவற்றைத் தன்னுள் கொண்டு விரிந்த பொருள் தரும் என்பதனால், இப் பெயர்ச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் எனலாம். காய்கறிக் கடை என்பதில் பலவிதமான காய்கறிகள் விற்கப் படும் கடை என்பதையும் காட்டி விடுகிறார். காய்கறிக் கடை என்பதிலே குழப்பம் ஏதும் இருக்க வாய்ப்பில்லை. அதாவது காய்கறிக்கடை என்பதில் காய்கறிகள் மட்டுமே விற்கப்படும் கடை என்பது தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஆயின் 'மார்க்கட்', 'அங்காடி' ஆகிய சொற்களில் காய்கறிகளோடு பிறவும் விற்கப்படும் நிலை சொல்லப்படுகிறது. இவ்வாறு சரியான பொருள் புலப்பாடு மு.வ வின் புதினப் பெயர்களில், பெயர்ச்சொற்களில் எங்கும் காணப்பெறுகிறது.

இனிய ஒலிக் கூறுகள் என்கிறபோது வல்லினம் இரட்டித்து வருதல் முதலிய சொல்லாக்கம் அவர் புதினங்களில் இல்லை. பெரும்பாலும் மெல்லின எழுத்துக்களும், சிறப்பாக 'ழ' கர ஒலி எழுத்தும், அவருடைய பெயர்ச்சொற்கள் படைப்பில் பயின்றுவரக் காணலாம். எடுத்துக்காட்டுக்களாக 'அறவாழி', 'மலர்விழி' முதலிய பெயர்ச் சொற்களைக் கூறலாம்.

மேலும் ஆங்கிலத்தில் வழங்கிய தமிழ்மொழிக்குப் பழக்கமில்லாத சில சொற்களைக் கூட, நம் தமிழ்மொழியின் இயல்புக் கேற்றவாறு மாற்றியமைத்துப் படைத்திருக்கிறார் மு.வ. எடுத்துக்காட்டாகப் ''பாரீஸ் கார்னர்' என ஆங்கிலத்தில் வழங்கிய இடப்பெயரை மிக அழகாக, இயல்பான முறையில் 'பாரி முனை' எனத் தம் புதினத்தில் வழங்கினார். பாரீஸ் கார்னர் என்பதிலே உள்ள 'ஸ்' என்ற ஒலி தமிழ் மொழிக்கு உரியதல்ல எஸ் பதனால் அதை நீக்கி, கார்னர் என்பதற்குரிய 'முனை' எனும் தமிழ்ச் சொல்லைப் பெய்து, தமிழ்மொழிக்குப் பழக்கப்பட்ட ஒரு பெயர் போல் 'பாரி முனை' என உருவாக்கினார் இது ஒரு சிந்தனை. பாரி என்பவன் தமிழ்நாட்டு வள்ளல்களுள் ஒருவன்; அவனை

நினைவுகூரும் வகையிலும் இப் பெயர்ச் சொல் அமைகிறது என்பது மற்றொரு சிந்தனை ஆகும்.

படிறிலவாவது எனில் இங்கு, தம் புதினங்களில் ஒரே சாதிக்குரிய, இனத்திற்குரிய வட்டார வழக்கைப் பயன்படுத் தாத, பிறமொழிச் சொற்கள் விரவாத இயல்பைக் குறிப்பிட லாம். மு.வ. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பொதுமை நோக்கிலே இலக்கியம் படைத்தார். ஒரு குறிப் பிட்ட இடத்திற்கே, இனத்திற்கே, சாதிக்கே உரியனவாக அவர் புதினங்கள் படைக்கவில்லை. தமிழகம் முழுமையும் ஏற்றுக்கொள்ளத் தக்க ஒரு பொதுவான இலக்கிய நடையில் படைத்தார். அவர் படைத்த பாத்திரங்களின் பெயர்களில் கூட எந்த இனம், எந்தச்சாதி என்பன அறிய இயலா. மேலும் அவை நிகழ்த்தும் உரையாடல்களிலும் ஒரு குறிப் பிட்ட இட, கால, இன, சாதிகளுக்குரிய இயல்பு வெளிப் படாது. அந்த அளவிற்கு மிகவும் விழிப்பாக இருந்து இலக்கி யம் சமைத்தார் மு. வ.

பெயர்ச் சொற்களை அமைப்பதில் மு. வ. பின்பற்றிய நெறியைக் கீழ்வரும் கருத்துக்களில் சொல்லலாம்.

## 1. வழக்கிலுள்ள பெயர்களை அவ்வாறே வழங்குதல்

கதை நிகழ்ந்த கால, மக்கட்பெயர்களை, கதைக்கு இன்றி யமையாத கதை மாந்தர் பெயர்களை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் என்பது அவர் கையாண்ட பெயர்ச்சொல் அமைப்பு நெறிகளுள் ஒன்றாகும். இங்குப் 'பாண்டியன்' முதலிய தமிழ்ப் பெயர்களும், 'வசீகரம்' முதலிய வடமொழிப் பெயர்களும் எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ளத்தக்கன வாகும்.

இவற்றுள் பாண்டியன் என்பது பல்லாண்டுகளாகத் தமிழகத்தில் வழங்கப்பெறும் பெயராகும். எனவே, அன்றைய நாளில் பொது வழக்கில் இருந்த இதுபோன்ற இயல்பான பெயர்களை அவர் கையாண்டிருக்கிறார். பொதுவழக்கிலிருந்து பிற மொழிச் சொற்களையும் அவர் அப்படியே வழங்கியிருக் கிறார் என்பதற்கு 'வசீகரம்' முதலான பெயர்களைக் குறிப் பிடலாம்.

நடைமுறைப் பெயர்களுக்கு அகல்விளக்குப் புதினத்தில் இடம் பெற்றுள்ள சந்திரன், வேலய்யன், மாறன், சாந்தலிங்கம், பாக்கியம், கற்பகம், கயற்கண்ணி, மணிமேகலை, விநாயகம் முதலியனவற்றைத் எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்.

## 2. புதினங்களில் குழந்தைகளுக்குப் பெயரிடுதல்

மு. வ. தம் கதை மாந்தர்களுக்குத் தூய தமிழ்ப் பெயர்கள் வைத்து மகிழ்வது போல, அக்கதை மாந்தர்களின் குழந்தைகளுக்கும் தூய தமிழ்ப்பெயர்களை வைத்து மகிழ்கிறார். இக் காலத் தமிழகத்தில் இருப்பதை அப்படியே அமைத்துக் கொண்ட அவர் எதிர்காலத் தமிழகம் நல்ல தமிழ்ப் பெயர்களைப் பெற்றுத் திகழ வேண்டும் என்று கருதினார்.

இதனால்தான் ‘கள்ளோ? காவியமோ’?புதினத்தில் அருளப்பருக்கும் மங்கைக்கும் பிறந்த குழந்தைக்குத் ‘தேமொழி’ என்ற இனிய தமிழ்ப் பெயரைச் சூட்டியிருக்கிறார் எனலாம். ‘வாடாமலர்’ புதினத்தில் பூங்கொடி பெற்ற குழந்தைக்கு ‘நறுமலர்’ என்று பெயர் சூட்டியிருத்கிறார்.

தமிழரிடையே காணப்படும், பெயர் வைத்து அழைப்பதில் உள்ள குறைகளையும் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார். சிலர் செல்வச் செருக்கு, பொய் நாகரிக மயக்கம், பிறமொழிக் கவர்ச்சி முதலியவற்றால் தம் குழந்தைகளுக்கு உள்ள இயல்பான நல்ல தமிழ்ப் பெயர்களை விடுத்து, பிறமொழிப் பெயர்களை வழங்கி மகிழ்வர். அத்தகைய சூழ்நிலையையும் தம் புதினம் ஒன்றில் அவர் காட்டியுள்ளார். ‘அல்லி’ என்னும் புதினத்தில் அறவாழி என்ற பாத்திரம் தான் பெற்ற மகனுக்கு இளங்கோ என்றும், மகளுக்கு மணிமேகலை என்றும் பெயர் வைத்து மகிழ்கிறது. ஆயின் ஆடம்பர மோகம் கொண்ட அறவாழியின் மாமியாரோ அவர்களை ரத்தின குமார் என்றும் சொர்ணம் என்றும் அழைத்து மகிழ்கிறார். சிலர் வறிய நிலையிலிருந்து மீண்டுச் செல்வம் சேமிக்கும் வாய்ப்புப் பெற்ற போது தம் பழைய பெயர்களை ஒதுக்கிவிட்டுப் புதிய பெயர்களைச் சூட்டிக் கொள்வதுமுண்டு அன்றோ? அத்தகைய சூழ்நிலையைக் ‘கயமை’ என்னும் புதினத்தில் படைத்துக் காட்டியுள்ளார். இப் புதினத்தில் இடம்பெறும் மாதர் சேவா சமாசத்தின் துணைத் தலைவி அம்மு என்பவள் தன்னுடைய

பெயரை ராஜபுஷ்பம் என்று மாற்றிக்கொள்கிறாள். இதே போல 'நெஞ்சில் ஒரு முள்'ளில் நிலா என்னும் நல்ல தமிழ்ப் பெயர் விஜயா என்று மாற்றி அழைக்கப்படுகிறது.

## 3. பாத்திரங்களுக்கு இயற்கைச் செடி கொடிப் பெயர்களை இடுதல்

மு. வ. இயல்பாகவே இயற்கைமீது ஈடுபாடு கொண்டவர். அவர்தம் முனைவர் பட்ட ஆய்வுநூலும் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என அமைந்திருப்பதும் இங்கு நினையத் தகுந்தது. இயற்கையில் காணப்படும் செடி, கொடிப் பெயர்களைப் பாத்திரங்களுக்கு வழங்கி மகிழ்ந்தவர் மு.வ. அகல் விளக்கில் 'கயற்கண்ணி' எனவும், செந்தாமரையில் 'பூங்கொடி' எனவும், வாடாமலரில் 'நறுமலர்' எனவும், நெஞ்சில் ஒரு முள்ளில் 'நிலா', 'அரும்பு' எனவும், அவர் வழங்கியுள்ள பல பெயர்கள் இயற்கை மீது அவருக்கிருந்த ஈடுபாட்டை விளக்கவல்லனவாகும்.

## 4. பாத்திரங்களுக்குத் தமிழ்ச் சான்றோர், தமிழ்க்காப்பிய மாந்தர் பெயர்களை இடுதல்

பொதுவாக எழுத்தாளர்கள் இலக்கியம் படைக்கும் அன்றைய நாளில் என்ன என்ன சொற்கள், என்ன என்ன பெயர்கள் வழக்கத்தில் உள்ளனவோ அவற்றையே வழங்குவர். மு. வ. அந்த இயல்பையும் கொண்டு படைத்தமை அறிவோம். இதிலிருந்து மாறுபட்டுத் தம் உள்ளம் கவர்ந்த தமிழ்ச் சான்றோர்களின் பெயர்களை, தமிழ்க் காப்பிய மாந்தர்களின் பெயர்களைத் தம் புதின மாந்தர்களுக்கு வழங்கி மகிழும் பெற்றியராக அவர் விளங்குவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். 'கள்ளோ? காவியமோ?' புதினத்தில் குலசேகரர் என்ற பெயரையும், 'அல்லி'யில் இளங்கோ என்ற பெயரையும், 'அகல்விளக்'கில் மாதவி என்ற பெயரையும் வழங்கியிருக்கிறார். இவையல்லாமல் தமிழ் இலக்கியப் பெயர்களையும் ஆங்காங்கே வழங்கியிருக்கிறார். அகல்விளக்கில் திருவாய்மொழி, பொய்யாமொழி, திருப்பாவை ஆகிய தமிழ் இலக்கியப் பெயர்களைப் பாத்திரங்களுக்கு வழங்கியிருக்கிறார். ஆக பெயர் வைப்பில் கூட அவர்தம் தமிழுணர்வு, தமிழ்ச் சான்றோர் வழிபாடு வெளிப்படுவதை அறிய முடிகிறது.

## 5. புதின மாந்தர்களுக்குப் புதுப் பெயரிடுதல்

ஏற்கனவே பெரு வழக்கிலிருந்த பெயர்களையும், செடி, கொடிகளின் பெயர்களையும், தமிழ்ச் சான்றோர், தமிழ்க் காப்பிய மாந்தர், தமிழ் இலக்கியங்கள் பெயர்களையும் தம் பாத்திரங்களுக்கு வழங்கிய மு. வ. தாமாகவே சில புதிய பெயர்களையும் படைத்துள்ளார். 'நெஞ்சில் ஒரு முள்'ளில் இடம்பெறும் அறிவன், கண்ணழகர், மணிமொழி என்ற பெயர்களும், 'அகல் விளக்'கில் இடம்பெறும் மாலன் என்ற பெயரும், 'கள்ளோ? காவியமோ?'வில் இடம் பெறும் அழகன் என்ற பெயரும், 'மலர் விழி'யில் இடம்பெறும் கலைவள்ளி என்ற பெயரும், 'செந்தாமரை'யில் இடம்பெறும் பூங்கொடி என்ற பெயரும், 'வாடா மலரி'ல் இடம்பெறும் நறுமலர் என்ற பெயரும், 'நெஞ்சில் ஒரு முள்'ளில் இடம்பெறும் அரும்பு என்ற பெயரும் மு.வ. வினால் படைக்கப்பெற்ற புதுப் பெயர்களாகும்.

## 6. பெருவழக்குக் கருதிப் பிறமொழிப் பெயர்களை அவ்வாறே வழங்குதல்

தமிழ் மண்ணிலே தோன்றி, தமிழ் மக்களோடு தொடர்புடைய பெயர்களை மு.வ. தமிழ்ப்பெயர்களாகவே வழங்கினார். எடுத்துக்காட்டுக்களாக ஊராட்சி, நகராட்சி முதலிய பெயர்களைக் குறிப்பிடலாம். இப் பெயர்களுக்கு ஈடாக ஆங்கிலத்தில் பஞ்சாயத்து, கார்ப்பரேசன் என்ற பெயர்கள் இருந்தாலும், அவை பெருவழக்குப் பெற்றிருந்தாலும் மு. வ. அப் பெயர்களை வழங்குவதில்லை. இதற்குரிய தமிழ்ப் பெயர்களை மட்டுமே வழங்குவார். ஊராட்சியும், நகராட்சியும் தமிழ் மக்களோடு பல்லாண்டு காலமாகத் தொடர்புடைய சொற்கள் ஆகும். எனவே, இன்று வந்த பஞ்சாயத்து, கார்ப்பரேசன் என்ற சொற்கள் அவற்றின் இடத்தில் நின்று ஆட்சி செய்ய அவர் விரும்புவதில்லை. தமிழ் மக்களிடையே பெரு வழக்குப் பெறும் சொற்களை அவ்வாறே வழங்க ஒருப்படுகிறார் மு.வ. எடுத்துக் காட்டுக்களாகப் 'பஸ்', 'கார்' முதலிய பல சொற்களைக் கூறலாம். இச்சொற்களுக்குரிய பொருள்கள் தமிழ் மண்ணிற்கு உரியவை அல்ல; அவை வேறு நிலத்திலிருந்து வந்தவை. அவை பற்றிய பொருள் புலப்பாடும் நமக்குக் கிடையாது. அதனால் அவற்றைப் 'பேருந்து' எனவும், 'உந்து வண்டி' எனவும் மொழிபெயர்ப்புச் செய்து

அவர் வழங்காமை கருதத்தக்கது. அவ்வாறு மொழி பெயர்ப்புச் செய்தால் அவற்றின் முழுப் பொருண்மையை அறிய இயலாது என்று அவர் கருதினார் போலும்.

இந்த மண்ணிலேயே அமைந்த இடப் பெயர்கள், பொருட் பெயர்கள் முதலியன காலப் போக்கில் மறக்கப் பட்டிருந்தாலும், சிதைக்கப் பட்டிருந்தாலும், அயல் மொழி யில் அழைக்கப் பட்டிருந்தாலும் அவற்றை எல்லாம் எளிய, தூய தமிழில் மீட்டுருவாக்கித் தர வேண்டும் என்பது மு.வ. வின் பெயர் வைப்புக் கொள்கைகளுள் ஒன்றாகும். எடுத்துக் காட்டுக்களாக வெற்றி நிலையம்,பாரிமுனை முதலான சொற் களைக் கூறலாம். இச் சொல் சென்னையில் உள்ள ஓர் இடத்திற்கு வழங்கப்படுகிறது. இதை ஆங்கிலத்தில் 'பாரீஸ் கார்னர்' என வழங்குகின்றனர். ஆனால் மு. வ. இதைப் பாரிமுனை என்றே வழங்குகிறார். ஏனெனில் இப்பெயர் வழங்கப் பெறும் இடம் தமிழகத்தில் இருப்பதால் அது தமிழ்ப் பெயராலேயே வழங்கப் பெற வேண்டும் என்பது அவர் கொள்கையாகும். இது போலில்லாது, அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களோடு கூடி வந்த சொற்கள் சில தமிழர் நாவில் இயல்பாகப் பழகிப் போயிருப்பின், அதற்கு ஈடாகப் படைத்துக் கொண்ட தமிழ்ச் சொல் அவ்வளவு எளிமையில்லாததாக, பொருட் புலப்பாடு இல்லாததாக இருப்பின் அந்த அயல்மொழிச் சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்பது அவர் கொள்கையாகக் கருதலாம் என்பது முன்பும் குறிப்பிடப்பட்டது.

## 7. தமிழ் மொழியில் பெயர்களை அமைத்தல்

''உன்னால் ஆனவரையில் கடிதம், மணியார்டர், விளம் பரப்பலகை, விற்பனைச் சீட்டு முதலிய எல்லாம் தமிழில் எழுதுக''[48] என்பது மு. வ. தம்பிக்கு என்னும் நூலில் குறிப் பிட்ட தமிழ்ப் பணியாகும். ஒரு பெயர்ப் பலகையையோ, விளம்பரப் பலகையையோ எழுதும்போது தமிழிலேயே அது அமைய வேண்டும் என்பது மு. வ. வலியுறுத்தும் கருத்தாகும். எடுத்துக்காட்டாக ஒரு மன்றத்திற்குப் பெயர் சூட்டும்போது 'இளங்கோ மன்றம்' என்றே ஒரு புதினத்தில் வழங்குகிறார்.

---

48. மு. வ.; தம்பிக்கு; ப. 68

அதுவே, தேவையெனில் பெயர்ப் பலகையில் (Ilango Manram) என ஆங்கிலத்தில் அமையலாம். அப்படி அல்லாமல் ஆங்கிலத்தில் (Tamil Association) எனப் பதிவு செய்து, பெயர்ப் பலகையில் தமிழ் அசோசியேசன் என எழுதுவது அவர் விரும்பாதது. தன்னுடைய நூல் வெளியீட்டகத்திற்குக் கூட அவர் தாயகம்" என்றுதான் பெயர் சூட்டினார். தேவை ஏற்படும்போது 'THAYAGAM' என்பதாகக் குறிக்கப் பெற்றது.

## 8. பண்பு நலன் அடிப்படையில் பெயரிடுதல்

மு. வ. தாம் படைக்கும் பாத்திரங்களுக்குப் பெயரிடும்போது அப்பாத்திரங்களின் பண்பு நலனை விளக்கும் வகையிலும் அப் பெயர்களை வழங்குவார். அருளப்பன் என்று வழங்கினால் அப்பாத்திரம் அருள குணம் நிறைந்ததாக இருக்கும் என்பது உண்மை. கொடுமைக் குணம் நிறைந்த பாத்திரத்திற்கு அருளப்பன் என்றோ, அறவாழி என்றோ அவர் பெயர்வைப்ப தில்லை. **எந்தக் கொடிய பாத்திரத்திற்கும் அவர் நல்ல தமிழ்ப் பெயரை வைத்ததில்லை என்பதும் அறியத் தகுந்தது.** அத்தகைய பாத்திரங்களுக்கு வசீகரம், சகசாம்பாள், சியாமளா முதலிய பிறமொழிப் பெயர்களையே அவர் வழங்கியிருக்கிறார். தமிழ்ப் பெயர் தாங்கிய அவர் புதினப் பாத்திரங்கள் நல்லவர் களாகவே உள்ளனர். இந்த வகையில், தமிழ் நல்லதையே குறிக்கவேண்டும் என்று எண்ணி எழுதிய நல்ல தமிழ் உள்ளம், அவர்பால் அமைந்திருந்ததை அறிய முடிகிறது.

''மு. வ. தம் பெண் பாத்திரங்களுக்குப் பெயரிடும் போது ஒரு முறையைக் கையாண்டுள்ளார்; அவரது பெண் பாத்திரங்களின் பெயர்கள் எல்லாம் அவரவர் பண்புகளை விளக்கும்வகையில் அமைந்திருக்கின்றன. கொள்கையும் குறிக்கோளும் கொண்டு உயர்ந்த வாழ்க்கை வாழும் நல்ல பெண்களுக்குத் தூய தமிழ்ப் பெயர்களை இட்டுள்ளார். திலகம், பாவை, செந்தாமரை, சுடர்விழி, பொன்முடி, மங்கை, மலர் விழி, மென்மொழி, தேமொழி, மான்விழி ஆகிய பெயர்கள் இவ்வகைக்குச் சான்றுகள். உயர்வும் இல்லாமல் தாழ்வும் இல்லாமல், பழங்காலப் போக்கில் வாழும் பெண்களுக்குப் பெயர்களையும் அவ்வாறே இட்டுள்ளார். நாகு, ரேவதி, வள்ளி, சந்திரா, கனகா, அஞ்சலி, சொர்ணம், அன்னம்மா ஆகிய பெயர்கள் இவ்வகையைச் சார்ந்தவை. குறிக்கோளும் பண்பாடும் இல்லாமல் மனம்போன போக்கில் வாழும் பெண்

களுக்குப் பெயர்களையும் அவ்வாறே வைத்துள்ளார். வசீகரம், சகசாம்பாள், சரளாம்பாள், சியாமளா, சரோஜினி போன்ற பெயர்கள் இவ் வகைக்குக் காட்டுக்கள். இந்திரா, இமாவதி ஆகிய இரண்டும் மு. வ. வின் நாவல்களில் காணப்படும் புதுமையான பெண் பெயர்கள் ஆகும்''[49] என்று இரா. மோகன் கூறும் கூற்று இங்குக் கருதத்தக்கது.

தமிழ் நாட்டு ஊர்ப் பெயர்கள் சிதைந்து சீரழிந்து போயிருந்தாலும் அதன் சிதையாத சீரிய வடிவை வழங்கவே மு. வ. முனைந்துள்ளார். அவ்வாறு அவர் வழங்கிய பெயர்கள் திருவல்லிக்கேணி, திருவெவ்வனூர், சோழசிங்கபுரம், அமைந்தகரை, செருவத்தூர், கன்றாப்பூர் முதலியனவாகும்.

சில இடங்களுக்கு நல்ல தமிழ்ப்பெயர்களைச் சூட்டுதல், பிறரும் அவ்வாறு நல்லதமிழ்ப் பெயர்களை உருவாக்க வேண்டும் என்னும்அவர் உள்ளக்கிடக்கைகள் ஒன்றின் வெளிப்பாடாகும். பறம்பு நிலையம் (அல்லி), கம்பர்இல்லம் (மலர்விழி), தென்றல் நிலையம் (செந்தாமரை), அருட்பா மன்றம் (வாடா மலர்), திரு. வி. க. பூங்கா (அகல் விளக்கு), பாரிமுனை (கரித்துண்டு) முதலியன இவ்வுள்ளக்கிடக்கையின் உருவெடுப்புக்களாகும். மேலும் கபிலர் தெரு (மலர்விழி), திருப்பள்ளித் தெரு (செந்தாமரை) எனத் தெருப்பெயர்களைக் கூட நல்ல தமிழில் வழங்குகிறார் மு. வ.

தமிழர் இல்லங்களில் பொருள் புரியாமல் பயன்படுத்தப் பெறும் 'இட்லி' என்பதனை ஆவியில் இட்டு அளிக்கும் உணவு எனப் பொருள்படுமாறு 'இட்டளி' (அகல் விளக்கு. ப. 343) என்று வழங்குகின்றார்.

'ஐஸ் புரூட்' என வழங்குவதற்குப் பதிலாகப் 'பனிப்பழம்' (கள்ளோ? காவியமோ?) என்றும், ஓட்டல் என்பதற்குப் பதிலாக 'உணவுக்கடை' (வாடாமலர்) என்றும் வழங்கியுள்ளார். தமிழ் மண்ணில் வழங்கப் பெறும் பெயர்கள் இயன்ற வரை, தமிழாகவே இருக்க வேண்டும் என்று எண்ணி எழுதும் மு. வ. வின் தமிழ்மொழி உணர்வு போற்றத்தகுந்தது.

---

49 இரா. மோகன்; யான் கண்ட மு. வ ; ப. 68.

இன்றும் பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களும் பொது மக்களும் ஆங்கிலத் தொடர்களையே, ஆங்கிலச்சொற்களையே அதுவும் ஆங்கிலத்திலேயே வழங்குகின்றனர்; தமிழில் ஒலி மாற்றம் செய்து வழங்குகின்றனர். அதாவது ஆங்கிலச் சொல்லை அப்படியே, 'கண்டக்டர்' என்பது போன்று வழங்குவது ஆகும். இவ்வகையான ஒலி மாற்றத்தை மு. வ. ஏற்பதில்லை. அவர் அதற்கு ஈடான தமிழ்ச் சொல்லையே வழங்க வேண்டும் என்ற கொள்கையுடையவராய் இருந்தார். 'கண்டக்ட்' என்ற ஆங்கிலச் சொல்லை 'நற்சான்று' என்றே அவர் குறிப்பிடுவார். இதே போல டிரான்ஸ்பர் சர்டிபிகேட்' டை 'விடுகைத்தாள்' என்ற சொல்லாலே அவர் கூறுவார். எக்ஸாமினேசன் நெம்பரைத் 'தேர்வு எண்' என அகல் விளக்குப் புதினத்தில் உரைத்தார். ஸ்டெதாஸ்கோப்பை 'நாடிக்குழாய், (அல்லி ப. 6 ) என்றார். டியூசனைத் 'தனிப்பாடம் (பெற்ற மனம். ப. 12) என்றார். தர்மா மீட்டரைச் 'சூடளக்கும் கருவி' (செந்தாமரை, ப. 29) என்றார். ஃபேனை 'மின்விசிறி, (கள்ளோ? காவியமோ? ப. 4) ஆடிட்டரைத் 'தணிக்கையர்' (மலர்விழி, ப 30) என்றார். இதைப்போன்று பல சொற்களை அவர் தம் புதினங்களில் படைத்தும் போற்றியும், வளர்த்தும் வாழ்வித்தும் உள்ளார்.

இவ்வாறு சொற்களைப் படைக்சம் போது மு. வ. அவை எளிமையாக இருக்க வேண்டும், இனிமையாக இருக்கவேண்டும், திண்மையாக இருக்க வேண்டும், தெளிவாக இருக்க வேண்டும், நல்ல தமிழாக இருக்கு வேண்டும் என்று எண்ணி எண்ணி உருவாக்கியதை உணரலாம்.

## VI புதினங்களில் தமிழ் இலக்கிய அறிமுகம்

''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை''[50]

என்றும்,

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு — நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் — மணி
யாரம் படைத்த தமிழ்நாடு''[51]

50 பாரதியார்; பாரதியார் கவிதைகள்; தமிழ்—2
51 மேற்படி, செந்தமிழ்நாடு — 7

என்றெல்லாம் தமிழ் இலக்கியத்தையும், தமிழிலக்கியச் சான்றோர்களையும் பாரதியார் அறிமுகப்படுத்தியதுபோல மு.வ. வும் தம் எழுத்துக்களில் வாய்க்கும் இடத்திலெல்லாம் தமிழ் இலக்கியத்தையும், தமிழ் இலக்கியச் சான்றோரையும் தவறாமல் போற்றிக் கூறியிருக்கிறார்.

''தமிழ்மொழி உணர்விலே ஆழ்ந்து, தமிழ்ப் பாட்டிலே தழைத்து, தகைசால் தமிழ்ப் பெரியார் திரு.வி.க.விடம் உள்ளம் ஒன்றி நின்று, தமிழறிஞர் யாவரிடமும் நேயம் பூண்டுத் தமிழ் மக்களுக்கும், இளைஞர்களுக்கும் தமது தொண்டை உரித்தாக்கித் தமிழ்ப் பணியாற்றிய செம்மலவர்''[52] என்ற சிறப்புக்குரிய மு.வ. தமிழர் நல்வாழ்க்கைக்கு வழி காட்டும் வகையில் இங்கே, இம் மண்ணிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த சான்றோரைப் பற்றியும், அத்தகு சான்றோர் படைத்த இலக்கியங்களைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். இதன்வழி நமக்கு அவர், நாம் போற்றிப் பின்பற்றத்தக்க நம் நல்ல பழம் பெருமையை எடுத்துக் கூறுவதுடன் அப் பெருமைக்குக் காரணமாக அமைந்த சான்றோரை நினைவு கூரும் விதமாகவும் தம் இலக்கியத்தைப் படைத்துச் செல்கின்றார். மேலும் ஆறாத் தம் தமிழ்ப் பற்றையும் அங்கங்கே அவர் ஆற்றிக் கொள்கிறார்.

''யாரையாவது ஒரு சான்றோரை அல்லது ஒரு நல்ல நூலை உங்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்துக் கொள்ளுங்கள். ஒரு பிரச்சினையில் உங்களுக்கு ஏதேனும் குழப்பம் நேர்ந்தால், அந்தச் சான்றோர் இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வார் என்றோ, அந்த நூலின் கருத்துப்படி இப்போது என்ன முடிவு செய்வது என்றோ எண்ணிப்பாருங்கள். குழப்பம் தெளிவடையும்''[53] என்று பேராசிரியர் மு.வ. அடிக்கடி மாணவர்க்குக் கூறுவார். இதைத் தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்த சான்றோர் மு.வ. ஆவர். அவர் தெய்வநூல் திருக்குறளையும், பொய்யில் புலவர் திருவள்ளுவரையும் தமக்கு வழிகாட்டிகளாகக் கொண்டொழுகினார்.

---

52 க. அன்பழகன்; மு.நூ; முன்னுரை

53 மாகி. தண்டாயுதம்; டாக்டர் மு.வ. சில நினைவுகள்; ப.62

''வாழ்க்கையில் மனிதர்களின் தொடர்பு கசக்கும் நாள் வரும். ஆனால் உயர்ந்த புத்தகங்களின் கருத்துக்கள் என்றுமே கசப்பதில்லை''[54] என்ற எண்ணம் கொண்டவர் மு. வ.

## சங்க இலக்கியம்

புலமைச் சான்றோர் குழுவினுள்ளேயே குலாவியும் உலாவியும் வந்த சங்கப் பாடல்களை மக்கள் இலக்கியமாகப் பதம் செய்து வழங்கியவர் மு. வ. ஆவர். 'செல்வம்' என்றும் 'விருந்து' என்றும் அகத்திணைப் பாடல்களை அறிமுகப் படுத்னார்; 'தமிழ் நெஞ்சம்' எனப் புறநானூற்றை மக்களிடையே பொலிவுடன் உலாவரச் செய்தார். 'ஓவச் செய்தி', 'கொங்குதேர் வாழ்க்கை' என அவர் சிந்தனையில் விரிவான விளக்கம் பெற்ற பாடல்களும் உள. இவ்வாறு சங்க இலக்கியத்தில் ஆழ்ந்து தோய்ந்த அவருள்ளம் அதைத் தம் புதினங்களிலும் ஆற்றலுடன் எடுத்து மொழிய எண்ணங் கொண்டது. இதன் விளைவே சங்கஇலக்கியச் செய்திகள் அவர்தம் புதினங்களில் இடம் பெற்றதன் காரணம் எனலாம்.

''சங்க இலக்கியம் என்ற கூண்டிற்குள் அடைக்கப்பட்டுக் கிடந்த தமிழைப் பாமரர்களும் அறியும் வண்ணம் எளிய, இனிய, அழகிய தமிழில் எழுதி அனைவரையும் வியக்கச் செய்தவர் டாக்டர் மு. வ. ஆவார்''[55] என்னும் கருத்து, இங்கு நினையத் தகுந்தது ஆகும்

'தமிழ்' என்றாலே, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அகத்திணையைக்குறிக்கும் ஆற்றல் பெற்றதாய் அதுஇருந்தது. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் கற்பிக்க நேர்ந்த கபிலர், அகத்திணையையே அதிலும்,வடவர் யாழோர் மணத்திலிருந்து வேறுபட்ட களவொழுக்கத்தின் தனித் தன்மையைச் சுட்டிக் காட்டும் அறத்தொடு நிற்றலையே தம் குறிஞ்சிப் பாட்டின் வழிப்பாடிக் கற்பித்தார் என்பது வரலாறு.

பிற்காலத்தும் தற்காலத்தும் அகம் அறியாது வேறு பல துறைகளில், மொழிகளில் வல்லார்கள் சங்க இலக்கியம் என்றால், அகத்திணைப் பாடல்கள் என்றால் வெறும் காமம் பற்றியவை என்னும் கருத்தினராய் இருந்தனர். இந்தத்

---

54 மு. வ ; வாடா மலர்; ப. 278

55 நா. சொக்கநாதன்; மு. வ. நினைவு மலர்; ப. 46

தவறான எண்ணத்தைக் களைய மு. வ. பல வழிகளில் முயன்றனர். அவற்றுள் ஒன்று, புதினங்களில் சங்க இலக்கியத்தைப் போற்றுதல், எடுத்தாளல் என்பது. எடுத்தாளலில், அதன் பெற்றியையும் இலக்கிய நய அழகினையும் வலியுறுத்திக் கூறுவதைக் கடமையாகக் கொண்டிருந்தார்.

'பாவை' என்ற புதினத்திற்கு எழுதிய முன்னுரையில் கீழ் வருமாறு கூறுகிறார்.

''தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கிய-இலக்கணத்தைப் பற்றிப் பேச்சு நிகழ்ந்தபோது நண்பர் ஒருவர், 'இதென்ன அய்யா! காலத்திற்கு உதவாத கருத்துக்கள்! களவொழுக்கம் என்றால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது. பகற்குறி, இரவுக் குறி, ஒருவழித் தணத்தல், அம்பல், அலர், இற்செறிப்பு, பசலை, தோழி, உடன்போக்கு— இந்தப் பெயர்களே பிடிக்க வில்லை' என்றார்.

'காலத்திற்கு உதவாத கருத்துக்கள் அல்ல. இக்காலத்தில் விளங்காத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இன்றும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில்தான் இருக்கிறது. களவொழுக்கத்தின் தினைப் புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது. உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறிவிட்டாலும் நாட்டுப் புறங்களில் பெரும்பாலும் அப்படியே இருக்கிறது' என்று ஒரு கதையைப் புனைந்து சொன்னேன். காலப்போக்கால் நேர்ந்துள்ள சிற்சில வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டினேன். அவ்வாறு அப்போது புனைந்த கதையே, 'பாவை'யாக எழுத்துருவம் பெற்றது.''

இவ்வாறு உரைத்த மு.வ., 'பாவை'யல்லாது இன்னும் பிற புதினங்களிலும் சங்க இலக்கியப் பொலிவைப் புனைந்துரைத்திருக்கிறார். 'செந்தாமரை'யில் 'செந்தார்ப் பைங்கிளி' முதலான பல அகத்திணைப் பாடல்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

''செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை......

என்ன அழகான ஓவியம்! ஓர் அழகான காதலியின் ஓவியம்! அல்ல, அல்ல, சிறந்த நுட்பமான காதலின் ஓவியம்! வாழ்க அகநானூறு என்று வாழ்த்தினேன்''[56] என்று அப்புதினத்தில் அகநானூற்றுப் பாடலொன்றின் பெற்றியை ஒரு காதல் உள்ளத்தின் வாயாலே போற்றியுரைக்கப் படைத்திருக்கிறார். இதே புதினத்தில், இதே பாடலைப் பற்றிப் பின்னர் ஓரிடத்தில் கூறும்போது ''செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி, என்று அந்தப் புலவர் பாடினாரே, அதுவும் என்னைப் போல மனைவியைப் பிரிந்து எண்ணிக் கொண்டிருந்தபோது பாடிய பாட்டாக இருக்க வேண்டும். பாலைத்திணைப் பாட்டெல்லாம் அப்படிப்பட்ட மனத்தில் தான் பிறந்திருக்க வேண்டும்''[57] என்று மேலும் இதுபற்றிப் படைத்துக் கூறுவார்.

அகநானூற்றுப் பாடல்கள் ஒரு நல்ல காதல் வாழ்க்கைக்குப் படிப்பினைப் பாடல்களாக மு.வ.வினால் பல இடங்களில் காட்டப்பெறுகின்றன. ''அகநானூற்றையாவது படிக்கலாம் என்று அந்தப் புத்தகத்தை எடுத்து அப்படியே திறந்தேன். 'ஆதிமந்தி போலப் பேதுற்று, இகுவேன் கொல்லோ' என்ற அடிகள் என் கண் எதிரே இருந்தன. ஆதிமந்தி பைத்தியமானதை எண்ணினேன். காதல் முறிந்தால் அறிவே முறிந்து போகின்றது; பைத்தியம் பிடிக்கின்றது. உள்ளம் கெட்டு உணர்வுகெட்டு உடலும் கெடுகின்றது. காதலுக்கு இவ்வளவு ஆற்றலா?''[58] என்று படிப்பவரையும் வியக்கவைக்கும்படிப் புதினங்களில் அகத்திணைப் பாடல்களை ஆற்றலுற எழுதிச் செல்லுகிறார்.

காதல் எந்தக் காலத்திற்கும் பொதுவானது. அதைக் கொள்ளும் மக்கள் உணர்ச்சியில் அன்றும் இன்றும் ஏன் என்றைக்கும் எந்த மாற்றமுமில்லை; இருக்காது. அது மானுட உயிர்களுடன் பிறந்த ஒன்று; அதற்கு என்றுமே மூப்பும் இல்லை இறப்பும் இல்லை. ''ஒரு குறுந்தொகைப் பாட்டு நினைவில் இல்லை. ஒரு தலைவிதான் சொல்கிறாள்; தோழிக்குச் சொல்கிறாள். தன் தாய் வீட்டுத் தோட்டத்துத் தேன் கலந்த பால் அவளுக்கு இனிக்கவில்லையாம். கணவனுடைய நாட்டுக் கலங்கல் நீர்தான் இனிக்கிறதாம். அந்தப்

56 மு. வ.; செந்தாமரை; பக்.89
57 மேற்படி; ப 59
58 மேற்படி; ப. 68

பாட்டு, வாழ்க்கையை எவ்வளவு நன்றாக எடுத்துக் காட்டுகின்றது''[59] என்று ஒரு காதலியின் மனநிலையைச் 'செந்தாமரை'யில் எடுத்து மொழிகிறார் மு.வ. இதே புதினத்தில் பிறிதோர் இடத்தில் (ப.123) ''குறுந்தொகைக் காலத்தில், நான் இருந்திருந்தால், 'மிளகுநீரில் உப்பு இடாமல் போனால் என்ன? சமைத்தவளின் அன்பை விட வேறு சுவை ஏன்?' என்று பாடியிருப்பேன்''[60] என்று ஒரு பாத்திரத்தின் மூலம் அக் குறுந்தொகைப் பாடலை விமர்சிக்கிறார் மு.வ.

மு. வ. படைத்துக் காட்டும் மாந்தர்கள் சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலியனவற்றிலே ஈடுபாடு கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். 'மலர்விழி'யில் தலைமைக் கதை மாந்தர்களாக விளங்கும் செல்வநாயகமும் காஞ்சனையும் சங்க இலக்கியத்திலும் ஓவியத்திலும் ஈடுபாடு கொண்ட கலைஞர்களாகத் திகழ்கிறார்கள். செல்வ நாயகத்தின் விருந்தினர் அறையில் அழகாக வைக்கப் பெற்றிருந்த ஓவியங்கள் 'சங்க இலக்கியக் காதல் காட்சிகளின் வண்ணக் காவியங்களாகக் காட்சியளித்தன. 'எவ்வழி அறிதும்' (குறு40), 'நுண்ணிதின் மகிழ்நதன்று'(குறு.167) என்னும் குறுந்தொகைத் தொடர்கள் ஓவியங்களாக உருவெடுத்திருந்தன. காதலுக்குச் சிறந்த இலக்கணம் கூறும் 'யாயும் ஞாயும் யாராகியரோ' என்ற பாடலும், கற்பு ஆகிய இல்லற வாழ்வின் நல்லறம் பேணும்'முளிதயிர் பிசைந்த'என்ற பாடலும் எடுத்துக்காட்டுக்களாகக் காட்டப் பெறுகின்றன.

''செல்வ நாயகத்தின் முகத்தையும் அந்த அம்மாவின் முகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் ஆசை தோன்றியது; பார்த்தேன். 'நுண்ணிதின் மகிழ்ந்தன்று' என்ற அந்தப் பாட்டின் படம் அப்போது நினைவுக்கு வந்தது. அத்தகைய குடும்பம்தான் இதுவும் என்று உள்ளத்தில் மகிழ்ந்தேன்''[61] என்று 'மலர்விழி'யில் ஒரு பாத்திரத்தின் மூலம் மற்ற பாத்ரங்களை வருணிக்கும்பொழுது, உயர்வான இல்லறப்பண்பைக் குறிக்கும் அப் பாடலோடு பொருத்திப் பார்ப்பது மு வ. விற்கே உரிய ஒரு தனி நடையாக அமைகிறது. இதேபோல, இதே புதினத்தில் மற்றோர் இடத்தில் 'யாயும் ஞாயும் யாரா

59 மேற்படி; ப. 122
60 மேற்படி; ப. 123
61 மு. வ.; மலர்விழி; ப.15

கியரோ' என்ற பாடலுக்குச் சிறப்புத் தேடும் வகையில், "என் பார்வை அந்த அழகான ஓவியத்தின் மேல் சென்றது. அருகே சென்று பார்க்க மனம் தூண்டியது. ஆனால் அளவோடு நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவு தடுத்தது படத்தை அணுகிப் பார்த்தேன். 'யானும் நீயும் எவ்வழி அறிதும்?"[62] என்றிருந்ததாகப் படைத்துக் கூறுவார் மு.வ. இதே பாடலை மேலும் நினைந்து போற்றும் வகையில் இப்புதினத்திலேயே, "அப்போது அவர்கள் புன்முறுவலோடு இணையாக நின்ற அந்தக் காட்சி, மறுபடியும் கூடத்து ஓவியத்தையே நினைவூட்டியது. 'யானும் நீயும் எவ்வழி அறிதும்' என்ற அந்த மணிமொழியை நினைந்து கொண்டே நடந்தேன்"[63] என ஒரு பாத்திரத்தின் கூற்றாகக் கூறுவார் மு.வ.

இதே பாடலை 'நெஞ்சில் ஒரு முள்'ளிலும், "செம்புலப் பெயல்நீர் போல, அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' போன்ற பாட்டுக்களின் உணர்ச்சியில் மட்டுமே மனம் தோய்ந்துவிட்டது'[64] என எழுதுகிறார் மு.வ.

ஆக, "யாயும் ஞாயும் யாராகியரோ" என்னும் அந்தக் குறிப்பிட்ட பாடல் அவர் நெஞ்சை மிகவும் கவர்ந்திருக் கிறது என்பதை அறிய முடிகிறது. அத்துணை அளவிற்கு அப் பாடலில் பொருள் சிறப்பு உண்டு என்பது மறுக்கவியலாது.

மு வ. இதயம் சங்க இலக்கியம் காட்டும் இயற்கைக் காட்சிகளிலேயே தன்னை இழந்திருந்தது. இது புதினங்களில் ஆங்காங்கே புனைந்துரைகளாகப் புதுவடிவம் பெற்றிருக் கிறது

"அந்தப் பொம்மை என்மகள் நறுமலர்க்கு மகள் ஆகி விட்டது. தன் தாய் தன்னைப் பாராட்டுவது போலவே நறுமலர் அந்தப் பொம்மைக் குழந்தையைப் பாராட்டக்

62 மேற்படி; ப 27
63 மேற்படி; ப. 28
64 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 20

கற்றுக்கொண்டாள்''[65] என்று மண்குடிசையில் படைத்துக் காட்டுவார் மு வ. இது 'என் கண் பாவைக்கு இனிய நல் பாவை' என்னும் குறுந்தொகைப் பாடலின் (114) உணர்வை அப்படியே வழங்குகிறது.

''அவர்கள் போன வழியில் ஒரு சேவல் எதையோ கொத்தியபடியே பெருமிதத்தோடு ஒரு வகை ஒலி செய்தது. பெட்டைக்கோழி ஒன்று உடனே அங்கு ஓடிவர, கிக்கிக் என்று ஒலி செய்துவிட்டுச் சேவல் தன் தலையைத் தூக்கிப் பெருமிதத் தோடு பார்த்தது. பெட்டைக்கோழி அந்த இடத்தில் குத்தி ஒரு பெரிய பூரானைத் தன் அலகால் எடுத்தது. அந்தப் பூரான் குற்றுயிராய்த் துடித்து விழுந்து ஓடத் தொடங்கியது. கோழி மறுபடியும் அதைக் குத்தி எடுத்தது. சேவல் எதையோ தியாகம் செய்து மகிழ்வது போல், தலையை நிமிர்த்து நின்று பார்த்துக் கொண்டிருந்தது''[66] என்று மு. வ. 'மண் குடிசை'யில் மிக அழகான ஓர் இயற்கைக் காட்சியைப் படைத்துக் காட்டு கிறார். இக் காட்சி நற்றிணையில் (21) இடம் பெற்ற சேவல் ஒன்றின் பெருமித நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

சங்க இலக்கியம் போல வாழ்வுக்குப் பயனுள்ள, சமுதாயத் திற்கு நலம் பயக்கவல்ல புதினங்களையே அவர் படைத்தார். சங்க இலக்கியம், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனி யிடத்தை வகிப்பது போல மு. வ. படைப்புக்களும் தமிழ் இலக்கியப் புதினங்களில் ஒரு தனியிடத்தை வகிப்பதை யாரும் மறுக்க முடியாது; மறைக்க முடியாது. இதற்குக் காரணம், சங்க இலக்கியம் முதலியவற்றோடு அவருக்கிருந்த ஈடுபாடே அடிப்படை எனலாம்.

## திருக்குறள்

திருக்குறளை வாழ்க்கை நூலாகக் காட்ட அவர் உள்ளம் விழைந்தது. 'திருவள்ளுவரும் வாழ்க்கை விளக்கமும்' என்று திருக்குறளை வாழ்வியல் நூலாகச் சிந்தித்த அவர்தம் உள்ளம் தம் புதினங்களின்வழி, புதினக் கதை மாந்தர்வழி அதனை நிலைநாட்ட முந்துகிறது. 'கயமை' என்ற புதினமே குறளின் அதிகார விளக்கமாக அமைகிறது. கயமைக்கு அவர் முதலில் அமைத்த முன்னுரை, கயமைக் குறள் பத்துமே ஆகும்.

65 மு. வ.; மண்குடிசை; ப. 307

66 மேற்படி; பக். 16 - 17

திருக்குறளை மறையாகச் சொல்லித் திருமணம் செய்தல் வேண்டும்; தமிழர் விழாக்களில் திருக்குறளை வழங்கல் வேண்டும்; தமிழர்தம் இல்லங்களில் எல்லாம் திருக்குறள் நாளும் ஒலிக்கப் பெறல் வேண்டும்; ஓதப் பெறல் வேண்டும் என்று அவர் விழைந்தார். இன்றும் தமிழ்ப் பட்டப் படிப்பில் இடம் பெறுதற்குரிய தகுதிகளில் ஒன்றாக அவர் தனிப்படக் கருதியது திருக்குறள் அறிவே.

'செந்தாமரை'யில் கதைத் தலைவன் திருக்குறள் ஓதித் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான்.

''என் திருமணத்தில் அந்தக் காமத்துப்பாலையும் மந்திரமாக ஓத வைக்க வேண்டும். திருமணம் எளிய முறையில் நடக்க வேண்டும். வேறுபாடும் வேண்டா. மருதப்பனும் அவன் மனைவியும் போதும். மந்திரக்காரனும் தந்திரக்காரனும் வேண்டா. ஆடம்பரமும் ஆரவாரமும் வேண்டா. மருதப்பன் போதும். திருக்குறள் ஓதுவான். அவனுடைய மனைவி போதும்; ஆரத்தி சுற்றி வாழ்த்துவாள். இதற்குமேல் செய்தால் என் மனம் என்னைச் சுடும். எம். ஏ. படித்தும் கோழை என்று சுடும்''[67] என்று மு. வ. செந்தாமரையில் எழுதியிருக்கிறார்.

அகல்விளக்கில் (ப. 311) திருக்குறள் வழங்கப் பெறும் செய்திகள் இடம்பெறல் காணலாம். அமெரிக்காவில் ஓஹியோ பல்கலைக் கழகம் சென்ற அருளப்பன் (பெற்ற மனம் ப. 145) திருக்குறளைப் பற்றி உலக நூலாகப் போற்றிப் பேசுகிறான்.

திருக்குறளை ஒவ்வொருவரும் மனப்பாடம் செய்து, அவற்றை வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மு.வ. 'கயமை' (ப.138), 'நெஞ்சில் ஒரு முள்' (ப.431) முதலிய புதினங்களிலும் வலியுறுத்துகிறார். ''கரித்துண்டு, கயமை முதலிய புதினங்களிலே வள்ளுவம் ஈடிணையற்ற தத்துவ நூலாகக் காட்டப்பட்டு அதன் ஒளியில் அமைதி நிலைநாட்டப்படுகிறது.''[68]

கரித்துண்டில், திருவேங்கடம் நெஞ்சம் தன் மனையாளின் மூடநம்பிக்கைகளைக் கண்டு வெறுக்கத் துவங்கியபோது தன்

67 மு. வ.; செந்தாமரை; ப. 125

68 ம.ரா போ. குருசாமி; மு.வ. முப்பால்; ப.59

ஆசிரியர் திருக்குறள் ஒன்றுக்குத் தந்த புதிய விளக்கம் ஒன்றால் தெளிவு பெற்றதாக வரும் பகுதியும் இங்கு எண்ணத்தக்கது.

''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்'' என்ற திருக்குறள் நினைவுக்கு வந்தது. குறள் வகுப்பு நடத்தியபோது தமிழ் ஆசிரியர் அதற்குச் சொன்ன விளக்கமும் நினைவுக்கு வந்தது. 'இது அரசியலுக்கு மட்டும் அல்ல; குடும்ப இயலுக்கும் கொள்ளத்தக்கது. உங்கள் எதிர் கால மனைவியரிடம் குற்றம் காணும்போது குணத்தையும் காணுங்கள். மிகைநாடி மிக்க கொள்ளுங்கள்' என்று ஆசிரியர் சொன்னது தக்க சமயத்தில் வந்து காத்தது''[69] என்பது அது.

திருவள்ளுவர் கண்ட காதலும் கற்பும் இல்வாழ்வும் செயற்கை அல்ல, மிகமிக இயல்பானவை என்ற உண்மையைப் புறாக்களின் வாழ்வின்வழி 'நெஞ்சில் ஒரு முள்'ளில் (ப.304) உணர்த்துகிறார்.

தாள் தொழல் என்றால் என்ன? என்று ஒரு வினாவை எழுப்பி, அதற்குக் கீழ்வரும் விளக்கத்தை 'நெஞ்சில் ஒரு முள்'ளில் (ப. 409) தருகிறார் மு.வ.

''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின் - என்ற குறளுக்கு அவர் இப்படித்தான் விளக்கம் சொன்னார். கடவுளின் தாள் தொழல் என்பது அவனுடைய நெறியில் நிற்றல் என்று விளக்கம் சொன்னார். நெறி நின்றார் நீடு வாழ்வார் என்று திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார். படைப்பின் உண்மைகளை உணர்ந்து மதித்து நடத்தலே கடவுள் வழிபாடு என்பது அவருடைய கருத்து.''

மலர்விழியில் இடம் பெறும் காஞ்சனையும் நாகுவும் அழிவுற்றமைக்கு நன்றி கொன்றமையே காரணம் என்று திருக்குறள் வழி வலியுறுத்தப்படுகிறது.

''உலகத்தை உருக்குலையாமல் கட்டிக் காப்பாற்றும் அந்த நன்றியுணர்வு ஒன்று இருந்தால் போதும். அது அந்த அம்மா வுக்கு இல்லை. நாகுக்கு இல்லையே. அதனால்தான் வாழ்க்கை

69 மு வ.; கரித்துண்டு; பக். 40 — 41

யில் தடுமாறி நிற்கிறார்கள். 'செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வு இல்லை' உண்மைதான். உலக வாழ்க்கையை நெடுங் காலம் கண்டு உணர்ந்து எழுதிய உண்மைதான்''[70] என்பர்.

மாண்டிஸோரி புதுக்கல்வித் திட்டத்தைக் காணும்போது, கல்விமுறை — 'தொட்டனைத் தூறும் மணற்கேணி'யின் தத்துவம், 'மலர்விழி'யில் (ப. 267) துலக்கமடைகிறது. இல் வாழ்வு சமுதாய வாழ்வாக விரிவடையும் பெற்றி வள்ளுவரால் எவ்வாறு எண்ணப்படுகிறது என்பது 'நெஞ்சில் ஒரு முள்'ளில் (ப. 450) கீழ்வருமாறு உரைக்கப்படுகிறது.

''குடும்பத்தின் அளவில் மனம் நிற்கும்போது, யான் எனது என்னும் எண்ணங்களே இருக்கின்றன. அந்த எண்ணங்கள் மாறும்படியாகச் சிலருக்குத் தொண்டு செய்தாலும் போதும். அன்பு பற்றிச் சொன்ன திருவள்ளுவர், அடுத்து வரும் விருந் தோம்பல் பற்றிச் சொல்கிறார். யான்எனது என்ற எண்ணங் களே இல்லாமல் தொண்டு செய்வதற்கு ஒரு வழியது.''

கதை மாந்தர் உரையாடல்களிலும் மு.வ. அங்கங்கே திருக்குறள் அடிகளைக் கையாள்கிறார். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' (அகல் விளக்கு. ப.311), 'யாகாவாரா யினும் நாகாக்க' (கயமை. ப 232), 'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' (கயமை. ப. 199), 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' (பெற்ற மனம். ப 194), 'ஏதிலார்போல் பொதுநோக்கு நோக்குதல் காதலர் கண்ணே உள'(செந்தாமரை. ப.113), 'நிற்க அதற்குத் தக' (மண் குடிசை. ப. 47), 'வேண்டாமை அன்ன விழுச் செல்வம்' (அகல் விளக்கு ப. 193), 'பொருளில்லார்க்கு இவ் வுலகம் இல்லை' (அகல் விளக்கு ப. 277) என்னும் பல குறள் தொடர்களை உரிய இடத்தில் கையாண்டு, தம் புதினங் களை வாழ்க்கைக்குப் பயன் நல்கும் புதினங்களாகப் படைத் திருக்கிறார்.

தற்காலச் சமுதாய வாழ்வில் திருக்குறளைப் பின்பற்று வோர்க்கு ஏற்படும் சில தடுமாற்றங்களையும் மு. வ. குறிப் பிடத் தவறவில்லை.

''தொடர்பும் பழக்கமும் இல்லாதிருந்தாலும் உண்மை யான நட்பு நீடிக்கும் என்று திருவள்ளுவர் கூறுகிறாரே என்றேன்.

---

70 மு. வ.; மலர்விழி; ப.229

'உயர்ந்த மக்கள் சிலருக்கு அது உண்மையாக இருக்கலாம். ஆனால் சாதாரணமானவர்களுக்குத் தொடர்பும் பழக்கமும் இல்லாவிட்டால் நட்பு குறைந்து போகிறது. இளமையில் என்னோடு பழகிய நண்பர்கள் எங்கோ இருக்கிறார்கள். மறந்தே போய்விட்டேன்' என்றார்''[71] என்று மு.வ. அகல் விளக்கிலே கூறுவார். மேலும் இதே புதினத்தில் (ப.287) ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று சொன்னால் உலகில் எந்த வகையான மக்களைப் பார்த்து நடப்பது? முன் காலத்தில் நம்நாட்டு நாகரிகமே ஒரு கிராம அமைப்புப் போல் தெளிவாக, எளிமையாக இருந்தது. இப்போது நம் நாட்டு வாழ்க்கை ஒரு சந்தை போல் பெருங்கலப்பாக ஆரவாரமாக ஆகிவிட்டது. ஆகையால், இப்போது உலகத்தாரைப் போல் நடப்பது என்றால் யாரைப் பார்த்து நடப்பது'' என்று கேள்வி கேட்டுச் சிந்திக்கவைப்பார் மு. வ.

திருவள்ளுவர் காலத்தில் இருந்த சமுதாயம் வேறு. இந்தக் காலத்தில் இருக்கும் சமுதாயம் வேறு. அந்தக்காலத்தில் ஆணுக்குப் பெண் அடக்கம் என்றநிலை இருந்தது. இன்றோ அப்படி இல்லை. அரசியலிலும் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காகத் தன்னையே தியாகம் செய்யும் தன்னலமற்ற தூய அரசியல்வாதிகளும் அரசர்களும் இருந்தார்கள். இன்றோ அவ்வாறானவர்கள் இருக்கவே வாய்ப்பில்லை. இதை மனதிற் கொண்டுதான் மு. வ 'நெஞ்சில் ஒரு முள்'ளில் கீழ்வருமாறு எழுதுகிறார்.

''திருவள்ளுவரின் காலத்தில்பெண்களுக்கும் ஆண்களுக்கும் இருந்த நம்பிக்கைகளும் மனநிலையும் இப்போது இல்லையே. அவர் காலத்தில் வாழ்க்கைக் கவலையும் ஏக்கமும் குறைவு. அந்தக் காலத்தில் கிளியும் புறாவும் போல் மக்கள் வாழமுடிந்தது. இப்போது ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்களே அரசியல், கல்வி, வாணிபம், சமயம் எல்லாவற்றிலும் தலைமைப் பதவியில் இருக்கிறார்கள்.''[72]

''அந்த அழகான திருக்குறளை முதல் முதலாக அந்த மேசை மேல் பிரித்து வைத்தேன். 'பொருள் செயல் வகை' என்ற அதிகாரத்தின் தலைப்பைக் கண்டேன்.

---

71 மு. வ.; அகல் விளக்கு; ப. 267

72 மு வ ; நெஞ்சில் ஒரு முள்; ப. 481

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்'

'இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு'

'பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று'

முதலில் இருந்த இந்தமூன்று குறளும்படித்தவுடன் புத்தகத்தை அப்படியே விட்டுவிட்டுச் சிந்திக்கத் தொடங்கினேன். காலம் மாறி விட்டது. இது புதுவகையானகாலம். செல்வம் இருந்தால் தான் இந்தக் காலத்தில் மதிப்பு என்று பேசிக் கொள்கிறோம்; ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் எழு தியதும் இப்படியே இருக்கிறது''[73] என்று 'நெஞ்சில் ஒருமுள்' ளில் எழுதுவார் மு.வ.

''அடுத்த பொருள் பற்றிப் படிக்கட்டுமா? என்றேன்.
அடுத்தது என்ன?
மழையைப் பற்றி...
சரி! படி.

வான் சிறப்பில் உள்ள கருத்துக்களை வரிசையாகப் படித் தேன். இப்படி யாரும் எழுதியதாகக் கேள்விப் பட்டதில்லை தெளிவாக அழகாக எழுதியிருக்கிறார். கடவுளுக்கு அடுத்தபடி மழையை வைத்துச் சிறப்பாகச் சொன்னது மிகமிக நல்லது என்றார்''[74] என்று மேற்கூறிய அதே புதினத்தில் எழுதியிருக் கிறார் மு.வ. திருவள்ளுவரின் அதிகார வைப்பு முறையைக் கூட புதினங்களில் ஆய்ந்த ஒருவர் மு. வ. அன்றி வேறு யாரும் இருக்க இயலாது.

திருக்குறள் வலியுறுத்தும் இல்வாழ்க்கை நெறியில் மு. வ. விற்கு ஒரு பிடிப்பு உண்டு. அவர் துறவறத்தை விட இல்லறத் தையே நல்லறம் என ஏற்றுக் கொண்டவர். அதனால்தான், ''எல்லாரும் துறவு, துறவு, என்று துறவறத்தைப் புகழ் வதையே கடமையாக எழுதிவிட்டார்கள். ரிஷிகள், முனிவர் கள், சந்நியாசிகள், பிட்சுகள் என்று பெருமைப் படுத்தியே நிறைய எழுதிவிட்டார்கள். தமிழில் இப்படி ஒரு பெரியவர் குடும்ப வாழ்க்கையைப் பெருமையாக எழுதி வைத்திருக்கிறார்.

73 மேற்படி; பக். 36—37

74 மேற்படி; ப. 56

இது பெரிய வேலைதான்''[75] என்று 'நெஞ்சில் ஒரு முள்'ளில் அவர் எழுதியுள்ளார்.

'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரக் கருத்துக்களும் மு. வ. வைப் பெரிதும் கவர்ந்தன போலும். எனவேதான், ''இதுவும் நல்ல கருத்துக்கள் உடையது. பெரிய பெரிய புராணங்கள் படித்தும், ஆண்களும் பெண்களும் அறிவு பெறுவது அரிதாக இருக்கிறது. இந்தப் பத்தும் அந்தப் பத்தும் உண்மையாக உணர்ந்து நம்பிக்கையோடு படித்தால் போதுமே என்றார்''[76] என்று எழுதுகிறார்.

குறளில் கூறப்பெறும் கருத்துக்கள் மு. வ. விற்கு வேத வாக்கு போல் தோன்றுகின்றன. அவை ஏதோ வெறும் வாசகங்களாக அவருக்குத் தெரியவில்லை; வாழ்க்கைக்கு உகந்த சாசனங்களாகத் தெரிகின்றன. ''எல்லாம் மிகப் பொருத்தமான கருத்துக்கள். தள்ளக் கூடியது ஒன்றும் இல்லையே. நல்ல புத்தகம் இது''[77] என்று வடநாட்டு விஜயா அம்மையார் வாயிலாக ''நெஞ்சில் ஒரு முள்'ளில் சிறப்பித்துக் கூறுகிறார்.

குறளின் அரசியல் கருத்துக்கள் அற்றைக்கு மட்டுமன்று; இற்றைக்கும் பொருந்துவது கண்கூடு. ''மிக நன்றாக இருக்கிறதே. இந்தக் காலத்து அரசியலுக்கும் பொருத்தமாக இருக்கிறதே. அவ்வளவு பழங்காலத்திலேயே ஒருவருக்கு அரசியலில் இவ்வளவு தெளிவான அறிவு இருந்திருக்கிறதே என்று வியந்தார்''[78]. ''வலியறிதல், காலமறிதல், இடனறிதல் ஆகியவற்றில் சிற்சில படித்தேன். எழுந்து நின்று என் முதுகைத் தட்டி, 'இவ்வளவு நன்றாக இருக்கும் என்று நான் எண்ணவே இல்லையே' என்றார்''[79] என்று மு. வ. திருக்குறளின் அதிகாரங்களின் பெருமைகளை எல்லாம் அந்த அம்மையார் வாயிலாக மேலும் விரித்துப் பேசிச் செல்வார்.

திருக்குறளின் மூன்று பகுதிகளிலே ஒவ்வொரு மனிதனும் கட்டாயமாக முதல்பகுதி நீங்கலாகவாவது மீதமுள்ள பின்

75 மேற்படி; ப.57
76 மேற்படி
77 மேற்படி; ப. 69
78 மேற்படி; ப. 104
79 மேற்படி; ப.105

னிரண்டு பகுதிகளைக் கற்க வேண்டும் என்று விஜயாவும் வற்புறுத்துகிறார். 'நீ இந்தப் புத்தகத்தில் இரண்டாம் பகுதியையும், மூன்றாம் பகுதியையும் தவறாமல் படிக்க வேண்டும். வாழ்க்கைக்கு மிகமிக வேண்டியவை' என்றார்''[80] என்று எழுதுகிறார். திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்றிலே மனிதன் மண்ணுலகில் நெறியோடு வாழப் பொருட்பாலும் இன்பத்துப் பாலும் மிகுதியாகத் துணை நிற்கும் என்பது மு. வ. கருத்தாகும்.

மனிதன் நீக்க வேண்டிய கேடுகளிலே சூதாட்டத்தையும் ஒன்றாக நினைக்கிறார் மு. வ. ''அரசர்கள் முதல் எல்லாரும் இவற்றை ஆடி வந்தார்கள். கடமைகளை மறக்கச் செய்து சோம்பேறிகள் ஆக்கும் என்று திருவள்ளுவர் முதலான பெரியோர்கள் கடிந்து எழுதியிருக்கிறார்கள். அதனால் மதிப்புக் குறைந்தது''[81] எனத் தம் கருத்துக்கும் அரண் செய்பவராகத் திருவள்ளுவரைக் கொள்ளுகிறார் மு. வ.

இப்படிப் பல சூழ்நிலைகளில் மு. வ திருக்குறளை எடுத்தாள்வது கீழ்வரும் சில காரணங்களுக்காக இருக்கலாம்.

அது ஒரு தமிழ் நூல்; தலையாய தமிழ் நூல். திருக்குறள், தமிழ்ச் சமுதாயத்திலிருந்து உலகச் சமுதாயம் முழுமைக்கும் ஏற்புடைத்தாக இருக்கும் இயல்பான சிறப்பைச் சொல்லுவதாக இருக்கலாம்.

மற்றொன்று, ஒவ்வொரு தமிழனும் திருக்குறளைப்பற்றிப் பொதுவாகவாவது அறிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி எழுதியிருக்கலாம்.

வேறொன்று, தமிழ்ச் சமுதாயத்தின் மீதிருந்த அக்கறை காரணமாக, அச்சமுதாயம் சிறக்க, செழிக்க, வாழ வழி கூறும் வள்ளுவத்தை, அதன் வளமான சிந்தனையை வழங்க வேண்டும் என்று நினைந்து எழுதியிருக்கலாம்.

இவைபோல இன்னும் பிற காரணங்களைக் கூறலாம். ஆனால், எந்நிலையிலும் திருக்குறளைப்போல மானிட நல்

---

80 மேற்படி; ப. 208
81 மேற்படி

வாழ்க்கைக்கு உரிய வழிகூறும் நூல் வேறெதுவும் இல்லை. ஆதலினால் அதனை மு. வ. தம் புதினங்களிலே நினைந்து நினைந்து, பிறர் நெஞ்சங்களிலே புகுந்து சிறந்து வாழும் வள்ளுவமாகப் படைத்திருக்கிறார் என்பது பெறப்படும் உண்மை ஆகும்.

## குறளும் கீதையும்

இந்தியத் தத்துவஞான நூல்களில் பகவத் கீதைக்கு ஒரு தனியிடம் உண்டு. அத்தகைய கீதையோடு தமிழ்மறையாகிய திருக்குறளைப் பலவிடங்களில் ஒப்பிட்டு மு.வ. எழுதிச் செல்லு கிறார்.

வடநாட்டுச் செல்வச் சீமாட்டி ஒருத்தி, திருக்குறளைக் கற்கத் துவங்கிய போது அவள் நெஞ்சில் எழுந்த நினைவு களாக, வடநாட்டு வாழ்க்கைச் சிந்தனையோடு வள்ளுவர் சிந்தனைகளும் ஒப்புநோக்கப் பெறுகின்றன.

''பெயர் சுந்தரம். அவர் ஒரு புத்தகம் கொடுத்தார். திருக் குறள் என்று; அதைக் கொண்டு வா! என்னுடைய பகவத் கீதைக்குப் பக்கத்தில் இருக்கும் பார்' என்றார்.

உடனே என்னைப் பார்த்து, 'தமிழிலே இதுதான் மிக உயர்ந்த புத்தகமாம்' என்றார்''[82] என்று 'நெஞ்சில் ஒரு முள்' ளில் எழுதுவார் மு. வ. இவ்வுரையாடல் பகுதியில், பகவத் கீதைக்கு ஒப்ப திருக்குறள் உயர்வான நூல் எனத் தெளிவாகச் சொல்லிக்காட்டி, அதே நேரத்தில் 'பகவத்கீதைக்குப் பக்கத்தில் இருக்கும் பார்' என்பதன்மூலம் அதற்கொப்ப வைத்து எண் ணப்பெறும் நிலையையும் அவர் மறைமுகமாகச் சொல்லிச் செல்லும் விதத்தையும் அறியலாம்.

''கீதை படித்துப் பார். வெறுப்பு இருந்தாலும் பயம் இருந் தாலும் சோர்வு இருந்தாலும் எல்லாம் போய்விடும். மனிதன் தப்பு செய்வது இயற்கை என்று சொல்வார்கள். தப்பு செய் தவனுக்கும் உலகத்தில் வாழ்க்கை வேண்டும் அல்லவா? அவனுக்குச் சோர்வும் வெறுப்பும் உண்டாக்கினால் பயன் என்ன? என்றார்''[83] என்று 'நெஞ்சில் ஒரு முள்'ளில் எழுது கிறார் மு.வ. இங்கு, ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்

82 மேற்படி; ப. 35
83 மு. வ.; மேற்படி ப. 59

நாண, நன்னயம் செய்து விடல்''[84] என்ற குறள் கூறும் கருத்தைப் பகவத்கீதை கருத்தோடு ஒப்பிட்டுக் கூறி அவர் விளக்குகிறார்.

உயிர்க்கொலையும், புலால் உண்ணுதலும் பாவங்களாகத் திருவள்ளுவரால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன. மக்கள் இன்னமும் இவற்றினின்று விடுபட முடியாமல் இருப்பதையும் மு வ. அறிவார். இதைப்பற்றி ஒருவரும் கவலைப்படாதிருப்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக, ''புலால் உண்ணாமை என்ற பத்துக் குறள் உண்டு.

கடுமையாகச் சொல்லியிருக்காரோ?

ஆமாம்!

சரிதான் போ! பகவத் கீதையில் சும்மா ஓர் இடத்தில் தாமச உணவு என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். அதனால் நாங்கள் கவலைப்படுவதில்லை''[85] எனப் பாத்திரம் ஒன்றைப் பேச வைக்கிறார் மு.வ. திருக்குறளும் பகவத் கீதையும் புலால் உண்ணுதலை ஒருசேர மறுப்பினும் திருக்குறள் போல வற்புறுத்த வில்லை என்ற செய்தியை வழங்குவதற்காக இவ்வாறு உரையாடல் அமைத்திருக்கிறார் அவர்.

இப்படி, திருக்குறளும் பகவத்கீதையும் ஒன்றுபட்டு உரைக்கும் சிந்தனையைச் சொல்லுவது, தமிழ்ச் சமுதாயம் திருக்குறளை மறைநூலாகக் கொண்டு வாழ்தல் வேண்டும் என்பதாக இருக்கலாம்.

## சிலம்பு

மு வ. நெஞ்சில் நிலைத்த இடம் பெற்ற காப்பியம் சிலப்பதிகாரமாகும். நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரத்தின் மேன்மையை - மாண்பை ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் பல எழுதித் தம் ஆவலைத் தீர்த்துக் கொண்டாலும் தம் புதினங்களிலும் அதை வெளிப்படுத்தினார்.

மு. வ. நெஞ்சத்தை இளங்கோவும், இளங்கோ படைத்த கண்ணகி, கோவலன், மாதவி முதலிய பாத்திரங்களும் கொள்ளை கொண்டன.

---

84 குறள் 314
85 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 61

'நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்' என்னும் மாதவியின் கானல்வரித் தொடர், கதைத் தலைவி வடிவின் கையெழுத்தில் 'நெஞ்சில் ஒரு முள்'ளில் (ப 353) இடம்பெறக் காணலாம்.

**கண்ணகி**

கண்ணகி பற்றிய தவறான கருத்துக்களுக்கு மறுப்புப் போன்ற பகுதிகள் சில, அவர் புதினக் கதை மாந்தர் உரை யாடல்களில் இடம் பெற்றுள்ளன. தமிழ் அறியாத வேற்று மொழியார் கதைப்போக்கில் தவறாக எவ்வாறு கண்ணகி பற்றி அறிந்திருந்தனர் என்ற செய்தி விஜயா என்ற பாத்திரம் மூலம் 'நெஞ்சில் ஒரு முள்'ளில் சொல்லப்படுகிறது.

''ஒரு பெண் கணவனுக்கு முழுதும் அடங்கி நடந்தாளாம். அவன் தாசி வீட்டிலேயே இருந்தானாம். சொத்தெல்லாம் அழித்தானாம். கடைசியில் காலில் இருந்த நகையும் கேட்டா னாம். அதையும் கொடுத்தாளாம்' என்றார்.

உடனே தெரிந்து கொண்டு, 'சிலப்பதிகாரம் கண்ண கியைப் பற்றிச் சொல்கிறீர்கள் என்றேன்''[86] என்று 'நெஞ்சில் ஒரு முள்'ளில் எழுதுகிறார் ஆசிரியர்.

இங்குக் கண்ணகியைக் கணவனுக்குக் கட்டுப்பட்டு அடங்கிய ஒரு சாதாரண பெண்ணாகச் சிலர் நினைத் திருந்ததை எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். அதே போல மாதவியையும் மக்கள் ஒரு கீழ்த்தரமான வேசியாக, தாசியாக எண்ணியிருந்ததையும் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் பலர் கற்புக்கரசி கண்ணகியைப் பற்றியோ, மாதரசி மாதவியைப் பற்றியோ உண்மையில் சரியாக அறிந்திருக்கவில்லை என்பதை இவ்வுரையாடல் மூலம் நமக்கு உணர்த்துகிறார் மு.வ. இதை 'அகல் விளக்'கிலும் காட்டுகிறார்.

''சரிதான் அக்கா! கண்ணகி போல் பயந்து அடங்கிப் பதில் பேசாமல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று சொல்கிறாயா என்றாள் தங்கை.''[87] இதை மறுத்து உண்மையை நிலை நாட் டும் வகையிலே மு. வ. ''இதுதானா நீ படித்தது? அந்தச் சிலப்

86 மேற்படி; ப. 231
87 மு. வ.; அகல் விளக்கு; ப. 302

பதிகாரக் கதையைப் படித்தும் உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லையே. கண்ணகியா பயந்த பெண்? அவளைப் போல் அஞ்சாமையும் வீரமும் யாருக்குண்டு? காந்தி பட்டினி கிடப்பதைப்பார்த்து அவரைக் கோழை என்று ஒரு வெள்ளைக்காரன் சொன்னால் எப்படியிருக்குமோ அப்படி இருக்கிறது உன் பேச்சு. துன்பம் பொறுப்பவர்கள் கோழை அல்ல. கொள்கையோடு அமைதியாய் இருப்பவர்கள் கோழைகள் அல்ல. கண்ணகி பயந்தவள் அல்ல என்பதற்கு அந்தக் கதையிலே பல இடங்கள் வருகின்றன.''[88] என்று அக்கா பாத்திரத்தின் வழி மிகவும் ஆணித்தரமாகக் கண்ணகி சாதாரணப் பெண்ணல்ல; அவள் அஞ்சா நெஞ்சினள்; கற்புக்கரசி என்பதை நிறுவுகிறார் மு. வ. அவள் கற்புக்கரசி தான் என்பதை எடுத்து நிறுவ முனைந்த மு. வ. அதே புதினத்தின் அதே பகுதியில் கீழ்வருமாறு உரைக்கிறார்.

''தோழி ஒருத்தி, சந்திர சூரிய வழிபாட்டுக்கு அழைக்கிறாள். கணவனுடைய மனத்தை மாற்றுவதற்கு அது உதவும் என்கிறாள். கண்ணகி அது தகாத வழி என்று உடனே மறுத்து விடுகிறாள். செப்பனிட்ட பாதை போல் இருந்தது கண்ணகியின் வாழ்க்கை. அதில் தடுமாற்றமே இல்லை. மதுரையில் அயலார் வீட்டில் இருக்கும் போது கணவன் செய்த தவறு இப்படிப்பட்டது என்று எடுத்துக் காட்டுகிறாள், கணவன் கொலையுண்ட பிறகு அரசனை எதிர்த்து எவ்வளவு பேசுகிறாள்?''

கண்ணகி, கோவலனுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தாள் என்பது உண்மைதான். அதிலே வேறுபாடு இருக்கிறது. 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்று தொழும் உயரிய கற்பினள் கண்ணகி, குடும்பவாழ்வில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தியாக உணர்வின் உறைவிடம் கண்ணகி. ' இன்பதுன்பம் மட்டுமல்ல, ஆக்கமும் அழிவும் கூட அப்படியே இருவர்க்கும் பொதுவாகக் கருத வேண்டும்; கணவனுடைய அழிவில் நீயும் கலந்து அழிவதில் ஒரு மகிழ்ச்சி வேண்டும் என்று எவ்வளவோ சொன்னேன். கோவலனுடைய தவறு நன்றாகத் தெரிந்திருந்தும் எதிர்த்துப் பிரிந்து வாழ்வதைவிட அந்தத் தவறான வாழ்வுக்கும் துணையாக இருந்து சாவதே நல்லது என்ற துணிவு கண்ணகி

88 மேற்படி;

யிடம் இருந்தது. அதனால் தான் பொருள் இழந்து வருந்திய கணவனுக்குத் தன் கால் சிலம்பைக் கொடுக்க முன்வந்தாள்... கணவனைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லாத போதும் அந்த வாழ்வுக்குத் துணையாக இருந்துவிட்டுச் சாகத் துணிந்த மனம் அது. அந்த மனம் எளிதில் வராது. தியாகத்தில் ஊறிப் பண்பட்ட மனம் அது''[89] என்று கண்ணகி யின் தியாக மனப்பான்மயை எடுத்துரைக்கிறார் மு. வ.

இந்த நிலையில், வீட்டில் உள்ளவர்களே தம்மைச் சார்ந்த ஒருவரைப் பற்றித் தவறான எண்ணம் நிலவும் போது, அதைப் போக்க முனையாத இக்காலத்தில், ஒரு காப்பியத் தில் உள்ள பாத்திரத்தின் பெற்றியை உரைப்பதற்காக மு. வ. ஏன் முயல வேண்டும் எனச் சிந்திக்க இடமிருக்கிறது. ஒரு தாய்க்குத் தன் மக்கள் மீது எவ்வளவு பாசமும் பரிவும் ஆசையும் ஆர்வமும் இருக்குமோ அத்தகைய அளவிற்கு ஓர் இலக்கியப்படைப்பாளனுக்கும் தான் படைக்கும் பாத்திரங் கள் மீதும் இருக்கும். இதைத்தான் நாம் மு.வ. விடம் ஓர் இலக்கியப்படைப்பாளி என்ற நிலையில், சிறப்பாக ஒரு தமிழ்ப் பேராசிரியர் என்ற நிலையில் அது வெளிப்படக் காணுகிறோம்.

**மாதவி**

இதே போன்ற சிந்தனையை மு.வ. மாதவிபாலும் கொண் டிருக்கிறார். இளங்கோ படைப்பில் மாதவி ஒரு மாதர்குல மாணிக்கமாகப் படைக்கப்பெற்றிருக்கிறாள். அத்தகையவளை 'வேசி' என்று கூறுவார் சொல் கேட்டுக் கொதிக்கும் அவரின் உள்ளக்குமுறல் 'மலர்விழி'(ப.294) வழியாக வெளியாகிறது.

''மணிமேகலையைத் தன்மகள் என்று சொல்லவும் கூடாது என்று உறுதி கொண்டாள்; கண்ணகியின் மகள் என்றே தன் வாயால் எல்லோரிடமும் சொன்னாள். அது மட்டுமா? அந்த மணிமேகலை தன் வயிற்றில் பிறந்திருந்தாலும் தன்னைப்போல் ஆடல் பாடல்களைக் கற்காதபடி தடுத்து விட்டாள். மாதவி ஒரு உத்தமி; கண்ணகியைப் போலவே அண்ணா! வேசி என்று அவளைச் சொல்வதற்கும் வாய் கூச

89 மேற்படி; ப.350

வேண்டும்'' என்று மு வ எழுதுவார். இதில் தெள்ளத் தெளிவாக மாதவியும் கண்ணகி போன்ற ஒரு மாதரசி என்பதை நிறுவுவதை அறியலாம்.

## சிலப்பதிகாரச் சிறப்பு

தலைசிறந்த உலகக் காப்பியங்களுள் ஒன்றாக வைத்து எண்ணத்தக்க, தமிழின் முதன்மைக் காப்பியமாகிய சிலப் பதிகாரம்பற்றி அறிந்துகொள்ளாமல் பிறமொழிக் காப்பியங் களை அறிந்துகொண்டு, அதைப் பெருமையாக நினைக்கும் தமிழர்தம் இழிநிலை கண்டு வேதனையுற உள்ளம் இரங்கு கிறார் மு.வ.

சிலப்பதிகாரம் என்றால் ஏதோ ஒரு பொழுதுபோக்குத் தெருக்கூத்து என்று சிலர் கருதும் நிலையை 'மலர்விழி'யில் (பக். 289-290) உரைக்கிறார்.

''சிலப்பதிகாரம் தெரியாதா உங்களுக்கு? கேள்விப் பட்டிருக்கிறேன். படித்ததில்லை, நான் ஏன் அந்தப் புத்த கத்தைப் படிக்கப் போகிறேன். பாரதம் தெரியும், ராமா யணம் தெரியும்.

சிலப்பதிகாரம் என்றால் கோவலன் கண்ணகி கதை அண்ணா!

தெரியும், தெரியும். நாடகமும் பார்த்திருக்கிறேன்.''

கண்ணகியின் எளிமைக் கோலம், மாதவியின் துறவுக் கோலம், மணிமேகலையின் தொண்டுக் கோலம் 'கயமை'யில் கருதப் பெறுகின்றன.

இன்று பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்த கியூரி அம்மையார், கஸ்தூரிபா முதலானவர்களோடு கண்ணகி, மணிமேகலை உடன் வைத்துப் போற்றப் பெறுகின்றனர்.

''நான் எளிய வாழ்க்கை வாழவல்ல உயர்ந்த பெண் என்று பெருமிதமாக எண்ணிக் கொண்டு போ. கண்ணகி, மணிமேகலை, கியூரி அம்மையார், கஸ்தூரிபா முதலான உத்தமப் பெண்களின் நெறியை உணர்ந்து விட்டவள்''[90] என்று ஒரு பாத்திரத்தைப் பேச வைக்கிறார் மு. வ.

90 மேற்படி; ப. 318

திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் உலகச் சான்றோர் பெருமக்கள் நூல்களோடு ஒப்ப வைத்து உணர்த்தப் பெறும் உரையாடல்களையும் மு. வ. தம் புதினங்களில் படைத்துள்ளார்.

''ஒவ்வொரு நாள் ஒவ்வொரு புத்தகம் அரைமணி நேரம் படிப்பது வழக்கம். வாரந்தோறும் மாற்றிப் படிப்போம். பகவத்கீதை, பைபிள், மார்க்ஸ் அரேலியஸ், திருக்குறள், இராமகிருஷ்ணர் உபதேசம், இராமதீர்த்தர், கலீல் ஜிபரான் எழுதியவை இப்படி ஏழு ஆங்கில நூல்களை நாளுக்கு ஒன்றாகப் படிப்போம்''[91] என்று 'மண்குடிசை'யில் ஒரு பாத்திரத்தைப்பேச வைக்கிறார். இவ்வுரையாடல் பகுதியின்வழி, மு .வ. உலகின் தலைசிறந்த நூல்களிலே திருக்குறளுக்கு ஓர் இடம் உண்டு என்பதை நிறுவுவதை அறியமுடிகிறது.

''நிலையான பயன் விளைவதற்கு உங்களால் இயன்றதை எண்ணுங்கள்; இயன்றதைப் பேசுங்கள்; இயன்றதைச் செய்யுங்கள். இந்த நல்ல நோக்கம் கொண்டுதான் திருவள்ளுவர் அறநூல் எழுதினார். இளங்கோ அடிகள் காவியம் எழுதினார். ஆழ்வார் நாயன்மார் பாடிப் பரவினார்கள்; தாயுமானவர் உண்மை உணர்த்தினார்; இராமலிங்கர் உருகி நின்றார்''[92] என்று மு. வ 'வாடாமலரில்' நிலையில்லா உலகிற்கு நிலைத்த உண்மையை உரைத்த நூல்களாகத் திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திவ்வியப் பிரபந்தம், தாயுமானவர் பாடல்கள், அருட்பா ஆகியனவற்றைக் கூறுகின்றார்.

## தேவாரம் — திருவாசகம்

ஊனுருக்கும் உயிர்ப்பாடல் என்று மேனாட்டுக் கிறித்தவர் ஜி. யு. போப் போற்றிய திருவாசகம் சாவுப் பாட்டாகத் தமிழர்களால் ஒதுக்கப்படுகிறது; பழிக்கப் பெறுகிறது.

''இது என்ன புத்தகம்? என்ன பெயர்? என்றார். திருவாசகம். மாணிக்கவாசக சுவாமிகள் அதாவது திருவாதவூரர் பாடியது என்றார் புலவர். தங்கசாமிக்கு

---

91. மு. வ.; மண்குடிசை; ப. 166
92. மு. வ.; வாடா மலர்; ப. 223

உடனே நினைவு வந்துவிட்டது. அடடா! எங்கள் அப்பா இறந்து போனபோது இதைத்தான் தேடினார்கள். எங்கும் கிடைக்காமல் கடைக்குப் போய் வாங்கி வந்து பாடினார்கள். எல்லார் வீடுகளிலும் சாவு நடந்தால் இதைத்தான் பாடு வார்கள் என்ன அய்யா இது. நல்ல காலை வேளையில் நல்ல பாட்டாகப் பாடிக் கருத்துக்களைச் சொல்லாமல், சாவுப் பாட்டைக் கொண்டுவந்து விட்டீர்களே! உங்களுக்கு இதற்கு முன் நல்ல பாட்டுச்சொல்லிப்பழக்கம் இல்லையா?என்றார்''[93].

இவ்வாறு தவறான கருத்து கொண்டிருந்த தங்கசாமிக்கு விளக்கம் தருவது போலக் கனகலிங்கம் என்ற பாத்திரத்தின் வழி,

''அய்யய்யோ! அப்படி எண்ணாதீர்கள். உங்கள் மாமா நாள்தோறும் அதைப் பாடச்சொல்லிக் கேட்கிறார். சாவுக்கும் படிக்கலாம். திருமணத்திற்கும் படிக்கலாம்; ஏசுநாதரின் பைபிள் போல'' என்று திருவாசகத்திற்குரிய பெருமையை நிலைநாட்டுகிறார் மு. வ.

திருவாசகப் பொருள்களைக் காலத்திற்கு ஏற்பச் சிறிது மாற்றிப் பொருள் கொண்டால் வாழ்வில் பயன்மிகும் என்பது போல ஒரு நிகழ்ச்சியைக் 'கயமை'யில் புனைந்து காட்டுகிறார்.

''அத்தேவர் தேவர் அவர்தேவர் என்று இங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதுஎன் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவுக்கே சென்றூதாய்க் கோத்தும்பி''

என்னும் திருவாசகப் பாட்டைப் பாடிய நல்லய்யனை நோக்கி அதன் பொருளைக் கூறுமாறு கேட்கிறார். அதற்கு,

''இந்திரன் தெய்வம், அக்னி தெய்வம், வாயு தெய்வம், பிரமன் தெய்வம், திருமால் தெய்வம் என்று இவ்வாறு பொய் யான தெய்வங்களைப் புகழ்ந்து பேசிப் பலவாறு வருந்துகின்ற

---

93 மு.வ; கயமை; ப. 126

இந்த உலகத்தில் இவ்வாறு பழங்காலத்தில் உரை சொல்லி வந்தார்கள். இவ்வாறு சொல்லி வைணவம் முதலிய சமயங்களைப் பழித்து இக் காலத்துக் கட்சிப்போர்போல் சமயப் போர்கள் நடத்திவந்தார்கள்''[94] ''ஆனால் இந்தக் காலத்திற்கு ஏற்றாற் போல் அதன் கருத்தைப் பயன்படுத்தலாம் பணமே தெய்வம் பதவியே தெய்வம் என்று எண்ணி, பணமுடையவர்களையும் பதவியில் உள்ளவர்களையும் நாடி வழிபட்டுப் பொய்யான தெய்வங்களைப் புகழ்ந்து பேசி உலகத்தார் வருந்துகிறார்கள். இப்படிப்பட்ட உலகத்தில் யான், எனது என்னும் பற்றுக்கள் தன்னலமான எண்ணங்கள்— நீங்கும்படியாக யான் இறைவனைப் பற்றினேன். அவனே மெய்யான தெய்வம். மேற் சொன்ன பதவி பணம் முதலியவை அழிந்தாலும் அழியாத அவற்றிற் கெல்லாம் மேம்பட்ட மெய்யான தெய்வம். தும்பி! அந்தத் தெய்வத்தை நீயும் பாடி ஊதுக என்று மாணிக்க வாசகர் ஒரு தும்பியைப் பார்த்துப் பாடுவதுபோல அமைந்துள்ளது''[95] என்று மு. வ., மாணிக்க வாசகரின் அப்பாடலுக்குப் பொருத்தமுற, தற்காலத்தை மனதிற் கொண்டு விளக்கம் தருகிறார்.

## தாயுமானவர் பாடல்கள்

திருக்குறளுக்கு அடுத்து அவர் புதினங்களில் பேரளவில் இடம் பெற்றிருக்கும் ஒரு நூல் தாயுமானவர் பாடல்கள் ஆகும்.

''நடனமும் ஓவியமும் உடம்பை மறந்து உயரப் பறக்க முடியாத கலைகள் இசையும் கவிதையும் அவ்வாறு பறப்பதற்கு உரிமைபெற்ற கலைகள். இந்தத் தாயுமானவரின் கலை, உடம்பை மறந்து மிகமிக உயரப் பறக்கும் உண்மைக் கலை; அதனால்தான் செல்வநாயகம் அவ்வளவு உயர்ந்தவராக விளங்க முடிந்தது''[96] என்னும் மு.வ நெஞ்சிலே தாயுமானவருக்கென்று ஒரு தனித்த இடமும் பற்றும் இருந்தன. இவர், அவர்தம் பாடல்களை 'மலர் விழி'யில் மட்டுமல்லாது கயமை, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, மண் குடிசை, வாடாமலர் முதலிய பல புதினங்களிலும் எடுத்தாண்டிருக்கிறார்

94 மேற்படி; ப. 271
95 மேற்படி; ப.272
96 மு. வ.; மலர்விழி; ப.329

''ஓடும் செம்பொன்னும் ஒன்றாகக் கொண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே''

என்று அகல் விளக்கிலும் (ப. 293), கயமையில்

''நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர்

பூசை கொள்ள வாராய்பராபரமே''

''கண்ணில் காண்பது உன்காட்சி கையால் தொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணோடு ஐந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ணலே நின் அருள் வடிவு ஆகுமே''

என்றும் (ப. 264),

''கல் ஏன் மலர் ஏன் கனிந்த அன்பே பூசை என்ற
நல்லோர் பொல்லா எனையும் நாடுவரோ பைங்கிளியே

சினம் அடக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபராமே''

எனவும் (ப.269) தாயுமானவரின் பாடல் சிலவற்றை முழுமையாக வழங்குகிறார். இது தவிர, 'பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே' எனக் கயமையில் ஓரிடத்திலும்(ப.261), 'சங்கர சங்கர சம்போ' எனப் பிறிதோரிடத்திலும் (ப.383) தாயுமானவர் பாடல்களின் தொடர்கள் சிலவற்றை வழங்கியுள்ளார்.

இவையே யல்லாமல் மு.வ., தாயுமானவர் பாடல் தொகுதிகளில் பராபரக் கண்ணி (கயமை. ப. 383), ஆனந்தக் களிப்பு (மண் குடிசை.ப 146), 'கல்லாலின்' (மண்குடிசை ப. 155), 'ஆகாரபுவனம்' (மண் குடிசை ப. 152) எனச் சில பெயர்களையும் சுட்டியுரைக்கிறார். மண்குடிசையில் அமைந்துள்ள ஐவகை வழிபாட்டுப் படிநிலைகளுக்கு வழிவகுத்துத் தருவன தாயுமானவர் பாடல்களே.

## இராமலிங்க சுவாமிப் பாடல்கள்

தாயுமானவர் பாடல்களைக் கையாண்டது போல வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமி பாடல்களையும் மு.வ. தம் புதினங்களில் கையாண்டுள்ளார்.

தாயுமானவர் பாடல்போல அவ்வளவு மிகுதியாக இராமலிங்க சுவாமிகளின் பாடல்களை எடுத்தாளவில்லை. எனினும் அவர் பாடல்களை முழுமையாக, தொடர்களாக எடுத்தாண்டதுபோலவே இவர்தம் அருட்பாக்களையும் எடுத்தாண்டுள்ளார்.

''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்யாவரவர் உளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்எனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தைமிக விழைந்த தாலோ''

எனக் கயமையிலே (ப. 270) அருட்பா ஒன்றை முழுமையாக எடுத்தாள்கிறார் மு.வ.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும் ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' (மண் குடிசை ப.138) எனவும், ''ஊதூது சங்கே'' (மண் குடிசை. ப. 156) எனவும் சில அருட்பா தொடர்களை எடுத்தாள்கிறார். இது வன்றி, 'பிள்ளைச்சிறு விண்ணப்பம்' (மண்குடிசை ப. 156) எனத் தொகுதித் தலைப்பையும் சுட்டியுள்ளார்.

அருட்பாவின் எளிமை, இனிமை பற்றி மண் குடிசையில் மெய்கண்டார், மெய்யப்பன் கூற்றில் வைத்து, அவற்றின் சிறப்பினை உரைக்கிறார்.

''அருட்பா நன்றாக விளங்குகிறது''.

''காலம் மாறி வந்தது. இராமலிங்கர் மனமும் அப்படிப் பட்டது. இரக்கமும் எளிமையும் அவர் வடிவம்; அவர் மனம்''[97] என்று அவர் விளக்குகிறார்.

மேற்கூறிய நூல்களேயன்றி நாலடியார் (பாவை. ப.93), நாலாயிரத் திவ்வியப் 'பிரபந்தம் (பெற்ற மனம் ப. 34), திருவாய் மொழி (அகல் விளக்கு. ப. 319), கந்தர் அலங்காரம்

97 மு. வ.; மண்குடிசை; ப. 156

(அல்லி. ப. 300), பட்டினத்தார் பாடல்கள் (மண்குடிசை ப. 165), பாரதியார் பாடல்கள் (மலர்விழி. ப. 115) முதலிய நூல்களைப் பற்றிய செய்திகளையும் உரையாடல்களில் ஆங்காங்கே அமைத்துள்ளார் மு.வ.

இவ்வாறு பாடலைத் தருதல், பாடல் தொடர்களைச் சுட்டல், பாடலுக்கு விளக்கம் தருதல், பாடற் சிறப்பை எடுத்துரைத்தல், பிற நூல்களோடு ஒப்பிட்டுரைத்தல் அந்தப் பாடல்கள் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களை விடுவிக்க எவ்வாறு உதவுகிறது என எடுத்துக் காட்டுதல் எனப் பல்வேறு வகைகளில் தமிழ் இலக்கியத்தை மு.வ. அறிமுகம் செய்கிறார்.

# தமிழ் இனம்

''பேராசிரியப் பெருந்தகை மு.வ. அவர்கள் இந் நூற்றாண்டின் இணையற்ற செம்மலாய் விளங்கியவர். தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கும் தமிழ் மொழியும் தமிழர் இனமும் தழைத் தோங்குவதற்கும் மட்டுமின்றி மக்கள் இனத்துக்கும் வழிகாட்டிய பேரறிஞர் என்று அவரைக் கூறின் மிகையாகாது''[1]

எனப் பெருமையுடன் பேசுவர் கழகப் பதிப்பகத்தார்.

இவ்வுலகில் தோன்றிய அறிஞரில் தாம் பிறந்த நாட்டை, பேசும் மொழியை, தம் இனத்தைப் பற்றி எண்ணியவர் விரல் விட்டு எண்ணும் அளவிலேயே உள்ளனர். அவருள் மு வ. ஒருவர் எனில் மிகையாகாது. தமிழகத்தில் பல இனங்கள் (சாதிகள்) இருந்தன. அவற்றையெல்லாம் விடுத்து 'அனைவரும் ஓர் இனம், அனைவரும் ஒரு குலம்' எனும் பரந்த எண்ணம் உடையவராக மு.வ. விளங்கினார்.

ஓர் இனம் எனில் அதில் அடிப்படை உறுப்பாக இருப்பவன் மனிதனாவன். தமிழினம் எனில் அதில் அடிப்படை உறுப்பாக இருப்பவன் தமிழன் ஆவன். தனியொரு தமிழன் பண்புள்ளவனாக இருப்பின் தமிழினம் பண்பாகவும் தமிழ்ச் சமுதாயம் பண்பினதாகவும் அமையும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர் மு.வ. அதனால்தான் தாம் கூறவிரும்பும் கருத்துக்களைச் சிற்சிலஇடங்களில் தனிமனிதனுக்குக் கூறுவதுபோன்று தமிழனுக்குக் கூறிச் சென்றுள்ளார்.

ஓர் இனம் செம்மையுற விளங்க வேண்டுமெனில் அவ்வினமக்கள் பேசும் மொழிச் சார்புடைய இலக்கியங்களை எடுத்துரைத்தல் வேண்டும். மேலும் நடைமுறை வாழ்க்கை

---

1 *சி. பாலசுப்பிரமணியன்; பெருந்தகை மு.வ.; கழகம்; சென்னை;* 1976;

யினைஎளிய மொழியில் யாவரும் உணரும்வகையில்,அவ்வினத்தின் இறுதி உறுப்பினனிடம் சென்று சேரும் வகையில் நூல்களைப் படைத்தல் வேண்டும். மு.வ. தாம் வாழ்ந்த காலத்தில் அதையே செய்தார்.

தமிழினம் உணர்வு பெற்று, உறுதிபெற்று உயர வேண்டும்; ஒன்றாக நன்றாக வாழ வேண்டும் என்று மு. வ. கருதினார். தம் கருத்தை வெளிப்படுத்தக் கருதித் தம் வாழ்வின் தொடக்கக் காலத்தில் தம்மைச் சுற்றியுள்ள ஏழை எளியவர்களுக்குத் திருக்குறளை அதிகாரம் அதிகாரமாக உரையோடு எழுதித் தந்து செயல்படுத்தினார். அவர் காலப் போக்கில் தமிழ் உணர்விலும் திறத்திலும் தாம் வளர்ந்தது போலவே தம்மைச் சுற்றியுள்ளோரும் வளர்ந்துயர எண்ணினார்; அதற்காக அவர் எழுதினார்.

கற்றறிந்த புலவர்களிடத்திலே ஒடுங்கிக் கிடந்த சங்க இலக்கிய உணர்வும் சிந்தனைகளும் பெரும்பான்மையான தமிழர்பால் சென்று சேருமாறு தமிழ் நெஞ்சம், நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகைச் செல்வங்கள், விருந்துகள் என இலக்கிய நூல்கள் பலவற்றை எழுதினார். அதோடு மட்டுமன்றித் தமிழ் மொழி உணர்வை, தமிழ் இன நலத்தை உருவாக்குவதற்குத் தற்காலத்தில் தோன்றி வளர்ந்த புதினக் கலையை ஆற்றல் வாய்ந்த கருவியென அவர் உணர்ந்தார். அந்தக் கலையாற்றல் அவர்தம் முன்னோர் நாடகக் கலையில் வல்லுநராக இருந்த காரணத்தினால் அவருக்கு இயல்பாக அமைந்தது. அந்தக் கலைக் கருவியைத் தாம் கருதியவாறே தமிழ்மொழி நலத்திற்கும் தமிழ் இன வளத்திற்கும் உரியதாக்கினார்.

தமிழ் இனம் — தமிழ் உணர்வோடு, தமிழ் பண்பாட்டுத் தொடர்போடு செயற்பட வேண்டும் என மு. வ. கருதினார். மாந்தர்களுள் தமிழன் தனி மனிதனாக, குடும்பமாக, சமுதாயமாக இன்று எதிர் நோக்கும் சிக்கல்களையும் அவற்றினின்று அவன் விடுபெற்று வீறுடன் வெற்றி நடை போட்டு நல்வாழ்வு வாழ்வதற்கான வாய்ப்பினைச் சித்திரிப்பதற்கு ஏற்றதாகத் தம் புதினக் களங்களை அமைத்துக் கொண்டார்.

பொதுவாக உடற்கூற்றின் அடிப்படையிலேயும் சிறப்பாக முக அமைப்பை ஒட்டியும் உலக மக்களை இனம் இனமாகத் தொல்லியல் நூலார் பிரிப்பர். மேலும் நிற அடிப்படையிலும்

எல்லை அடிப்படையிலும் கூட இனப்பகுப்பு நிகழலாயின. முன்னதற்குச் சான்றாகக் கறுப்பு, வெள்ளை எனும் தோல் இனப்பகுப்பையும் பின்னதற்குச் சான்றாக ஐரோப்பியர், இந்தியர் முதலிய இனப் பகுப்பையும் கூறலாம். ஆனால் இன்று ஓர் இனம் உருவாக மொழி அடிப்படையாக அமைகின்றது சாதி வேறுபாடுகளைப் போன்று இனவேறுபாடு பொய்யானதன்று. மொழியால் இனமும் பின்னர் நாகரிகமும் வளர்வதை மு. வ. பின்வருமாறு கூறுகிறார்.

''சாதி முதலான வேறுபாடுகள் உண்மையானவை அல்ல; பொய்யானவை; அவற்றை ஒழிப்பது கடமைதான். ஆனால், மொழி வேறுபாடும் நாட்டு வேறுபாடும் அப்படிப்பட்டவை அல்ல; பொய் அல்ல. மொழி உண்மையாக உள்ள ஒன்று; அது கண்ணுக்குத் தெரியும், காதுக்குத் தெரியும்; மூளைக்கும் தெரியும். மொழியால் இனம் அமைவதும், நாகரிகம் அமைவதும், நாடு அமைவதும், நாட்டின் அமைப்புக்குத் துணையாக அது இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள்.''[2]

தமிழனிடம் இயல்பாகவே சில குறைகள் உண்டு. காலப் போக்கில் சிலவந்து அவனோடு சேர்ந்து அமைந்து விட்டன தன்னலமிகுதி, இன உணர்வின்மை, புகழ்ச்சிக்கு மயங்குதல் முதலியன இயல்பாய் அவன்பால் அமைந்த குறைகளாகும். ஈண்டு தன்னல மிகுதியைப் பற்றிக் காண்போம்.

தன்னலம் என்பது குறுகிய மனப்பான்மை கொண்டது. இதனைப் பாரதிதாசன் ''கடுகு உள்ளம்''[3] என்பர். தன்னலமாவது எச்செயலும் தம் சுய இலாபத்திற்காக அமைவது; விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு அற்றது. இவ்வுலகில் தோன்றிய மனிதன் ஓரளவு தன்னலமுள்ளவனாக இருக்கின்றான். அவனுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவு பெற்ற பின் பொது நலவாதியாக மாறுகிறான். தமிழன் தன்னலவாதியாக உள்ளான் என்றும் ஆங்கிலேயனை விட மிகுந்த தன்னலவாதியாகவும் அமைகிறான் என்பதையும் மு. வ. பின்வருமாறு கூறுகிறார்.

''தமிழனைத் தனியே பெயர் சொல்லிப் பழித்துப்பார்; உடனே சீறி விழுவான். ஆனால், அவனுடைய நாட்டையும்

---

2 மு.வ; தம்பிக்கு; பக். 28-29

3 பாரதிதாசன்; பாரதிதாசன் கவிதைகள்; செந்தமிழ் நிலையம்; ராமச்சந்திரபுரம்; 1978; ப.131

மொழியையும் இனத்தையும் பழித்துச் சொல் பொறுமை யோடு கேட்பான். ஆங்கிலேயனைத் தனியே பழித்துப் பார்; உன்னைப் புறக்கணிப்பான். அவனுடைய நாட்டையும் மொழி யையும் பழித்துச் சொல்; பகையுள்ளம் கொள்வான். காரணம் மேலே சொன்னதுதான். தன் மொழியைவிடத் தன் நாட்டை விடத் தானே முக்கியம் என்ற எண்ணம் தமிழனிடம் அவனை அறியாமல் ஊறிக்கிடக்கிறது. அது மட்டும் அல்ல; கட்சிப் பற்று மிகுந்தவனாய்த் தோன்றும் தமிழனும் நெருக்கடி நேருமானால் கட்சி நலத்தைவிடத் தன்னலத்தையே பெரிதாக நாடுவான். கட்சி சீர்குன்றினாலும் தான் வாழவேண்டு மென்று முயலவும் முயல்வான். இந்நிலையில் இவனுடைய நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் என்ன என்று சொல்வது''[4] என்கிறார். இத்தகு தன்னல மிகுதியால் தமிழ் இனம் வாழாது, வளராது எனலாம்.

இன உணர்வு மட்டுமின்றி மொழி உணர்விலும் தமிழன் தாழ்ந்து போனதற்குக் காரணமாக, க.ப. அறவாணன் பின் வரும் கருத்துக்களைக் கூறுவர்.

''களப்பிரர், பல்லவர் காலம் தொடங்கி (1700 ஆண்டுகள்) அண்மைக் காலம் வரை, தமிழர் சமஸ்கிருதத்தைத் தேவ பாஷை என்று கருத வைக்கப்பட்டனர். தமிழ்மொழி, 'நீச பாஷை' என்று நம்ப வைக்கப் பட்டனர். சமஸ்கிருத மொழிக் குரியோர் தேவர்கள் என்றும் ஒத்துக் கொள்ள வைக் கப்பட்டனர். இந்தத் தேவ நிலையை ஏற்றுக் கொண்ட தமிழர், அடுத்தடுத்து ஆட்சியில் இருந்த உருது, தெலுங்கு, மகாராட்டிரம் முதலான மொழிகளுக்கும் தேவத்தன்மை கொடுத்தனர். இந்த இடத்தில் ஆட்சி வழி ஆங்கிலம் குடி யேறியபோது அப்படியே அதனையும் எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டனர். தற்போது அதே இடத்தில் வேறொரு மொழி யையும் ஏற்க ஆயத்தமாக இருக்கின்றனர். சுமைகளைச் சுமந்தே பழக்கப்பட்டுப் போன ஒட்டகத்திற்குச் சிறு சுமையை அகற்றினாலும் பயணம் போகாது என்பது போலவே தமிழர் மொழிச் சுமையை இழக்க ஆயத்தமாக இல்லை. அழுக்கேறி நெடுங்காலம் குளிக்காமல் இருக்கும் ஒருவருக்கு அழுக்கே நோயாகத் தெரிதலைப் போலத் தமிழர் உடம்பில், பல்லாண்டுகளாக ஏறிய வேறுவேறு இனப் பண்

---

4 மு.வ.; தம்பிக்கு; பக்.46 – 47

பாட்டு மேலாண்மைகள் வேறு பிரிக்க முடியாமல் ஒண்டி ஒட்டிக் கொண்டு விட்டன.''[5]

மேற்கூறிய குறைபாடுகள் மட்டுமன்றி இன்னும் சில அரசியல், பொருளாதாரம் மற்றும் சமயச் சுழல்கள் வழி. தமிழ் இனத்தைப் பற்றின. அயல் நாட்டினரையும் அயல் நாட்டுப் பண்பாட்டினையும் கண் மூடிப் போற்றுதல் தாழ்வு மனப்பான்மை, மூட நம்பிக்கைகள், தவறான கடவுள் வழிபாடு கள் முதலியன காலப்போக்கில் தமிழ் இனத்தைப் பின்னுக்குத் தள்ளின. ஈண்டு அயலான் என்பது பிற மாநிலத்தானையோ பிற நாட்டானையோ குறிக்கும். கண்மூடிப் பழக்கவழக்கங் களைப் போற்றுதலுக்குச் சான்றாகப் பஞ்சாப் மாநிலத்தில் வாழும் ஒருவன் தன் குடும்பத்தோடு சில காலம் தமிழகத்தில் தங்குவான் என வைத்துக் கொள்வோம். அவன் குடும்பத்தி லுள்ள பெண்கள் தமிழகப் பெண்களைப் போன்று ஆடை உடுத்த முயற்சி செய்வதுகூட இல்லை எனலாம். ஆனால் அவர் களைக் கண்ட நம் தமிழ்ப் பெண்கள் 'சுடிதார்' முதலிய வடநாட்டு ஆடைவகைகளை அணிய முற்படுகின்றனர். அவர்கள் ஏன் இவ்வகை ஆடைகளை உடுத்துகின்றனர் எனத் தமிழர்கள் ஆய்வதே இல்லை. அடுத்து அமைவது தாழ்வு மனப்பான்மையாகும். தமிழன் தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாது பிறன் ஒருவனை முன்னால் நிறுத்தி அவன் வழி இயங்கலைத் தாழ்வு மனப்பான்மைக்கு விளக்க மாகக் கூறலாம் இவற்றை எண்ணிய க.ப.அறவாணன் பின் வருமாறு கூறுகிறார்.

''தமிழினத்தை, வரலாற்றுப் பார்வையுடன் பதினைந்து நூற்றாண்டுகள் திரும்பிப் பார்த்தால் அவர்தம் வீழ்ச்சிக்குப் பின்புலங்கள் புலப்படும். (1) போர்க்குணமின்மை (2)தாழ்வு மனப்பான்மை, (3) அயலாரை, அயல் நாகரிகத்தை, அயல் பண்பாட்டைக் கண்மூடி வரவேற்றுப் போற்றியமை; போற்றுகின்றமை, (4) தொலை நோக்கு இன்மை''.

மேற்கண்ட நான்கும் தமிழரை அன்றிலிருந்து இன்று வரை பின் இழுத்துத் தள்ளிக் கொண்டே இருக்கின்றன.

''இந்நான்கின் மூலத்தை அறிந்து கிள்ளி எறிந்தாலன்றித் தமிழினம் ஒரு சிறப்பிற்குரிய இனமாக மீண்டும் இந்தியாவில்

5 க.ப. அறவாணன்; தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்; பக். 56—57

தழைத்தோங்க இயலாது. ஏனைய மொழியினங்களை ஒத்து வளரவோ வாழவோ முடியாது''[6] என்ற இக்கருத்து ஏற்புடைத்த தாகும்.

இவ்வாறு தமிழன்பால் இயல்பாக இருந்த குறைக்களையும் காலப்போக்கில் அவன் வளர்த்துக் கொண்ட குறைபாடுக்களையும் தம்புதினங்களின் வாயிலாக விரிவாகவும் விளக்கமாகவும் ஆற்றலோடும் அருளுணர்வோடும் மு. வ. சுட்டிக் காட்டுகின்றார். அதோடு மட்டுமல்லாது அவற்றைக் களைந்து தமிழினம் முன்னேறுவதற்கான வழிகளையும் அவர் காட்டத் தவறவில்லை. க. த. திருநாவுக்கரசு கூறும் கீழ்வரும் கருத்துக்கள் மேற்கூறியதை அரண் செய்வதாக அமையும்.

''பேராசியர் மு. வரதராசனார் படைத்துள்ள புதினங்கள் யாவுமே, சமூகப் புதினங்களாக (Social Novels) உள்ளன. அறிவியல் வளர்ச்சிக்கும், இயந்திரத் தொழில்மய நாகரிகத்திற்கும் ஏற்ப பழமைப் பற்றுமிக்கதாக உள்ள, தமிழ்ச் சமுதாயத்தின் மனப்போக்கை மாற்றவேண்டும் என்பது அவருடைய முதன்மையான நோக்கம்''[7]. அவரே மிரியம் அல்லோத்தின் (Miriam Allott) கருத்தாகக் குறிப்பிடுவதும் இங்குக் கருதத்தக்கது.

''தமிழினை வளர்க்க விரும்பிய மு.வ. விற்கு உரைநடையே பலருக்கும் பயன்படத்தக்க கருவியாகத் தோன்றிற்று. எனவே, உரைநடையின் மூலம், தமிழை வளர்ப்பதற்குப் புதினமே கவர்ச்சிமிகு துறையாக வளர்ந்து வருவதை அவர் நன்குணர்ந்தார். ஓரளவிற்குக் கல்வியறிவு பெற்றோரும் எளிதில் படிக்கத்தக்க இலக்கியத் துறையாகப் புதினம் பெருவாழ்வு பெற்று வருவதை அவர்புரிந்து கொண்டார். முடியாட்சிக் காலத்திற்கு ஏற்றது காப்பியம், கவிதை முதலியன என்றும் குடியாட்சிக் காலத்திற்கு ஏற்றது உரைநடையில் அமைந்த காப்பியம் எனக் கருதப்படும் புதினமே என்றும் கூறுவர்.''[8] திறனாய்வாளர், தமிழ் இனத்தைத் தான் மு. வ. புதினங்களில் இடம்பெறும் சமுதாயமாகக் கொண்டுள்ளார் என்பர்.

---

6 மேற்படி; ப. 72

7 க. த. திருநாவுக்கரசு; பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பிலக்கியம். ப. 72

8 மேற்படி; ப. 71

புதினங்கள் பல வகைப்படும். அவற்றுள் பொருள்பற்றிய புதினங்களாக வரலாற்றுப் புதினம், பொழுதுபோக்குப் புதினம், சமயப் புதினம், சமுதாயப் புதினம் முதலியன அமையும். மு. வ. வின் புதினங்கள் சமுதாயப் புதினங்களாகும். மு. வ. 'தமிழ்ச் சமுதாயத்தையே தன் புதினங்களில் படைத்துக் காட்டுகிறார்' என அவரும், 'தமிழர் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு நாவல் எழுதினார்' என மோகனும் உரைப்பர். இரா. தண்டாயுதம் ஒருமுறை மு. வ. வை நேரில் பேட்டி கண்டபோது அவர்,

''தமிழ் மக்களுக்காக எழுதுகிறேன் என்று பொதுவாகச் சொன்னாலும் சிறப்பாகத் தமிழ்நாட்டிலே சிந்தனை ஆற்றலுடன் கற்பனை வளத்துடன் வளர விரும்புகின்ற இளைஞருக்காக எழுதுகிறேன் என்று சொல்லலாம்''[9] என்றார்.

விருந்து, கற்பு, புகழ் முதலியன தமிழின நலத்திற்கு உகந்ததாக அமைகின்றன. பண்டைக் காலம் முதல் இன்றுவரை விருந்து, கற்பு, புகழ் முதலியனவற்றைப் போற்றினர்; போற்றுகின்றனர் தமிழ் மக்கள். பண்டைத் தமிழகம் மேற்கூறியனவற்றில் பெரிதும் ஈடுபாடு கொண்டு இருந்தது; சிறந்த பண்பாடுகளாக இவற்றைக் கருதியது. ''அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்''[10] எனப் பண்டைய குடும்பத் தலைவி பாராட்டப் பெறுகிறாள். ''விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை''[11] என்று கண்ணகி கலங்குகிறாள். ஆணும் பெண்ணும் கூடி வாழ்தலின் நோக்கமே விருந்திற்காகத்தான் என்கிறார் வள்ளுவர்.

> ''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு''[12]

இவ்வாறே புகழ் பெறுதலையும் வாழ்வின் குறிக்கோளாகப்பண்டைத் தமிழகம் கொண்டு இருந்தது. 'புலவரால் புகழப் பெறாதவன் வலவன் ஏறா வானூர்தி பெறான்' என்று கருதியது 'புகழே உயிர்வாழ்வின் ஊதியம்' என்றார் பொய்யாமொழியாரும்.

---

9 இரா. தண்டாயுதம்; டாக்டர் மு. வ. பேட்டி ப. 69
10 நற்றிணை 142; 9 11 சிலம்பு. 16; 73
12 குறள். 58

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"[13]

இப்படியே பெண்களின் கற்பையும் கருதினார்.

"பெண்ணில் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின்"[14]

என்றார் வள்ளுவர். "முல்லை சான்ற கற்பு"[15] எனச் சங்க இலக்கியமும் குறிப்பிடுகின்றது.

'கற்புக்கடம் பூண்ட தெய்வமாக'[16]க் கண்ணகி கவுந்தியால் பாராட்டப் பெற்றாள். சாத்தனாரும் 'பெண்டிராயின் பிறர் நெஞ்சு புகார்' என்றார்.

விருந்து, கற்பு, புகழ் முதலியன இக்காலத்தில் எந்த அளவு தமிழனுக்கு நன்மை பயக்கும் அல்லது கேடு விளைவிக்கும் என்றெல்லாம் மு. வ. பலமுறை எண்ணினார். 'வள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' எனும் தம் நூலில் மேற்கூறியவற்றை விளக்குகிறார்.

**விருந்து**

"பலகாலும் பழகி அறிந்தவர்க்குச் சிறந்த உணவு அளித்துச் செய்யும் உதவியும், தம்மைவிட மிக்க செல்வமுடையவர்க்குப் புகழ் கருதிப் போற்றிச் செய்யும் ஆடம்பரச் சிறப்பும், ஏதேனும் நன்மை எதிர்பார்த்து அதற்காக ஒருவர்க்குச் சிறந்த உணவு நல்கும் உதவியும் விருந்து என்று இக்காலத்தில் போற்றப்படுகின்றன. திருவள்ளுவர் இவற்றை விருந்து என்று கொள்ளவில்லை....இக்காலத்து விருந்து எனப்படுவது வறியவரை மறப்பது; ஆடம்பரத்தைப் போற்றுவது; பயன் கருதி வணிக முறையில் செய்வது. உண்மையாக விருந்து என்று கூறத்தக்கது, பசித்தவர் முகமும் திக்கற்றவர் முகமும் பார்த்து அவர்களை அன்புடன் போற்றி உதவி செய்தல் கடமை என்று உணர்ந்து செய்யும் அறமேயாகும். பழகியவர்களை அன்போடு வரவேற்று உணவளிக்கும் வழக்கத்தை அதற்கடுத்த நிலையில் வைத்துப் போற்றலாம்."[17]

13 குறள் 231 14 குறள் 54
15 நற்றிணை 142; 18 16 சிலம்பு. 15: 143
17 மு. வ.; திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்; பக். 328 — 329

**புகழ்**

"சிற்றூர்களில் அடிமை வாழ்வையும் திக்கற்ற நிலைமையையுமே இப்போது காண்கிறோம். ஆகையால் இப்போது புகழ் என்பது நகரங்களில் வாழ்வோருக்கு, அல்லது நகர மக்களால் போற்றப் படுவோர்க்கு உரியதாக உள்ளது. இதற்குத் துணையாகச் செய்தித் தாள் என்ற நாகரிகக் கல்வியும் ஒன்று உள்ளது. செய்தித் தாள்கள் நகரங்களில் நகரமக்களில் செல்வாக்குள்ளவர்களால் நடத்தப்படுவன. நடத்துவோரின் செல்வாக்குக்கு ஏற்றவாறு செய்தித்தாளின் பெருமையும் சிறப்பும் மிகுதியாக இருக்கும். அந்தச் செய்தித் தாளில் எவர் பெயர் வரும்? செல்வாக்குள்ளவர்களின் பெயர்களே வரும்.

...இது புகழ் என்று கூறத்தக்கதா? பிறனில் விழைகின்றவன் எப்போதும் அழியாமல் நிற்கும் பழியை அடைவான் (145) என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். ஆனால் பிறனில் விழையும் குற்றம் உடையவர்கள் நகரங்களில் பழிக்கு ஆளாவதில்லை; அவர்களில் செல்வாக்கு உடையவர்கள் செய்தித் தாள்களால் புகழ் பெறுகின்றார்கள்; பழி மறைகின்றது. ஒறுத்தல் செய்யாமல் பொறுத்தவர்க்குப் பொன்றுந்துணையும் புகழ் உண்டு (156) என்று திருவள்ளுவர் அறிவுறுத்தி உள்ளார். எள்ளளவும் பொறுமை இல்லாதவர்கள் ஆயினும் பலரை ஒறுத்துத் துன்புறுகின்றவர்கள் ஆயினும் செல்வமும் செல்வாக்கும் கொண்டு புகழ் தேடுகின்றவர்களுக்கே செய்தித் தாள்களின் துணையால் பெரும்புகழ் கிடைக்கக் காண்கிறோம். பிறர் பொருளை வெளவிப் பழியான செயல்களைச் செய்யக் கூடாது என்றும் செய்தால் சிறந்த அறிவும் பயனற்றதாகும் என்றும் (172, 175) திருவள்ளுவர் அறிவுரை கூறியுள்ளார். எவருடைய பொருளையும் வெளவி எவ்வாறோ செல்வராய் முன்னேறிய பிறகு, உலகம் அவரைப் புகழ்ந்து பெருமைப்படுத்தவும் அவருடைய அறிவாற்றலைப் போற்றவும் காத்திருக்கின்றது.

இவ்வாறு நேர்ந்துள்ள மாறுதலை எண்ணினால், புகழை அண்மைப் புகழ் என்றும் சேய்மைப் புகழ் என்றும் இருவகையாகப் பிரித்து உணரும் முறையின் சிறப்புத் தெளிவாகும். சேய்மைப் புகழ் என்பது ஒருவனைச் சுற்றியுள்ளவர்கள் வெறுத்தாலும் பழித்தாலும் தொலைவில் உள்ளவர்கள் அவனுடைய உண்மையான பண்புகளை அறியாமல் சிற்சில

செயல்களை மட்டும் அறிந்து புகழ்வது. திருவள்ளுவர் காலத்தில் சிறப்பாக விளங்கியது அண்மைப் புகழ் ஆகும்.''[18]

## கற்பு

கற்பு பற்றிய சிந்தனைகள் மு. வ வின் 'கரித்துண்டு', 'அகல்விளக்கு', 'கள்ளோ காவியமோ' ஆகிய புதினங்களில் இடம்பெறக் காணலாம்.

சமுதாயத்தை மேனிலைச் சமுதாயம், இடைநிலைச் சமுதாயம், கீழ்நிலைச் சமுதாயம் என மூன்றாகப் பிரித்து எண்ணுகிறார் மு. வ.

மேனிலைச் சமுதாயம் செல்வத்தால், செல்வாக்கால், பன்மொழித் திறத்தால் கொழிப்பது அவற்றின் துணைக் கொண்டு நேற்றுவரை தன்னோடு ஒட்டிய உறவை, ஊரை, மொழியை, இனத்தைப் புறக்கணித்துத் தன்னினும் மேலான தாகத் தான் கருதும் அயலகத்தாரை, அயல் அமைப்பை அயலார் வாழ்வை நாடிச் செல்லும் இயல்பினது அது. அதனால்தான் நகரங்கள் அயல் நாகரிகக் கவர்ச்சிக்கு முதலில் ஆளாகக் காண்கிறோம்.

கீழ்நிலைச் சமுதாயமோ கைக்கும் வாய்க்கும் காலமெல்லாம் பாடுபடுவது எங்கோ தங்கி, எதையோ பேசி, எதையோ உடுத்தி, எப்படியோ வயிறு வளர்க்கும் சமுதாயமது.

மொழிபற்றி இனம்பற்றி எண்ணவல்லது, எண்ணும் வாய்ப்புள்ளது இடையினமே; மிக நடுத்தர வருக்கமே. எனவே, அவர்களுக்கே அவர் புதினங்களைப் படைத்தார். என்றாலும் ஆங்காங்கே மேல்தரத்தார் கீழ்த்தரத்தார் வாழ்வும் ஓரளவு இடம் பெறலாயிற்று. அதனால் கீழ் நிலையார் சிலர் உயரவும் மேல்நிலையார் சிலர் இன உணர்வு பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

''மேல், கீழ், இடை என முப்பாற்பட்டு இயங்கும் நம் சமுதாயத்தில் டாக்டர் மு. வ. அவர்கள் இடைத்தர படுகையைச் சார்ந்தவர் இடைநிலையில் நின்று மேலும் கீழும் அரிமா நோக்காகப் பார்த்து இயன்றவரை நடுநிலை பேணிச் சமுதாய உணர்வு பெற்றவர், பெற வழி காட்டியவர்''[19] என்பர் ஆய்வாளர்.

---

18 மேற்படி; பக். 367—370

19 ம.ரா.போ. குருசாமி; மு.நூ; பக். 189—190

தமிழ்ச் சமுதாயம் உயர்ந்து விளங்க வேண்டுமெனின் ஒற்றுமையுணர்வும், 'யான்', 'எனது' எனச் செருக்கு அற்று இருத்தலும், திருந்தும் எண்ணமும், தொண்டு புரியும் குணமும் இருக்க வேண்டும் என்கிறார் மு. வ.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என முழங்கியவர் பாரதி. அவர் கூறியதுபோல் வாழ்வு மட்டுமன்று, சமுதாயத்திற்கு வலிமையும் கூட ஒன்றுபட்டால்தான் உருவாகும். கூட்டு மனிதர்களால் சமுதாயமும், கூட்டுச் சமுதாயத்தால் நாடும் வளமும், வலிமையும் பெற்று வாழும்.

''தமிழரிலே தனித்தனியே இவர் இவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்வது பழமை. தமிழர் கூடிக்கூடி இன்னது செய்து உயர்ந்தார்கள் என்று சொல்லும் நற்சொல்லே இனி வேண்டும். சேர்ந்து செயல் செய்து உயரும் வல்லமை தமிழருக்கு உண்டு என்பதை இனி உலகுக்கு உணர்த்த வேண்டும். தனியாள்களின் உயர்வு இனத்துக்கு என்ன நன்மை செய்யும்? தமிழர் சமுதாயம் உயர வேண்டாவா? தனி ஒருவன் அதோ ஒரு தொழிற்சாலையைத் திறமையாக நடத்துகிறான் என்று சொல்லும் நிலை போதாது தமிழர் பலர்கூடி நடத்தும் தொழிற்சாலை அதோ திறமையாக நடத்தப்படுகிறது என்னும் புகழ்நிலை வரவேண்டும்; வளரவேண்டும். அன்றுதான் தமிழர் சமுதாயமாக உயர வழி பிறக்கும். இன்றுள்ள தமிழகத்தில் தனிமரங்களாகத் தமிழர் உயர்வதையே காண்கிறோம் தோப்பாகக் கூடி உயர்வதைக் காண்கிறோமா? இல்லையே. இது பெருங்குறை''[20] எனத் 'தம்பிக்கு' எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

சமயத்தைப் பற்றிக் கொண்டு ஆசைப் பேய் நீங்காது இருக்கும் சிலரைப் பார்த்து 'யான்', 'எனது' எனும் செருக் கறுத்துத் தொண்டு புரிய வேண்டுகிறார் மு.வ.

''திரு வி. க. அறிவுரை...... எல்லோரும் இன்புற்று இருக்க நினைத்தல், மனிதர் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய முதல் கடமை என்றும் அதையே தம் வாழ்வின் குறிக்கோளாக முழங்கியவர் தாயுமானவர் என்றும், சமய வாழ்வில் தனிமனிதர் மோட்சம் பெறுவதே பெரிய குறிக்கோளாக நெடுங்காலம் இருந்து வந்தது என்றும், இராமலிங்க

20 மு.வ; தம்பிக்கு; ப. 51

சுவாமிகள் அந்த மூடநம்பிக்கைகளைத் தொலைத்தார் என்றும், பிறர்க்குத்தொண்டுசெய்து அவர்களின் துன்பத்தைத் துடைப்பதே சமயத்தின் குறிக்கோள் என்றும், அதனாலேயே 'யான்', 'எனது' என்று உணர்தலைச் செருக்கு என்று திருவள்ளுவர் குறிப்பிட்டார் என்றும்,அந்தச்செருக்கை அறுத்தால் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகலாம் என்று அவர் கூறினார் என்றும், இந்த உலகத்தை உயர்ந்த உலகம் ஆக்கலாம் என்றும்,ஆகையால்'யான்'' 'எனது'என்னும் செருக்கு அறுத்துத் தொண்டு செய்தலே நல்ல சமயநெறி என்றும்......''[21] என 'நெஞ்சில் ஒருமுள்'ளில் குறிப்பர்.

''திருடரைக் கண்டால், வஞ்சகரை எதிர்ப்பட்டால், கொலையாளிகளைப் பற்றிக் கேள்விப்பட்டால் உலகத்தைத் திருத்தியமைப்பதற்கு எண்ணுங்கள். சமுதாயத்தைச் சீராக அமைப்பதற்கு வழிவகை எண்ணுங்கள். இயன்றது செய்யுங்கள். அதைக் கடமை என்று எண்ணுங்கள். சிறைக்கூடங்களைப் பெருக்குவதால் இது முடியாது; வழக்கு மன்றங்களை வளர்ப்பதால் இது நடக்காது; போலிசும் இராணுவமும் வலுப்படுத்துவதால் இது இயலாது''[22] என வாடாமலரிலும் குறிப்பிடுகின்றார்.

ஒருவர் மற்றொருவருக்கு உரிய காலத்தில் உதவி புரிதலே தொண்டு எனலாம். தொண்டு செய்வதால் கொடும் நெஞ்சினரும் நன்னெஞ்சராக மாறி விடுவர். தொண்டு பற்றி மு.வ. பின்வருமாறு கூறுகின்றார்.

''நோயாளிகளுக்குத் தொண்டு செய்யலாம். குருடர் முதலானவர்களுக்குத் தொண்டு செய்யலாம். எப்படியோ முன்பின் தொடர்பு இல்லாதவர்களிடத்தில் அன்பு கொண்டு தொண்டு செய்தால் போதும். அதுதான் அருள் நெறி என்பது.''[23]

''திருக்குறள் படித்த அத்தனை பேரும் திருவள்ளுவர் போல் ஆகியிருக்க மாட்டார்களா? தாயுமானவர் படித்து அத்தனை பேரும் தெளிந்த ஞானிகளாக இருக்கமாட்டார்

---

21 மு.வ ; நெஞ்சில் ஒரு முள்; ப. 313

22 மு.வ ; வாடா மலர்; ப. 222

23 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 450

களா? நமக்கு வாய் மட்டும் இருந்தால் பேச்சுமட்டும் போதும்; கை, கால் அமைந்த உடம்பும் இருக்கிறது. ஆகையால் தொண்டும் செய்ய வேண்டும். தொண்டு செய்யாத வாழ்வு நிறையுடைய வாழ்வு அன்று; திருநாவுக்கரசர் புல் செதுக்கிய காரணமும், காந்தியடிகள் இராட்டினம் சுற்றிய காரணமும் இதுதான்.''[24]

இன்றைய சமுதாய நிலைபற்றி 'மண்குடிசை'யில் மு. வ. பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''இன்று உள்ள சமுதாயம் மண்குடிசை போன்றது. அதில் எலிகள் வளை தோண்ட முடிகிறது. பெருச்சாளிகள் கடைக்காலையே தோண்டுகின்றன. பலவகைப் பூச்சிகளும் குடி புகுகின்றன. எல்லாம் சேர்ந்து குடிசையைப் பாழாக்க முடிகிறது. மண் குடிசையாக உள்ளவரையில் இவைகளைத் தடுக்க முடியாது. ஒன்று குடிசையை விட்டு இயற்கையோடு இயற்கையாய் வெட்ட வெளியில் திரியவேண்டும் அல்லது ஒழுங்கான கல்வீடு கட்டி வாழவேண்டும்.''[25]

இங்குக் குறிப்பிட்ட மண் குடிசையைத் தமிழ் இன அமைப்பாகக் கொள்ளலாம். தமிழன்பால் இயல்பாக அமைந்துள்ள குறைகள் எலிகளாகக் குடிசையில் வளை தோண்டுகின்றன. அந்த இனத்தின் குறைகளைக் கண்டறிந்து வைத்துக் கொண்டு அவற்றின்வழி தமிழினத்தைத் தாக்கி அடிமைப்படுத்திஆதாயந் தேடும் அயல்மொழி இனப்போக்குகள் பெருச்சாளிகளாய்த் தமிழினத்தின் கடைக்காலையே தோண்டுகின்றன. இவற்றுக் கிடையே அவன்பால் வந்து தங்கிய மூடநம்பிக்கைகளும் அஞ்ஞான வழிபாடுகளும் பலவகைப் பூச்சிகளாய் அமைந்து அவன் முன்னேற முடியாமல் தொல்லை செய்து கொண்டே இருக்கின்றன. இதற்கு வழி என்ன? மொழி, இனக் கட்டுக்களைக் கடந்து உலகமெல்லாம் ஒரே மொழி, ஒரே இனம் என்று உருவாகும் காலத்தில் தமிழன் தன் இனமாகிய குடிசையை விட்டு வெளியேறி உலக மானுடப் பெருங்கடலில் தானும் கலந்து கரைந்து போகலாம்.

---

24 மேற்படி; ப. 446

25 மு. வ.; மண்குடிசை; ப. 503

அந்த நாள் அண்மையில் வருவதாக இல்லை அது வருகின்றவரை இப்படியே எலிகளுக்கும் பெருச்சாளிகளுக்கும் பூச்சிகளுக்கும் புழுக்களுக்கும் இடம் கொடுத்துக் கொண்டுத் தமிழன் வாழ முடியாது; வாழக் கூடாது. எலிகளும், பெருச் சாளிகளும், பூச்சிகளும், புழுக்களும் தாக்க முடியாத அளவு தங்க இயலாதவாறு தமிழினம் கல்வீடாக, காங்கிரீட்டு வீடாக உறுதிபெற வேண்டும் அதற்கான வழிவகைகளையே தம் புதினங்களில் மு. வ. சுட்டிக்காட்டிச் செல்கிறார் என்பது நன்குத் தெளிவாகும்.

## II. தமிழருடைய இனஉணர்வு, நாட்டுப்பற்று

''தமிழரிடையே உள்ள பகைப் பிரிவுகளை மேலும் வளர்க்கும் செயல்களைச் செய்யாதே; அத்தகைய சொற்களைச் சொல்லாதே. அவ்வாறான எண்ணங்களை எண்ணாதே. தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல் களையே போற்று. கொள்கைகளும் கட்சிகளும் இயக்கங்களும் நாட்டு மக்களின் நன்மைக்காகத் தோன்றியவை. ஆகவே கொள்கைகள் . கட்சிகள் இயக்கங்களைவிட நாட்டு மக்களின் நன்மையே பெரிது என்று உணர்.''[26]

'''யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நல்லநிலை வர வேண்டும். உலகம் ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்று ஆர்வம் கொள். அந்த நிலை வந்தால், நாட்டுப்பற்று என்பது வேண்டாததாகிவிடும் என்றும் அறிந்துகொள். அதுவரையில் நம் நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது என்பதை மறவாதே. ஊர்க்கெல்லாம் பொதுக்காவல் சிறந்த முறையில் ஏற்படும் வரையில் ஒவ்வொருவரும் தத்தம் வீட்டைத் தாளிட்டுக் காத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? அதுபோல் உலகத்திற்குப் பொதுவான ஒரு சிறந்த ஆட்சிமுறை ஏற்படும் வரையில் நம் நாட்டை நாம் தவறாமல் காத்துக் கொள்ள வேண்டும் . அது குறுகிய நோக்கம் அல்ல, இன்றியமையாத கடமை என்று உணர்ந்துகொள்.''[27]

''உன் மானத்தைவிட நாட்டின் மானம் பெரிது என்று உணர். உன் உயர்வைவிட நாட்டின் உயர்வு இன்றியமை

---

26 மு. வ.; தம்பிக்கு; ப. 54

27 மேற்படி; ப. 55

யாதது என்று உணர். உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும்போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுவிடு''[28]

இவை 'தம்பிக்கு' என்னும் நூலில் கூறும் கருத்துக்கள். 'அன்னைக்கு' என்னும் நூலில் இன்னொரு வகையில் ஏக்கத்தோடு எடுத்துரைக்கப்படுகிறது.

''இந்த விடுதியில் மலையாளத்து மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள்; ஆந்திரநாட்டு மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள். அவர்கள் அன்பாகப் பழகுகின்றார்கள். ஒற்றுமையாக இருக்கின்றார்கள். இப்படி நாமும் இருக்க வேண்டும் என்று என்னுடன் உள்ள தமிழ்நாட்டு மாணவர்களுக்குச் சொன்னேன். இதுதான் குற்றமாக முடிந்தது. இதனால் மறுத்தார்கள்; வெறுத்தார்கள்; பகைக்கின்றார்கள்.

பக்கத்து நாட்டு மாணவர்கள் இங்கே வந்து ஒற்றுமையாக இருந்து முன்னேறுகிறார்கள். இந்த நாட்டைத் தாய் நாடாகக்கொண்டுள்ள நாம் முன்னேற வேண்டாமா? என்று கேட்டேன். இது பெரிய குற்றமாம்.''[29]

''தமிழர்கள் ஏன் மாறி வரவேண்டும் என்றும் எண்ணிப் பார்த்தேன். கண்மூடிவாழ்ந்து ஏமாந்து நின்ற காரணத்தால் தமிழனிடம் பொருள் வளமும் குறைந்து வறண்டது; தான் உண்ணாமல் பிறர் பெட்டியையே நிரப்பிய பாவத்தால், தமிழன் கை தசை சுருங்கி மெலிந்து வாடி நீட்டவும் வலியிழந்து நிற்கின்றது. இந்த நிலை உற்றதனால் வாழ்க்கைப் போராட்டம் தமிழனையும் தாக்குவதாயிற்று. மற்றவர்களுக்கு உதவும் நிலையில் வள்ளலாக இருந்த தமிழன் மற்றவர்களைப்போல் தற்காப்புத் தேடி வாழவேண்டிய நிலைக்கு வந்துவிட்டான். இதுதான்குறை, குற்றம், குறுகிய நோக்கம்!''[30]

''தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும். காலம் அறிந்து

---

28 மேற்படி
29 மு.வ.; அன்னைக்கு; ப.8
30 மேற்படி; ப.11

இடம் அறிந்து சூழல் அறிந்து வாழத் தெரியாத காரணத்தால் அன்னப்பறவையின் இனம் ஏறக்குறைய அழிந்து விட்டதாம்; யானையின் இனமும் அழிந்துகொண்டிருக்கின்றதாம். தமிழனும் அப்படிப்பட்ட கண்மூடி வாழ்வு வாழாமல் தன்வாழ்வை மாற்றி அமைத்துக் கொண்டால் போதும். அன்னம் போலவும் யானை போலவும் உயர்ந்த வாழ்வு வாழ்ந்து புலவரால் பாடப்பட்டால் போதுமா? அப்படி வாழ்ந்து அழிந்துபோவதைவிட, எறும்பு போலவும் காக்கை போலவும் அழியா வாழ்வு பெறுவதே நல்லது. எறும்பும் காக்கையும் எந்த இடத்திற்கும் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி உண்டு வளர்ந்து வாழவில்லையா? வாழ்க்கைப் போராட்டத்தில் யானையும் அன்னமும் தோற்றுப் போக, எறும்பும் காக்கையும் வெற்றி பெறவில்லையா?''[31]

''உலகத்தின்மேல் அன்பும் தேசத்தின்மேல் பக்தியும் இருப்பது உண்மையானால், தமிழ் நாட்டின் மீது தமிழனுக்குக் காதல் இருக்கவேண்டும் என்று வீறுடன் சொன்னேன்.''[32]

இவ்வாறு 'தம்பிக்கு', 'அன்னைக்கு' என்று தாம் எழுதிய நூல்களில் தமிழினம் பற்றித் தாம் கூறிய கருத்துக்களைக் கரித்துண்டில் பம்பாயில் பேராசிரியர் கமலக்கண்ணன் வாயிலாக எடுத்துரைக்கக் காணலாம்.

''அங்கே கிராமம் கிராமமாகத் தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் இல்லாதபடி செய்தார்களாம். தமிழ் ஆசிரியர்களை மாற்றித் தெலுங்கு ஆசிரியர்களை அமைத்தார்களாம். தமிழ்ப்பிள்ளைகள தெலுங்கு கற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தப் பட்டார்களாம். தெலுங்கு கற்றுக் கொண்டால் தமிழ் தானே வரும் என்று போலிப் பேச்சு பரப்பப்பட்டதாம். தமிழ் அதிகாரிகள் மாற்றப்பட்டு ஆந்திர அதிகாரிகள் அனுப்பப்பட்டார்களாம். திருப்பதி நகராட்சிக் கழகத்தில் மூன்றில் ஒரு பங்கு தமிழ் உறுப்பினர் இருந்தும் அந்த நகரத்தில் துவக்கப் பள்ளியிலும் தமிழ் இல்லாதபடி செய்யப்பட்டதாம். ஒரு தமிழ் துவக்கப் பள்ளியும் இல்லாதபடி செய்யும் அளவிற்கு மற்றவர்களுக்குள் முயற்சியும் சூழ்ச்சியும் இருந்தபோதும்,தமிழர்கள் நான்கைந்து கட்சிகள் வைத்துக் கொண்டு தங்களுக்குள் பிரிந்து நெல்லிக்

31 மேற்படி; ப. 15
32 மேற்படி; ப. 19

காய்களாகச் சிதறுண்டு வீண்பேச்சுகளில் காலம் கழித் தார்களாம்.''[33]

''பிறர் உரிமையைப் பறிப்பது எவ்வாறு குற்றமோ, அவ் வாறே நம் உரிமை பறிபோவதைப் பார்த்துக் கொண்டு வாளா இருப்பதும் பெருங்குற்றம் என்றார். சித்தூர் மாவட்டத்தில் முதல் குற்றத்தை ஆந்திரர்கள் செய்தார்கள் என்றும் இரண் டாம் குற்றத்தைத் தமிழர்கள் செய்தார்கள் என்றும், இன்னும் செய்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். கையாலாகாத் தன்மையையும் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை என்று தமிழர்கள் தவறாக எண்ணிக் கொண்டு கெடுவதாகவும் குறிப் பிட்டார்.''[34]

''தெலுங்கு பேசும் தமிழ் நாட்டார் என்று சொல்ல வேண்டுமாம். உருது பேசும் தமிழ் நாட்டாரும் மராத்தி பேசும் தமிழ் நாட்டாரும் இல்லையா? அவர்களைப் போல் இவர்களைத் தெலுங்கு பேசும் தமிழ் நாட்டார் என்று கருத வேண்டும். இவர்களின் தொகைக்கு அடுத்தபடியானது தமிழ் பேசும் தமிழ் நாட்டாரின் தொகையாகும். இவர்களுக்கும் அடுத்ததுதான் தெலுங்கு பேசும் ஆந்திரர் தொகையாம்.''[35]

''இவற்றை எல்லாம் எண்ணிப்பார். தமிழன், பொது வாக, தன்னலம் மிகுந்தவன் என்று உணரலாம். தனித் தனியே தன்னலம் நாடிப் பொதுநலம் மறக்கும் கூட்டம் எப்படி ஒற்றுமை அடைய முடியும்? எப்படி முன்னேற முடியும்? மற்ற இனத்தாரைவிடத் தமிழர்க்குள் தன்னலம் மிகுதியா என்று நீ கேட்கலாம். ஆம் என்றே மறுமொழி சொல்லத் தோன்று கிறது.

எண்ணிப்பார்; நான் தோற்றாலும் சரி, நம்மவன் எவ னாவது வெற்றி பெறட்டும் என்ற உயர்ந்த எண்ணம் எத்தனை தமிழரிடையே காண முடியும்? என் சொந்தக் கொள்கை புறக்கணிக்கப்பட்டாலும் சரி, தமிழினம் வளர்ந்து செழிக்கட்டும் என்ற உயர்ந்த நோக்கம் எத்தனை தமிழ ரிடையே காணமுடியும்? என் கட்சி அழிந்தாலும் சரி, தமிழ்

33 மு. வ.; கரித்துண்டு; பக். 43—44

34 மேற்படி; ப. 44

35 மேற்படி; ப. 45

நாடு வாழ்ந்து விளங்கட்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் எத்தனை தமிழரிடையே காணமுடியும்? தமிழரிடம் தன்னலம் மிகுதியா, பொதுநலம் மிகுதியா என்று ஆராய்ந்து அறிவ தற்கு இந்த மூன்று 'தேர்வு' வைத்துப் பார். நான் சொல் வதன் உண்மை தானாகவே விளங்கும்.''[36]

தமிழர்தம் இந்தக் குறையை, தன்னலக் கோழைத் தன்மையை 'அகல்விளக்'கில் மாணவர் விடுதி நிகழ்ச்சி ஒன்றில் நன்குத் தெளிவாகக் காணலாம்.

''அன்று மாலை ஐந்து மணிக்கு விடுதி எதிரே போலீசின் வண்டி ஒன்று வந்து நின்றது. நாங்கள் எல்லோரும் பரபரப்பு அடைந்தோம். நேராக ஒரு குறிப்பிட்ட அறையை நோக்கி வருவதுபோல் போலீசார் வந்தனர். பின் தொடராதபடி எங்களைத் தடுத்துவிட்டு, ஓர் அறைக்குள் நுழைந்தனர். ஒரு மாணவனைப் பற்றிக் கொண்டு வந்தனர். நேரே வண்டியில் ஏற்றிச் சென்றனர்... அந்த மாணவன் வேறு யாரும் இல்லை; காலையில் கூட்டத்தின்போது ஆசிரியர்களையும் மற்றவர் களையும் இகழாமல் காந்தியடிகளின் கொள்கையை உணர்ந்து அன்பாக அமைதியாக நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லி, ஊர்வலத்தில் கலந்துகொள்ள விருப்பமில்லாமல் விடுதிக்குச் சென்ற அதே மாணவன்தான்... சிறிது நேரத்தில் வேறொருவன் வாயிலாக ஒரு செய்தி வந்தது. காலையில் இரண்டாவதாகப் பேசி வீர முழக்கம் செய்து ஊர்வலம் வேண்டும் என்று தூண்டிய அந்த மாணவன்தான், போலீசா ரிடம் அவனை அப்படிக் காட்டிக் கொடுத்து விட்டதாகச் செய்தி தெரிந்தது. எனக்கு வியப்பாக இருந்தது. அப்படி வீரமுழக்கம் செய்தவன், தான் போலீசாரை ஏமாற்றி விட்டதாகப் பெருமையடித்துக் கொண்டதோடு, இப்படி அடாத பொய் சொல்லி நல்லவனைக் காட்டிக் கொடுத்துச் சிறைப்படுத்திவிட்டானே என்று வருந்தினேன்......... இந்தச் செய்தி பரவிய பிறகு, மாணவர் ஒருவரை ஒருவர் கண்டாலும் ஐயுறத் தொடங்கினார்கள். பேசினாலும் பிறர் கண்ணில் படாமல் பிறர் செவியில் கேளாமல் மெல்லப் பேசினர். மாலனும் பயந்து 'நாம் இருவர் அடிக்கடிப் பழகிப் பேசி னாலும் வம்பு செய்துவிடுவார்கள். இன்னும் நான்குநாள்

---

36 மு.வ.; தம்பிக்கு; பக். 30-31

தனித்தனியே இருந்து விடுவோம்' என்று சொல்லித் தன் அறைக்குப் போய்விட்டான்.''[37]

மண்குடிசை கதைத் தலைவனாகிய மெய்யப்பன் வட நாட்டுக் கோயில்களையும் கங்கையாற்றையும் காணும் போது தமிழ்நாடு, தமிழ் இனத் திறம் பற்றி நினைத்துப் பார்க்கிறான்.

''தமிழ்நாட்டில் இல்லாத கோயிலும் குளமுமா இங்கே பார்க்கிறோம். ஏழை நாடாக இருந்தாலும் தமிழ்நாட்டு நகரங்களும் மலைகளும் பார்க்க அழகானவை. டில்லியில் பதினொரு மாதங்கள் இருந்த பிறகு, வடக்கே இன்னும் வேறு ஊர்களைப் பார்க்கத் தேவையில்லை.''[38]

''இவ்வளவு நீர்ப்பெருக்கும் தன்மையும் தமிழ்நாட்டு ஆறுகளுக்கு வாய்த்தால், தமிழ்நாட்டு ஆற்றங்கரைகளை உலகம் போற்றும்படியாகத் தமிழர்கள் செய்திருப்பார்கள். உள்ள சிறு இடங்களையும் எவ்வளவு பெருமையாகவும் சிறப்பாகவும் தமிழர்கள் போற்றி வருகிறார்கள்! குற்றாலம் தமிழர்களுக்கு இடையே இருப்பதால் எவ்வளவு சீராக வைத்துக் காக்கப்படுகிறது! வடக்கே இருந்திருந்தால் அது என்ன ஆகியிருக்குமோ?''[39] எனக் கங்கையாற்றைக் கண்ட போது மெய்யப்பன் தமிழினச் சிறப்பை உணர்கிறான்.

'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?' என்று பொதுவாகப் பாடினார் பாரதி. அது சிறப்பாகத் தமிழருக்கே உரியது என்பதுபோல அவர்கள்தம் அயல்மொழி மோகம், தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றைத் தம் புதினங்களின் வழி அவர் புலப்படுத்து கின்றார்.

'வாடாமல'ரில் தானப்பன் ஒரு சிற்றுண்டிச்சாலை வைக் கிறான். அதன் பெயர் 'பாம்பே தில்குஷ் ஓட்டல்.' அதுபற்றி, நல்ல தமிழில் பெயர் வைக்கக் கூடாதா என்று நண்பன் கேட்கிறான். அவர்தம் உரையாடலில் தமிழ் இனத்தின் தாழ்வு மனப்பான்மை நன்கு எடுத்துரைக்கப் பெறுகிறது.

---

37 மு. வ.; அகல் விளக்கு; பக். 148—149
38 மு. வ.; மண்குடிசை; ப. 124
39 மேற்படி; ப. 67

பிறமொழி மோகத்தைப் பின்வரும் நிகழ்ச்சிகளின் வழி அவர் புதினங்கள் தெளிவு செய்யக் காணலாம்.

''நான் நிலா என்று பெயரிட்டேன். அவன் விஜயா என்று அழைக்கின்றான்.''[40]

''...அந்த அம்முவா இவள்?

அம்மு என்று இப்போது சொல்லாதே. இப்போது இவருடைய பெயர் ராஜபுஷ்பம்.''[41]

''இளங்கோ என்று ஆசிரியர் அறவாழி வைத்த நல்ல பெயரை மாற்றி அவருடைய மாமியார் ரத்னகுமார் என்று அழைக்கிறார்.''[42]

தமிழன் தன்மானம் உள்ளவன் என்று கூறிக்கொண்டு தானும் வாழாது பிறரையும்,வாழ்விக்காது அழியும் இளைஞர் சமுதாயத்தை எண்ணி அவர் வருந்தினார். 'தமிழ் நெஞ்சம்' என்னும் நூலில் 'ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே'-தான் விளங்குதலின்றித் தன்குடி விளங்க வேண்டின் என்று உணர்த்திய கோவூர்கிழாரின் சிந்தனையைத் 'தம்பிக்கு' என்ற பகுதியில் பின்வருமாறு வற்புறுத்திக் கூறுகிறார்.

''உன்மானத்தைவிட நாட்டின் மானம் பெரிது என்று உணர். உன் உயர்வைவிட நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர். உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும்போது உன் நலம் உயர்வு மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக் கொடு.''[43]

இந்த உணர்வு 'கயமை'யில் நல்லய்யனுக்கும் வெங்கடேசனுக்கும் நிகழும் உரையாடலில் உணர்த்தப்பட்டுள்ளது.

''மற்றவர்களால் முடியும். தமிழனால் முடியாது. மானமுள்ள தமிழன் — நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சொன்ன வீரத்தமிழன் மரபில் வந்தவன் நான்.''

---

40 மு. வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 510
41 மு வ.; கயமை; ப. 162
42 மு. வ.; அல்லி; ப. 57
43 மு. வ.; தம்பிக்கு; ப. 55

'அந்தத் தமிழன் மரபில் வந்தவர்கள் தான் இன்று வாழத் தெரியாமல் வாடுகின்றார்கள்.'

'அது பற்றிக் கவலை இல்லை, வாடலாம்!'

'இந்தியா முழுவதும் எங்குப் பார்த்தாலும் உள்ள பிச்சைக் காரர்களில் பெரும்பாலும் தமிழர்களே. பிச்சைக்காரக் கூட்டம் எங்காவது இமயமலை அடிவாரத்தில் கண்டாலும், அங்குத் தமிழ் ஒலியைக் கேட்கலாம். மான மற்ற தொழில் அல்லவா? இதைப்பற்றியும் கவலை இல்லையா?'

நல்லய்யன் பேசவில்லை.

'தமிழ் நாட்டிற்குக் குஜராத்தியர் வருகின்றார்கள்; தமிழர் களிடம் கூலிவேலை கேட்பதில்லை. தமிழ்நாட்டுக்கு வங்காளி கள் வருகிறார்கள்; தமிழர்களிடம் அடிமை வேலை செய்வ தில்லை. தமிழ்நாட்டுக்கு மற்றவர்கள் வருகிறார்கள்; தமிழர் களிடம் கிளார்க் வேலையும் கேட்பதில்லை. ஏமாற்றும் தொழில் செய்தாலும் செய்வார்களே தவிர, மானமற்ற கூலி வேலையும், அடிமைத் தொழிலும், கிளார்க் வேலையும் செய்வ தில்லை. தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றவர்களில் அரைப்பங்கு கூலி வேலைக்காரர்கள்;கால்பங்கு வேறு அடிமைத் தொழிலாளிகள்; மற்றக் கால் பங்கு பாங்கு கிளார்க்குகள்; தெரியுமா? அதைப்பற்றியும் கவலை இல்லையா?'

நல்லய்யன் தலைகுனிந்தான்.

'போலிமானம் நீ எண்ணும் மானம்! வாழத் தெரியாத மானம்! ஆனால் அது செய்யும் தீமை அந்த அளவில் நிற்ப தில்லை. பிரகாசம் ஒரு நாள் ஏதாவது சொல்வான். அந்த மானத்தினால் நீ அவனோடு பேசமாட்டாய். மற்றொரு நாள் நான் ஏதாவது சொல்வேன். அன்று முதல் நீ என்னோடு பழக மாட்டாய். நான் சொல்வதைப் பிரகாசம் ஒப்புக்கொள்ள மாட்டான். கருத்து வேறுபாட்டால் அவனும் நானும் பகை. மூன்று பேருக்குள் மூன்று கட்சி. முப்பது பேர் இருந்தால் முப்பது கட்சி. இப்படி நம்மைப் பிரிப்பது இந்த மானம்! நம்மைக் கெடுப்பது இந்த மானம்! நம் அறிவையும் கெடுப் பது, நம் கடமை யுணர்ச்சியையும் கெடுப்பது இந்தப் போலி மானம். உண்மை மானம் வேறு! நீ திருடாதே, பொய்

சொல்லாதே, பிறர் வாழ்வைக் கெடுக்காதே. அது மானமுள்ள வாழ்வு மராத்தியர்கள் இப்படிப்பட்ட மானத்தைத்தான் போற்றுகிறார்கள். அதனால்தான் புகழோடு வாழ்கிறார்கள். நீயும் முன்னேற வேண்டும்; அதற்கு உதவியானது உண்மையான மானம்! உன்னை அழித்து, உன்னைச் சார்ந்தவர்களையும் அழிப்பது எதுவோ, அது போலி மானம்!''[44]

மேலும் தன்மானத்தைப் பின்வருமாறு 'நெஞ்சில் ஒருமுள்' என்னும் புதினத்தின்வழிப் புலப்படுத்துகிறார்.

''பெரியோர்கள் சொன்ன மானம் வேறு. நாம் பேசுகிற மானம் வேறு அம்மா. நூற்றுக்கு 80 எண் வாங்கி வந்த மாணவன் அடுத்தத் தேர்வுகளில் அதற்குக் குறையாமல் தன்னைக் காத்துக் கொள்வது போன்றது நல்ல மானம். இப்போது நாம் பேசுகிற மானம் வேறு. நூற்றுக்கு 20 எண் வாங்கியவன் அதையே 50 என்று மற்றவர்கள் நம்புமாறு நடிப்பது வேறு. இது வீணான முயற்சி. மனைவி கெட்டவளாக இருந்தால், பண்படாதவளாக இருந்தால் அதை நண்பர்களும் மற்றவர்களும் தாங்களே தெரிந்து கொள்ளட்டுமே! அதை ஏன் மறைத்து நடக்க வேண்டும்?''[45]

தமிழர்கள் மானம், வீரம் என்று பேசுவதில் எந்த அளவு உண்மை உள்ளது என்பதைக் 'கயமை'யில் சாடுகிறார்.

''பார்த்தாயா? நீயே தெரிந்து கொள். தமிழர்களில் செல்வர்களும் அதிகாரிகளும் இருக்கிறார்களே. அவர்கள் பெரும்பாலும் யார் யாரைக் கிளார்க்காக வைத்திருக்கிறார்கள்? யார் யாரை டிரைவராக வைத்திருக்கிறார்கள்? யார் யாரைச் சமையற்காரராக வைத்திருக்கிறார்கள்? யார் யாரை நம்புகிறார்கள்? ஆராய்ந்து பார். நாய்போல் நடக்க வல்லவர்களுக்கே அங்கெல்லாம் இடம் உண்டு. அரசியல் கட்சிகளிலும் அப்படித்தான். தமிழர் வீரம்பற்றிப் பேசுவதெல்லாம் ஆணவரின் பக்திபோல், பூசைபோல், அவருடைய நெற்றிக் குங்குமம்போல நல்ல பெயர் எடுப்பதற்குத்தான்.''[46]

---

44 மு. வ.; கயமை; பக். 209—210
45 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 470
46 மு.வ.; கயமை; ப. 214

## III தமிழர் மறை திருக்குறள்

திருக்குறள் தமிழினத்தின் 'மறைநூல்' எனலாம். மதநூல் வரிசையில் இடம்பெறாத ஒரு நூல் திருக்குறள் எனலாம். அவ்வாறு எனின் அது மறையாகுமா என்றால் 'மறையாகும்' எனப் பதில் உரைக்கலாம். வா.செ. குழந்தைசாமி திருக்குறள் எவ்வாறு மறையாக அமைந்துள்ளது எனப் பின்வருமாறு கூறுகிறார்.

"'Is it relevant to-day' என்பது இன்றைய தலைமுறை எல்லாத் துறைகளிலும் கேட்கும் கேள்வி... இப்படி ஒரு கேள்வியைப் பொதுவாக மதங்களின் மறை நூல்களைப் பற்றி அந்தந்த மதத்தினர் கேட்க இயலாது. கேட்டால் அம் மதத்தில் நம்பிக்கை இழந்தவர்களாக எண்ணப்படுவர். மறைகள் ஏற்கப்பட வேண்டியவை; எண்ணப்பட வேண்டியவை அல்ல. வள்ளுவம் மதம் கடந்த மறை. சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்றது வள்ளுவம். ஒரு வாழ்வியல் நூலாகக் கருதப்படுவதாகலின் அது தூய ஆய்வுகட்கு ஆட்படுத்தப்படக் கூடிய ஒன்று; அப்பாற்பட்ட ஒன்றன்று. வாதத்திற்காகக் கூற வேண்டுமென்றால் அதில் பழையன காணும் புலவர்கள் அவை நமது வாழ்விற்குத் துணையாக இருக்கும்வரை அவற்றை ஏற்கலாம். ஒரு கால கட்டத்தில் அவை நமது வளர்ச்சிக்குச் சுமையாக மாறிவிட்டால் அவற்றைத் தவிர்க்கலாம். அப்படிப்பட்ட பாராட்டத்தக்க ஒரு வாய்ப்பை மதம் கடந்து நிற்பதால் வள்ளுவம் நமக்கு அளிக்கிறது"[47] என்றார்.

தமிழ்மறை, தமிழர் மறையாக விளங்கும் திருக்குறள் சிந்தனைகள் பலவற்றைத் "தெய்வம் தெளிமின்"[48] எனத் தொடங்கித் தொகுத்துத் தந்தார் இளங்கோவடிகள். இளங்கோவைப்போல் திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய தமிழ்ச் சான்றோர் அனைவரும் ஏதோ ஒரு வகையில் பொன்னேபோல் திருக்குறளைப் போற்றித் தமிழ் நூல்களில் பயன்படுத்தி உள்ளனர். பாவேந்தர் பாரதிதாசனாரும்,

---

47 வா.செ குழந்தைசாமி: வாழும் வள்ளுவம்; பாரதி பதிப்பகம்; சென்னை; மு.ப. 1987; பக்.27—28

48 சிலம்பு. 30 : 187

''அறமி தென்றும் மறமி தென்றுமே
அறிகிலாத போது தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா?''

என்று திருக்குறளைத் தமிழர் மறையாக்கிக் குறிப்பிடுவர்.

வள்ளுவம் அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலைக் கொண்டது. இம் முப்பாலைப் பன்முறை மு.வ. குடித்துச் சுவையுணர்ந்தவர் எனலாம். அதன் விளைவாக அவரியற்றிய புதினங்களில், கட்டுரைகளில் திருக்குறளைப் பற்றி எழுதிச் சென்றுள்ளார்.

'தம்பிக்கு' எனும் தம் நூலிலே மு.வ. 'தமிழன் வாழ்வதற்காக, வளர்வதற்காகத்தான் திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். அதனைக் கற்று, பின்பற்ற வேண்டும்' எனக் குறிப்பிடுகிறார்.

வள்ளுவர் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் தமிழர்கள் கற்று இவ்வுலகத்தில் சீரழியாது வாழ்தல் வேண்டுமென்றார்.

''அறத்துப்பால் மட்டும் எழுதினால் தமிழர்கள் வாழத் தெரியாதவர்களாய்த் திகைத்துச் சீரழிவார்கள் என்று எண்ணித்தான், திருவள்ளுவர் பொருட்பாலையும் எழுதினார். அறத்துப்பாலை விட விரிவாக இரண்டு மடங்கு உள்ளதாகப் பொருட்பாலை எழுதினார். 'இன்னா செய்யாமை' என்று அகிம்சையை அறத்துப்பாலில் வற்புறுத்தியவர், 'பகை மாட்சி', 'உட்பகை' என்ற பகுதிகளைப் பொருட்பாலில் விளக்கிய காரணம் அதுதான். உலகம் எப்படிப்பட்டது என்பது திருவள்ளுவருக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் இவ்வளவு தெளிவாகப் பொருட்பாலை எழுத முடிந்தது.''[49]

செல்வங்களுள் தலையாயது கல்விச் செல்வமாகும். இது, கள்வராலும் தீயாலும் அழிக்கவியலா ஆற்றல் கொண்டது. கல்விச் செல்வத்தில் இலக்கியம், கணிதம், அறிவியல் முதலியன அடங்கினாலும் இதயத்தைக் கனிவிக்கும் ஆற்றல்

49 மு.வ.; தம்பிக்கு; பக்.12—13

சிறந்த இலக்கியங்களுக்கு மட்டும் உரிய பண்பாகும். சிறந்த இலக்கியங்களுள் யாவரும் போற்றக் கூடிய ஒன்றாக இருப்பது திருக்குறளாகும். மு.வ. குறளைத் தம் சொந்தச் செல்வமாக மாற்றிக் கொள்ள அன்புடன் வேண்டுகிறார்.

''நீங்கள் எப்படியாவது திருக்குறளைப் படித்து அதை உங்கள் சொந்தச் செல்வமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். முழுவதும் இல்லா விடினும் அறத்துப்பால் மட்டுமாவது கற்றுத் தேர வேண்டும். பொருட்பாலும் காமத்துப்பாலும் கடலின் கரைகள். அறத்துப்பால்தான் வாழ்க்கைக் கடலைப் பற்றியது. என்ன அழகாகச் சொல்லியிருக்கிறார்! பாருங்கள். வாழ்க்கை அன்பில் தொடங்கி வளரும் வளர்ச்சியைக் காட்டி அருளில் நிலைபெறுவதை விளக்குகிறார்.''[50]

வாழ்க்கை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றால் முழுமை பெறுவது. ஒன்றுமட்டும் இருந்தால் போதாது. ஒன்றை மறந்து ஒன்றைப் போற்றினாலும் போதாது. இயற்கை நியதி இதுதான். இந்த இயற்கை நியதியைத் தமிழனுக்குரிய வாழ்வியல் நூலாகத் திருவள்ளுவர் உருவாக்கித் தந்துள்ளார். திருவள்ளுவரை, திருக்குறளைப் படித்தால் மட்டும் போதாது; பாடினால் மட்டும் போதாது; தொழுதால் மட்டும் போதாது; தொடர்ந்து வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்று 'தம்பிக்கு' எனும் நூலில் வற்புறுத்தக் காணலாம்.

''தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீய வழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் அல்லல்படுகிறான்; அவனுடைய உடல் பல நோய்க்கிருமிகளுக்கு இடம் கொடுத்து அவனுடைய உள்ளத்தில் அமைதியைக் கெடுத்து அல்லற்படுகிறது. உடலும் வேண்டும்; உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும்.''[51]

---

50 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப.448

51 மு.வ.; தம்பிக்கு; பக். 5—6

''மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம். ஆனால், தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது. இந்த உண்மையை நன்றாக உணர்ந்தவர் திருவள்ளுவர். அற நெறியும் வேண்டும்; பொருள் வளமும் வேண்டும்; இன்ப வாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள். அறத்தை நினைத்துப் பொருளை மறக்கும்படியாகத் திரு வள்ளுவர் கூறவில்லை. பொருளையோ இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அந்தப் பெருந்தகை கூறவில்லை. உலகத்து நூல்களில் பல அறம், பொருள், இன்பம் மூன்றில் ஒவ்வொன்றை மட்டுமே வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். வாழ்க்கையின் பல பகுதிகளையும் போற்றி வாழ வேண்டும் என்பதை உணர்த்த வந்த திருவள்ளுவர் இந்த மூன்றையும் தெளிவுறுத்தியுள்ளார். தமிழராகிய நாம் திரு வள்ளுவரைப் பெற்றிருக்கிறோம். நம்மில் சிலர் அந்த நூலைக் கற்றும் இருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் கூறிய படி வாழவில்லை. நல்ல தன்மை தேடுகிறோம்; வல்லமை தேடவில்லை. அதனால்தான் தாழ்வுறுகிறோம்.''[52]

விஞ்ஞான உண்மைகள் பற்றியும் சமய உண்மைகள் பற்றியும் திருவள்ளுவரின் கருத்துக்களை மு. வ. தம் 'நெஞ்சில் ஒரு முள்'ளில் கீழ்வருமாறு கூறியுள்ளார்.

''விஞ்ஞான உண்மைகள் கதைகளால் பரவி விளங்க வில்லை; அதுபோல் சமய உண்மைகள் அற்புதங்களால் விளங்க வேண்டியதில்லை என்பது அறவாழியின் கருத்து''[53] அந்த உண்மைகள் குறள்வழி அமைவதாக இங்குக் கூறுகிறார்.

இந்தச் சிந்தனைகள் பல்வேறு வகைகளில் பல்வேறு மாந்தர் வழி வற்புறுத்தப்பட்டிருப்பது, 'தமிழ் மொழி' என்னும் பொழிவில் சுட்டப்பெற்றுள்ளது.

திருக்குறள் ஓர் இயற்கை நூல். தமிழ் மண்ணில், தமிழ் மரபில், தமிழ் இன வாழ்வுக்காகத் தோன்றிய ஒரு தமிழ் நூல். தமிழன் மனிதனாய், மாமனிதனாய், தெய்வமாய் அதனையுங் கடந்து பெருநிலையை எய்தும் பேர் உயிரினமாய் அவனை உருவாக்கும் ஒரு மறைநூல். அந்த நூலில் கூறிய உண்மைகள் உலகத்துக்கெல்லாம் உரிய இயல்பினதாய் இருந்தும் உரிய

52 மேற்படி; ப. 7
53 மு. வ.; நெஞ்சில் ஒரு முள்; ப.323

தமிழன் பின்பற்றவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு அவர் புதினங்களில் பல இடங்களில் சுழன்று கொண்டிருப்பதைக் காணலாம்.

திருக்குறளை மட்டும் பொருள் விளங்கினாலும் விளங்கா விட்டாலும் மனப்பாடம் செய்து வைத்துக் கொள்வதே கடமை என்ற குறிக்கோள் இடம்பெறக் காணலாம்.

## IV பெண்மை நலம்

தமிழ்மொழி என்று பிறந்தது என உணராத இயல் புடைத்து. அதன்கண் தோன்றிய இலக்கியங்கள் அக்கால வாழ்க்கை மரபுகளை, பண்புகளை அப்படியே படம்பிடித்து வைத்துள்ளன. அவற்றுள் சில இக்காலத்திற்கு ஏற்றன; சில ஏலாதன. இவற்றை யெல்லாம் எண்ணாமல் வாழும் தமிழ்க் குடும்பங்கள் சீர்கெட்டுச் சிதைந்து போகின்றன.

இப்பகுதியில் கற்பு, இல்வாழ்க்கை, மனைவிக்கு உரிமை கொடுத்தல், தமிழ்நாட்டுச் சமையலால் பெண்ணடிமையாதல் ஆகியன ஆயப்படுகின்றன.

### கற்பு

கற்பெனப் படுவதற்குக் காலம்தோறும் பொருள் மாறு பட்டு வருகின்றது. பொதுவாகக் கற்பெனில் 'ஒருவன் ஒருத்தி யோடு அல்லது ஒருத்தி ஒருவனோடு உள்ளம், உடல் இவற் றால் ஒன்றுபட்டும், இவற்றில் மாற்றம் நிகழும்போது அவற் றிற்கேற்ப மாறியும் அமைவதைக் கற்பு எனலாம். பண்டைச் சமூகம், வேளாண்மைச் சமூகம், தொழிலகச் சமூகம் ஆகியன வற்றுள் முதலிரு சமூகங்களிலும் கற்பு நெறியை மகளிரிடத் தில் எதிர்பார்க்கலாம். ஆனால் இன்று வினாடிக்கு வினாடி உற்பத்தியைப் பெருக்கும் நாகரிக தொழிலியற் சமூகத்தில் மகளிரிடத்தில் கற்பை எதிர்பார்த்தல் பொருத்தமற்றதாகும். 'கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை' முதலிய பண்டைக் காலக் கொள்கையை இன்றும் பின்பற்றுதல் அறிவீன மாகும்.

மு. வ. மேற்கூறிய கருத்தைப் பின்வருமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்.

''கற்பு என்றால் வாழ்நாள் முழுவதும் ஒருவன் ஒருத்தியாக உண்மையோடு வாழ்வது என்று சொல்வார்கள். அது பழங்காலத்திற்கு மிகப் பொருத்தம். பழங்காலத்தில் கைத்தொழில் வளர்ச்சி மட்டும் இருந்தது; அப்போது ஒரு நெறியும், அதில் நம்பிக்கையும் உறுதியாக இருந்தபடியால், ஒருவன் ஒருத்தி என்று வாழ்வது எளிதாக இருந்தது. இந்தக் காலத்தில் இயந்திரத் தொழில் வேகமாக வளர்ந்து வருகின்றது; ஆராய்தலும் அனுபவித்தலும் மிகுதியாக உள்ள காலம் இது. ஆகவே ஒருவனை விட்டு இன்னொருவனுடன் வாழும்படியாக நேரும். ஒருவனை விடாமல் இன்னொருவனுடன் வாழ்வதுதான் தவறு. எப்போது, எவனுடன் வாழ்கிறாளோ அவனுக்குத் துரோகம் செய்யாமலிருந்தால் போதும். அதுதான் கற்பு. நம் நாட்டில் ஆண்களைப் பொறுத்தவரை இதை ஒத்துக் கொள்கிறார்கள். பெண்களைப் பற்றி மட்டும் உடன்படுவதில்லை. பெண்ணடிமை இந்த நாட்டில் உள்ளது என்பதற்கு இதுவே சான்று.''[54]

இத்தகு 'கற்பு' போன்ற கொள்கைகள் தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கு, சமுதாய முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக அமைவனவாகும்.

ஓர் ஆண் தனக்கு ஒரு பெண்ணைத் தேடுங்கால் கன்னிப் பெண்ணாகத் தேடுகிறான். இந்நிலை நம் நாட்டில் காணப்படுவதாகும். அமெரிக்கா, இரஷ்யா முதலிய அயல்நாடுகளில் வதியும் ஆண்கள் பெண் தேட விரும்பின் தனக்குப் பிடித்த கன்னிப் பெண் கிடைப்பின் மணந்து கொள்வான். அல்லது தனக்குப் பிடித்தவள் மாற்றான் மனைவியாக இருந்து விவாகரத்து செய்யப் பெற்ற பெண்ணாக இருந்தாலும் மணந்து கொள்வான். கன்னிப் பெண்ணுக்காகத் தேடியலைந்து காலத்தை வீண் செய்ய மாட்டான்.

''தமிழ்நாட்டு ஆண்களின் மனப்பான்மை வேறு. மற்ற நாட்டு ஆண்களைப் போல அவர்களை எண்ணி விடாதே. பொதுவாகவே ஆண்கள் மனைவி தேடும்போது, தூய்மை கெடாத கன்னிப் பெண் வேண்டும் என்று தேடுவார்கள். தமிழ்நாட்டு ஆண்கள் இந்த வகையில் மட்டும் மற்றவர்களைவிட மிகவும் பிற்போக்கானவர்கள் என்பது

54 மு. வ.; கரித்துண்டு; பக். 239 - 240

என்னுடைய எண்ணம்''[55] என்பது அவர் பாத்திரம் தரும் கருத்து.

அடுத்து ஆண்கள், வேலை செய்யும் பெண்கள் ஆகியோரின் கற்பைச் சேற்று நிலத்திற்கு ஒப்பிட்டும் வீட்டில் இருக்கும் பெண்களின் கற்பை மணற்பாங்கான நிலத்திற்கு ஒப்பிட்டும் பேசுகிறார் மு.வ. மணற்பாங்கான பகுதிகளில் சின்னஞ்சிறு மணல் அவ்வப்போது காலை உறுத்தும்; அதிலே நடந்து பழகிக் கொண்டால் பழக்கமாகிவிடும். அதாவது சிறுசிறு சிக்கல்களுடன் இருப்பது குடும்பப் பெண்ணின் வாழ்வாகும். அவை கற்பு தவறுவதற்கு உரிய வரய்ப்பாக இரா. ஆனால் சேற்று நிலத்தில் பல வழுவழுப்பான பகுதிகள் இருக்கின்றன. அவை காலை அதிகமாக ஊன்றி வைத்தாலும் மெதுவாக வைத்தாலும் வழுக்கிவிடும் இயல்பு உடையன. அது போன்று வெளியிற் செல்லும் ஆண்களுக்கும், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் ஒழுக்கத்தில் தவறுதலுக்குரிய வாய்ப்புகள் நண்பர்களாலும் உறவினர்களாலும் சூழ்நிலைகளாலும் சந்தர்ப்பத்தாலும் வாய்க்கின்றன. ஆகவே வழுக்குதலை உடைய சேற்று நிலத்தில் விழுபவர்களை வேண்டுமானாலும் மன்னிக்கலாம். ஆனால் மணற்பாங்கான பகுதியில் விழுபவர்களை மன்னித்தல் கூடாது என்கிறார். இக்கருத்தை அகல்விளக்கில் பாக்கியத்தின் தங்கையும் அவள் கணவனும் உரையாடும் போக்கில் எழுதிச்செல்கிறார் மு.வ.

''உண்மையான கட்சி நான் சொல்கிறேன். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஒழுக்கம் தவறாதவர்களுக்குத்தான் முதல்மதிப்பு உண்டு. ஆனால், ஒன்று எண்ணிப் பார்க்க வேண்டும். சிலர் மணலில் நடக்கிறார்கள், சிலர் சேற்றில் நடக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். யார் வழுக்கி விழுந்தால் பெருந்தவறு? என்றார்.

சேறு வழுக்கும். விழுந்தால் தப்பு இல்லை. மணலில் நடப்பவன் விழுந்தால் அது பெரிய குற்றம் என்றாள் அம்மா.

அதுபோல்தான் ஆண், பெண் வாழ்க்கை. ஆணின், வாழ்க்கை வெளியே பலரோடு பழகித் திரியும் வாழ்க்கை. பலரோடு பழகுவதால் மனம் கெடுவதற்கு வாய்ப்பு உண்டு. ஒழுக்கம் கெடுவதற்கும் வழி உண்டு. சேற்றில் நடந்து

---

55 மேற்படி, ப. 237

வழுக்குவது போன்றது அது. பெண்ணின் வாழ்க்கை குடும்பத் தளவில் பெரும்பாலும் இருந்து கணவனோடும் மக்களோடும் பழகி அமையும் வாழ்க்கை மனம் கெடுவதற்கும் வாய்ப்பு இல்லை. ஒழுக்கம் தவறுவதற்கும் வழி இல்லை மணலில் நடப்பது போன்றது அது. ஆகையால் தவறி விழவே கூடாது. விழுந்தால் நொண்டியாக இருக்க வேண்டும் அல்லது நோயாளியாக இருக்க வேண்டும்.

இவ்வாறு பேசிய பேச்சு முடிவதற்குள் தங்கை குறுக்கிட்டு 'இந்தக் காலத்தில் பெண்களும் வீட்டைவிட்டு வெளியே போய்ப் பலரோடு பழக வேண்டியிருக்கிறது' என்றாள்.

படித்துவிட்டு வேலைக்குப் போகும் பெண்களைச் சொல்கிறாய் அவர்கள் சேற்றில் நடப்பவர்கள். ஆகவே வழுக்கி விழுந்தால் மன்னிக்க வேண்டும்.''[56]

**இல்வாழ்க்கை**

கற்பில் காட்டுகின்ற இந்தத் தெளிவு போலவே தமிழர்கள் தங்கள் இல்வாழ்க்கையிலும் தெளிவுபெற்று நன்கு வாழ வேண்டும் என்று மு வ. கருதினார். இல்வாழ்க்கை என்பது அன்பால் உருவான மாளிகையாகும்: கணவன், மனைவி ஆகிய இருவரே அம்மாளிகையின் பங்குதாரர்கள்; அவர்களுக்குச் சில பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. சுவரில்லா அம் மாளிகையில் நண்பர்களோ உறவினர்களோ சின்னேரத்தில் தடுப்புச் சுவராக அமைந்துவிடுகின்றனர். இதனால் கணவன் மனைவியரிடையே பிரிவு ஏற்படுகின்றது. இதைக் கண்டு மு வ. வருந்தினார் அவ்வப்போது அவருக்கு ஆண் பெண் உரிமைப் போராட்டத்தில் வெற்றி காணாது அல்லலுறும் குடும்பத் தலைவன், தலைவியர்களிடமிருந்து கடிதங்கள் வரும். அதற்கு அவர் ஒன்றுபட்டு வாழ்தல்பற்றிப் பதிலிறுப்பார். அத்தகு ஒருமைப்பாட்டை விரும்பிய நெஞ்சம், தாம் படைக்கும் புதின உலகத்திலும் அத்தகு நிலை நிலவ வேண்டும் என எண்ணியது.

'கள்ளோ காவியமோ' புதினத்தில் இடம் பெறும் உரையாடல் மேற்கூறிய சிந்தனைக்குச் சிறப்பான இடத்தை அளிக்கின்றது.

---

56 மு. வ.; அகல் விளக்கு; பக். 327—328

''அருளப்பா! காதல் வாழ்க்கையில் ஒருவகைக் கண்மூடி வாழ்வு வேண்டும். தொடக்கத்தில்தான் ஆராய்ச்சி வேண்டும். பிறகு, ஆயுள் வரைக்கும் ஆராய்ச்சியும் கூடாது; அறிவும் மிகுதியாகக் கூடாது ஒருவர் குற்றம் ஒருவருக்குத் தெரியாத அன்பு வாழ்வு — கண்மூடி வாழ்வு வாழ வேண்டும்'[57] என்கிறார் மு. வ. இதில் ஆராய்ச்சி என்பதற்கு ஒரு எல்லை உண்டு; அதை மீறினால் இல்வாழ்க்கையில் குழப்பம் ஏற்படும் என்பதைச் சுட்டிச் செல்கிறார்.

இல்வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் நேர்மை, நியாயம் முதலியனவற்றை வாதித்தல் கூடாது. அப்படி அடிக்கடி வாதித்தல் குடும்பம் எனும் புகைப்படத்தில் மேலும் மேலும் கீறல்கள் விழுதலைப் போன்றதாகும். எனவே இல்வாழ்க்கையில் ஆராய்ச்சி செய்தலை விடுத்து அன்பு வாழ்வு வாழ வேண்டும்.

''நியாயம் பேசி நேர்மை பார்த்து உலகில் வாழ முடியாது. அன்பை வளர்த்து பொறுமை பூண்டு எப்போதும் வாழ முடியும். உள்ளன்பு இடம் பெற்ற இல்வாழ்க்கையில் நியாயம், நேர்மை இவற்றை மதிக்கலாமா? அது என்ன? நீதி மன்றமா? வம்பர்கள் வழக்காடும் இடமா? அது ஒரு கோயில். அங்கே அன்பு ஆர்வம் இவைகளே இடம் பெற வேண்டும். பழைய அன்பை நினைத்துப் பார்! இன்று உன் அறிவு எடுத்துக் காட்டும் வாழ்க்கையை மறந்துவிடு'[58] என்கிறார்.

மேலும் தொடர்ந்து,

''ஒவ்வொரு வேளை அன்புக்கும் சோதனைக் காலம் நடக்கும். அப்போது அறிவைத் தொலைவில் வைத்து வர வேண்டும். 'கூர்த்த அறிவெல்லாம் கொள்ளை கொடுக்க வேண்டும்' என்று தாயுமானவர் சொன்னது கடவுளின்வழி வாழ்க்கைக்கு மட்டுமல்ல; காதலர் வாழ்க்கைக்கும் முழுவதும் பொருந்தும்.''[59] என்றும் கூறுகின்றார் மு.வ.

அன்பு இல்வாழ்வின் அடிப்படையாகும். ''வாழ்க்கை வெறும் விளையாட்டல்ல. பெரிய கோட்டை கட்டுவது அருமை; இடிப்பது எளிமை. அறுபது ஆண்டு ஒற்றுமையாக

57 மு. வ.; கள்ளோ? காவியமோ?; ப.81

58 மேற்படி; ப. 84

59 மேற்படி

வாழ்ந்த வாழ்க்கையை ஒரு சிறுமனம், பொல்லாத மனம் பிரித்துப் பாழாக்கிவிடும். இந்தக் காலத்தில் அறிவும் ஆராய்ச்சியும் தொத்துநோய் போல் வீடு தோறும் பரவு கின்றன. அவைகள் இருக்க வேண்டிய இடம் வேறே; செலுத்த வேண்டிய செங்கோல் வேறே; அவற்றிற்கு இல் வாழ்க்கையில் இடம் கொடுக்கிறார்கள். அன்பைத் துரத்தி விட்டு அறிவை வாழ விடுகின்றார்கள். அன்பெனப் படுவது அறிவு''[60] என்கிறார் மு.வ.

**மனைவிக்கு உரிமை**

ஆணும் பெண்ணும் இல்வாழ்க்கையில் ஒருங்கிணைந்து வாழ்தல் மட்டும் கடமையாகிவிடாது. உலக விவகாரங்களை அறிந்து கொள்ளல், ஒரு செயல் செய்யின் நன்மை விளையுமா தீமை விளையுமா எனச் சிந்தித்தல் முதலியனவற்றை ஆண் எண்ணி முடிபுக்கு வருதல் போன்று பெண்களும் சிந்திக்க உரிமை அளிக்க வேண்டும்.

''ஆண் எண்ணுவது போல் பெண்ணும் எண்ண வேண்டும். இருவரும் ஒருங்கே உண்பதும், உறங்குவதும் பெருமை அல்ல. ஒருங்கே எண்ண வேண்டும். எண்ணத்தில் ஒத்திருந்தால் அதுதான் குடும்ப இன்பம். எண்ணத்தில் மாறு பட்டு இருந்தால், அதுதான் குடும்பத் துன்பம்.''[61]

தமிழ்நாட்டில் இன்று பெண்ணுரிமை பெரிதும் பேசப் பட்டாலும் அந்த அளவுக்கு அவர்களுக்கு உரிமை வாழ்வு இல்லை என்பது தமிழ்ப் பெண்கள் வாழ்விலிருந்து தெரிகிறது. பெண்ணுக்கு, மனைவிக்கு உரிமை கொடுத்தல் வேண்டும். அந்த உரிமையில் ஓரிரு குடும்பங்கள் கெட்டாலும் நாடு நலம் பெறும் இத்தகு தவறுகளை மன்னித்தல் வேண்டும். இதனை மு.வ தம் புதினங்களில் பின்வருமாறு கூறுகிறார்.

''மனைவிக்கு உரிமை கொடு. உரிமையில் தீமை நேர்ந் தாலும் கவலைப் படாதே. இரண்டு மூன்று குடும்பம் உரிமை யால் கெட்டாலும் சரி, தமிழ்நாடு சீர்படும். ஆங்கில நாட்டைப் பார். அவர்களுடைய முன்னேற்றத்துக்குக்

---

60 மேற்படி; ப. 89
61 மேற்படி; ப. 100

காரணம் அங்கே இருக்கும் குடும்ப உரிமைதான்''[62] என 'மலர் விழி'யிலும்,

''ஒருவர்பின் ஒருவராக நின்று ரயில் சீட்டு வாங்குவது, ஒருவன் ஒருத்தியோடு கற்புடன் வாழ்வது, விருந்தோம்பல், சுற்றம் தழுவல் முதலியவை சமுதாய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டவை. இவற்றைப் போற்றுவது கடமை. ஆனால் தவறுகளும் நேரும். அப்போது சில தவறுகளை மன்னித்துப் பொறுக்கும் பண்பாடு இல்லாமல், தண்டித்து அழிக்கும் கொடுங்கோன்மை இருக்கக் கூடாது.''[63] என நெஞ்சில் ஒரு முள்ளிலும், மு.வ. தெளிவாக விளக்குகிறார்.

### தமிழ்நாட்டுச் சமையலும் பெண்ணடிமையும்

தமிழ்நாட்டில் சமையல் அறைகளே பெண்களை அடிமைகளாக மாற்றிவிடுகின்றன. பெண்கள் பிற வேலைகளைக் காட்டிலும் உணவைச் சமைத்து வைப்பதிலேயே தம் நேரத்தின் பெரும்பகுதியைச் செலவழிக்கின்றனர். இதனால் உலகச் செய்திகள், சமுதாயப் போக்குகள் முதலியனவற்றைப் பற்றி அறிந்து கொள்ள இயலாதவர்களாக அமைகின்றனர். தமிழகத்தில் அரிசியைப் பல மாற்றுருவப் பண்டங்களாகச் செய்து தமிழர்கள் உண்ணக் கற்றுக் கொண்டனர். ஆனால், பிற மாநிலங்களில் இத்தகு தயாரிப்புகள் இல்லை. உண்ணும் உணவில் சுவையறிந்த தமிழர்கள், அவ் வுணவைத் தயார் செய்யும் பெண்கள் மனச் சுவை அறிந்து அவர்களைச் சுதந்திரமாக வாழ விடுவதில்லை.

''தமிழ் நாட்டுப் பெண்கள் முன்னேறாத வகையில் தமிழ் நாட்டுக்கு உயர்வு இல்லை என்று நான் சொல்வது வழக்கம் அல்லவா? இந்த நாட்டைப் பார்த்த பிறகு அந்த உண்மை நன்றாக விளங்குகிறது. தமிழ் நாட்டுச் சமையல் அறைகளே, எங்கள் தாய்மார்களுக்கு விடுதலை அளியுங்கள் என்று இங்கிருந்து முறையிடலாம்போல் தோன்றுகிறது.''[64]

---

62 மு வ.; மலர் விழி; ப. 146

63 மு.வ.; நெஞ்சில் ஒருமுள்; ப. 539

64 மு.வ.; பெற்றமனம்; ப. 248

''வட நாட்டு உணவு சுவைப் பாகுபாடு குறைந்ததாக இருப்பதால் அங்குள்ள பெண்களுக்கு வேலை குறைவாக இருப்பதையும், தமிழ்நாட்டு அறுசுவை உணவு பெண்களின் வேலையைப் பெருக்குவதையும் உணர்ந்தார்கள்.

...இன்னும் பலவகையாகவும் அரிசி என்னும் ஒரே பொருளை நூறுவகை உணவுகளாக்கிச் சிற்றுண்டிகளாக்கி நாவின் சுவை யுணர்வைத் தமிழர்கள் வளர்த்துள்ளதுபோல் வேறு எந் நாட்டிலும் வளர்த்திருக்க முடியாது என்று உணர்ந்து வியந்தார்கள். ஆனால் இப்படி வளர்த்த நாக்கு நன்றி மறந்து தமிழ் மக்களுள் ஒரு பாதியாகிய பெண்ணி னத்தைச் சமையலறையில் பகல் முழுவதும் கட்டுப் படுத்தி அடிமையாக்கியதைச் சீராளர் எடுத்துரைத்தபோது, தமிழினத் தின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்று தேன்மொழிக்கு ஓர் எண்ணம் தோன்றியது.''[65]

பொதுவாகத் தமிழக உணவுகளை நோக்குவோமாயின் தமிழர்களே உணவின் மிகுதியான வகைகளை உணர்ந்தவர் கள் எனலாம். தில்லி, இராஜஸ்தான் முதலிய இடங்களில் ரொட்டியையும் சட்டினியையும் வைத்துக் கொள்வர். அதுவே அவர்களுக்குப் போதிய உணவாக அமைகின்றது. ஆனால் தமிழக மக்கள் பலவகையான உணவுகளை உண்டு களிக்கின்றனர். மு.வ. அரிசியை மையப் பொருளாக வைத்து தமிழர்கள் உண்ணும் உணவினைப் பட்டியலிட்டுக் காட்டு கின்றார்.

''உணவு வகைகள் பெரும்பாலும் தமிழ்நாட்டு உணவு களாகவே இருந்தன. நெய்ச்சோறு, எலுமிச்சஞ்சோறு, தேங்காய்ச் சோறு, எண்ணெய்ச்சோறு, நெல்லிக்காய்ச் சோறு, குழம்புச் சோறு, வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், தயிர்ச் சோறு எனச் சோற்றில் பலவகை; நெய் இட்டளி, பால்போளி, பால் பூரி, சப்பாத்திக் குருமா, குழியாப்பம், வெள்ளப்பம், பணியாரம், உருளைக் கிழங்கு வறுவல், சவ்வரிசி வற்றல், அப்பளம், பப்படம், முறுக்கு வற்றல், வாழைத் துணுக்கு, விளங்காய்ப் பச்சடி, காரெட் சீவல், மிளகு வெள்ளரி, புதினாத் துவையல் எனத் துணை யுணவு பலவகை.''[66]

---

65 மேற்படி; ப. 298

66 மு வ.; கயமை; பக். 106—107

இன்னும் இந்தத் தமிழ்நாட்டில் பெண்கள் சுவையான உணவு முதலியவற்றைச் சமைப்பதிலேயே தங்கள் பொழுதையெல்லாம் போக்குவதை, அவ்வாறு அவர்கள் சமையல் கட்டிலேயே உண்டு கிடக்குமாறு வற்புறுத்துவதை எண்ணி வருந்துகிறார் உணவு வகைகளை, கறி வகைகளைப் பலவாறு பல சுவையினதாக ஆண்கள் பெருக்கிக் கொள்வதால் பெண்களெல்லாம் அடிமையாகிறார்கள் என்று கருதுகிறார். இறைவன் படைத்த குடல் எல்லோருக்கும் ஒன்றாக இருக்கும் போது தமிழர்களுக்கு மட்டும் ஏன் பலவகைக் கட்டுப்பாடுகள் என்று கேட்கிறார்.

''ஆனால் ஒன்று சொல்கிறேன். மனிதர் எல்லோரும் பொதுவானவர்கள். எல்லோருடைய குடலும் ஒன்று; வாழ்வும் ஒன்று. அப்படி இருக்கும்போது சாப்பாட்டில் இவ்வளவு வேறுபாடு எதற்கு? தமிழர்கள் நீங்கள் இப்படிச் சாப்பாட்டிலும் கடுமையாக இருக்கிறீர்கள் என்றார்.''[67]

## V சில தொடர்கள்

''சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை யறிந்து''[68] என்பர் வள்ளுவர். டாக்டர் மு. வ. அவர்களும் தம் புதினங்களில் பயன்படுத்திய சொற்கள் இடத்திற்கேற்றதாய், நிலையுடையதாய் அமைந்துள்ளன. அவர்தம் புதினங்களில் சில தொடர்களை யாவரும் மறவா வண்ணம் ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் இங்கு 'நல்லவன் — வல்லவன்', 'எப்படியும்— இப்படியும், ஆகிய தொடர்கள் மட்டும், எடுத்து விளக்கப் பெறுகின்றன.

### 1. நல்லவன் — வல்லவன்

இவ்வுலகில் தோன்றிய மானிடருள் நல்லவர்களும் உண்டு வல்லவர்களும் உண்டு. இது பிறப்பிலேயே கொண்டதன்று. சூழ்நிலைதான் ஒரு மனிதனை நல்லவனாகவோ, வல்லவனாகவோ, தீயவனாகவோ மாற்றுகின்றது. நல்லவர்கள் சமுதாய மக்களால் சின்னேரங்களில் துன்புறுவர்.

---

67 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 60

68 குறள் 645

எத்தனையோ பேர் இவ்வுலகில் வாழும் வகையறியாது இறந்து போனார்கள் நல்லவர்களாக மட்டும் இருந்தால் போதாது; வல்லவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது மு. வ. விருப்பம்.

வாழைமரம் மனிதர்களுக்குக் காய்கறி, இலை, தண்டு முதலியனவற்றை உண்ண வாரி வழங்குவதுதான். அது தீமையறியாததுதான். ஆனால் அதனைச் சுற்றி நடப்பட்டுள்ள வேலியானது வாழை மரத்தின் மீது பட்டாலும் வாழை வேலிமீது பட்டாலும் நட்டம் வாழைமரத்துக்குத்தான். ரோசாச் செடியைப் படைத்து அதில் மலரை வளர்த்த இறைவன், மாடு, மலரை மேயாமல் இருக்க முள்ளையும் உடன் வைத்தான். வாழை மரத்தைப் போன்று முற்றிலும் நல்லவர்களாகவும், முட்செடி போன்று முற்றிலும் வல்லவர்களாகவும் இருக்கக் கூடாது. ரோசாச் செடி போன்று மனிதர்களும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இருத்தல் வேண்டும். இக் கருத்தை மு வ. நல்லவன் — வல்லவன்' எனும் தொடரால் குறிப்பிடுகின்றார்.

நல்லவர்கள் வல்லவர்களாக இல்லாததனாலே அழிந்து போகிறார்களே என்ற உண்மையைக் 'கள்ளோ? காவியமோ?' வில் ஆசிரியர் உணர்த்துகிறார்.

''உலகம் பொல்லாதது. அவர் நல்லவராக இருந்தாலும் உலகம் பொல்லாதது.

தாயற்ற மகளாய், திக்கற்ற பெண்ணாய் அத்தையின் வீட்டில் அகப்பட்டுக் கொண்டேன். அந்த அத்தை எத்தனை நாளாகக் காத்துக் கொண்டு அம்மாவைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணியிருந்தாளோ தெரியவில்லை. அவள் இறந்த பிறகு யாரைப் பழி வாங்குவது என்று திகைத்து கடைசியில் அந்த வயிற்றில் பிறந்து ஏமாந்து தெருவில் நின்ற என்னைப் பழிவாங்க முனைந்துவிட்டாள்.

அம்மா இயற்கையாகவே நல்லவள். நல்லவள் என்று நான் சொல்வதில் பயன் என்ன? குடும்பத்தைக் காக்காமல் குடிகாரனாய்த் திரிந்த அப்பாவும் சொல்கின்றார். அந்தக் குடிகாரத் தம்பியை நல்லவன் என்று சொல்லிக் கொண்டு அந்தத் தம்பிக்கு ஏற்ற பெண்டாட்டி கிடைக்கவில்லை

என்று நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த அந்த அத்தையும் சொல்லித் திரிகின்றாளாம். அம்மா உயிரோடு இருந்த வரையில் அவளைக் கொடுமையாக நடத்தினாள். தன் வீட்டுக் காவலுக்குக் கொண்டு வந்து வளர்த்த நாயை யாவது ஒவ்வொரு வேளையில் தட்டிக் கொடுத்துப் பாராட்டியிருப்பாள். ஆனால் நாயை விடத் தாழ்வாக அம்மாவை நடத்தினாள். உயிரோடு இருக்கும் வரையில் அப்படி நடத்திவிட்டு, உயிர் போனபின் அவளும் நல்லவளே என்று சொல்லித் திரிகின்றாளாம்.

நல்லவள் என்று பெயர் எடுத்துப் பயன் என்ன! வல்ல வளாக வாழத் தெரியாமல் உயிர்விட்டாள். நல்ல குடும்பத் தில் பிறந்த குற்றம் என்பதா? நாணமும் அச்சமும் நிறைந்து வளர்ந்த குற்றம் என்பதா? பெரியோர்களுக்கு அடங்கி நடந்த குற்றம் என்பதா? என் அண்ணனையும் என்னையும் குழந்தை கள் என்று குழைந்து நடந்ததைக் குற்றம் என்பதா? தனக் குத் தீமை செய்த சுற்றத்தாரையும் வரவேற்று வாயாரப் பேசி ஆனவரையில் உதவிய குற்றம் என்பதா? ஒரு நல்ல குணமும் இல்லாத அத்தை முன்னுக்கு வந்து சீராக வாழ்வை நடத்துகிறார். இந்த நல்லகுணம் எல்லாம் இருந்த அம்மா என்னை நடுத்தெருவில் விட்டுவிட்டு மண்ணானாள்.''[69] மேற் கண்ட மங்கைக் கூற்றின் வாயிலாக நல்லவர்கள் எவ்வாறு கொடுமை படுத்தப்படுகிறார்கள் என அறியமுடிகிறது.

நல்லவர்கள் ஒதுங்காமல் வாழ்வதற்கு, ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு, வல்லவர்களாக வாழ்வதற்கு இன்றைய சமுதாயப் போக்கு மாற வேண்டும். நல்லவர்கள் ஒதுங்காமல் வாழ வேண்டுமெனின் பணச் சமத்துவம் வேண்டும். அப்போதுதான் ஏழையாகவோ பணக்காரனாகவோ உள்ள நல்லவர்கள் பணக்காரர்களுடனோ ஏழைகளுடனோ இணைந்து வாழ்வர். அடுத்து, சமுதாயத்தில் ஒற்றுமை யுணர்வு இருத்தல் வேண்டும். அப்போது நல்லவர்களும் வல்லவர்களுடனும் சமுதாயத்தில் உள்ளோர்களுடனும் சேர்ந்து வாழ எண்ணங் கொள்வர். அடுத்து நல்லவர்கள் சமுதாயத்தில் உள்ள வல்லவர்களைப் பார்த்துத் தாமும் அதுபோன்று வாழ எண்ணுவர். இதனால் நல்லவர்கள்

---

69 மு. வ.; கள்ளோ? காவியமோ?; பக். 1-2

வல்லவர்களாகவும் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிற்பவ ராகவும் விளங்குவர் என்பதில் ஐயமில்லை.

"உண்மைதான். நல்லவர்கள் ஒதுங்கி வாழக் கூடாது. அஞ்சி வாழக் கூடாது. தலை நிமிர்ந்து திரியவேண்டும். ஒப்புக் கொள்கிறேன். இப்போது நீதி மன்றங்களிலும், அலுவலகங் களிலும், சட்டசபைகளிலும் தலை நிமிர்ந்து நடக்கிறவர்கள் நல்லவர்களா? இல்லையே. காட்டில் சூரிய ஒளியில் மானும் முயலும் ஆடும் மாடும் அஞ்சாமல் திரிய வேண்டும். பாம்பும் புலியும் கரடியும் நரியும் அடங்கி ஒடுங்கி இருண்ட குகைகளில் கிடக்க வேண்டும். அதுதான் இயற்கையின் நல்ல ஆட்சி முறை.

மக்களின் வாழ்க்கையும் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் தலைகீழாக இப்போதைய நிலைமை இருக்கிறது. அஞ்சாமல் வாழ வேண்டியவர்கள் அஞ்சி அடங்கி இருக் கிறார்கள். அஞ்சி - அஞ்சிச் சாக வேண்டியவர்கள் தலை நிமிர்ந்து திரிகிறார்கள். நீதி மன்றங்களிலும், அலுவலகங் களிலும் அயோக்கியர்கள் சுற்றிச்சுற்றித் திரிகிறார்கள். ஆனால் நல்லவர்கள் அங்கெல்லாம் கால் வைக்கத் தயங்கு கிறார்கள். சமுதாய அமைப்பு எப்படியோ சீர்கெட்டுத் தலைகீழாக இருக்கிறது என்றாள்.

இந்த நிலைமை மாறாதா? மாறாவிட்டால் அறம், முறைமை, நீதி, உண்மை என்பனவற்றைப் பேசிப் பயன் என்ன? என்று அப்பா நாற்காலியில் சாய்ந்திருந்த நிலை யிலிருந்து எழுந்து உட்கார்ந்தார்.

'மாறும். மாறும் காலம் வரும். உழைப்பையும் தொண் டையும் மதிக்கும் காலம் வந்தால்தான் நல்லநிலை அமை யும். இப்போது உழைப்பையும் தொண்டையும் மதிக்கிறார் களா? எப்படியோ வந்து சேரும் பணத்தையும் பதவியை யும் மதித்து வழிபடுகிறார்கள். அதனால் அமைப்பும் தலை கீழாகி விட்டது."[70]

மேற்கண்ட உரையாடல் 'அல்லி' என்ற புதினத்தில் அல்லியின் தந்தை அறவாழியிடம் பேசுவதாக அமைகிறது.

---

70 மு. வ.; அல்லி; பக். 174—175

மு. வ. நல்லவர்களை முயல், ஆடு, மாடுகட்கு உவமிக்கிறார். வல்லவர்களைப் பாம்பு,புலி,கரடியாகக் கருதுகின்றார். காட்டைச் சமுதாயமாகவும் முயல், ஆடு, மாடு ஆகிய விலங்குகளை நல்லவர்களாகவும் பாம்பு, புலி, கரடி ஆகிய விலங்குகளை வல்லவர்களாகவும் ஒப்பிட்டு மு. வ. கூறியுள்ள திறம் போற்றுவதற்குரியது. மேலும், அவர் மக்கள் உழைப்பையும் தொண்டையும் எப்போது மதிக்கிறார்களோ அப்போது நல்லவர்களையும் மதிக்கக் கற்றுக் கொள்வர் என்கிறார்.

''நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது; வல்லவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால் தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள்; மாய்ந்து வருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிரபாராத வகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச்சான்றுகள் காணலாம்.''[71]

இவ்வாறு மனிதர்களிடையே இரு பகுப்பினைக் கண்ட மு. வ. அதை மொழி மீது ஏற்றிப் பார்க்கின்றார்.

''தமிழ்மொழி நல்லமொழிதான்; ஆனால் அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமா? இன்று எதையெடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப்பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத்தந்தோமா? நீதி மன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

வல்லமை இல்லாத நல்ல தன்மை வாழாது. தம்பி! அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றதுதான்.

நம் முன்னோர் இதை மறந்த காரணத்தால்தான் எத்தனையோ இழந்தனர். ஒன்று சொல்லட்டுமா? தமிழ்க்கலை நல்லகலைதான்; அதிலும் யாழிசை நல்ல இசைதான்; ஆனால் வாழ்ந்ததா? இல்லை. ஏன்? முன்னே செல்வாக்கைப் பெற்றவர்கள் யாழைப் புறக்கணித்தார்கள், பிறகு பொது மக்கள் மறந்தார்கள். இன்று தமிழுக்கும் ஏறக்குறைய அதே நிலை இருப்பதை எண்ணிப்பார்; உன் மனம் புண்படும்.''[72]

---

71. மு.வ; தம்பிக்கு; பக். 5—6
72 மேற்படி பக். 7—8

## 2. எப்படியும் — இப்படியும்

உலக மக்கள் இருதிறத்தினராக விளங்குகின்றனர். ஒரு திறத்தினர் 'எப்படியும் வாழலாம்' என வாழ்பவர்கள். மற்றொரு திறத்தினர் 'இப்படியும் வாழலாம்' அதாவது இப்படித்தான் வாழ வேண்டுமென வாழ்பவர்கள். இவர்களுள் பின்னவர்களே நல்லோர் ஆவர். இவர்களையே தமிழன் பின்பற்ற வேண்டுமென்பதும் ஒன்று. இந்தக் கொள்கை 'நெஞ்சில் ஒரு முள்'ளில் சித்திரிக்கப் பெறுகிறது.

''எப்படியாவது வாழ வேண்டும் என்பவர்களின் கட்சி அது. பார்வதி அப்படிப்பட்டவள் அல்ல. திருக்குறள் முதலியவற்றை நம்பித் துன்பப்படுகிறவர் அவர். நல்ல நூலை நம்பினால் துன்பமா?

ஆமாம் அம்மா! அதை மறைத்துப் பயன் இல்லை. அறவாழியே ஒப்புக் கொள்வார். இப்படித்தான் என்று நெறிவகுத்து வாழ்கின்றவர்களுக்கு இடையூறும் துன்பமும் மிகுதி என்று சொல்வார். ஆனால் இந்தத் துன்பத்திலே ஒருவகை அமைதி உண்டு. பழகிவிட்டால் மனத்திற்கு நல்லது என்று சொல்வார்''[73] என்பதாக அஃது அமைகிறது.

## VI சாதி - சமய நெறிகள்

''சாதி—சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள். மறக்கமுடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள்''[74] என்று சாதி வேறுபாட்டை மதியாமையை அறமாக இளைஞர்க்கு அவர் அறிவுறுத்துகிறார். உறவைவிட நட்பையே அவர் பெரிதும் மதித்தார்; போற்றினார். அவரிடம் கற்ற மாணவர் பலர்; பற்பல சாதியினர்; சமயத்தினர். அனைவர் பாலும் தந்தையன்பு காட்டிய தனித்தமிழர் அவர்.

''டாக்டர். மு. வரதராசனார் படைத்துள்ள எழுபதுக்கு மேற்பட்ட கதைப்பாத்திரங்களுள் ஒருவருடைய சாதியைக் கூட நாம் அறிய இயலாது. அவர்கள் யாவரும் சாதிவேறு பாடற்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களின் பேச்சு நடையைக் கொண்டும் நாம் சிறிதுகூட அவர்களுடைய

73 மு. வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 407
74 மு. வ.; தம்பிக்கு; ப. 52

சாதியை இனங்கண்டு கொள்ள இயலாது''.[75] என்னும் கருத்து முற்றிலும் உண்மையே.

'பாவை' அவர் உள்ளத்தில் தொடக்கக் காலத்தில் கருக் கொண்ட புதினமாக இருத்தல் வேண்டும். அகத்திணை இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட நெஞ்சம் அந்தப்போக் கிலேயே காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற சில மாறுதல் களோடு புனைந்த புதினம் அது. அது ஒன்றில் மட்டுமே வேலுப்பிள்ளை, ஏகாம்பர செட்டியார் எனச் சாதிப்பட்டத் தோடு கதை மாந்தர் பெயர்கள் சுட்டப்பெறுகின்றன. அந்தப் புதினத்தில், ஊரைவிட்டு இரவோடு இரவாகக் கற்பைக் காத்துக்கொள்ளவேண்டி, ஆர்க்காட்டை அடைந்து ஆசிரியர் சாமிநாதன் வீட்டில் வேலைக்காரியாகப் பாவை தங்குகிறாள். அங்கு அவள் வந்தபோது, சாமிநாதனும் அவன் மனைவி கமலமும் பேசிய உரையாடல், சாதி உணர்வு மு. வ. மனதை விட்டுப் போனது எவ்வாறு என்று குறிப்பிடுவதுபோல் அமைந்துள்ளது.

''.........'என்னசாதி என்று கேட்க வேண்டிய தில்லையே' என்றாள் கமலம். 'எனக்கும் அந்தப்பழக்கம் முன்னெல்லாம் இருந்தது. உண்மையான அன்பு வந்தபிறகு அந்தப்பைத்தியம் போய்விட்டது[76]''' என்றார் கணவர்.

இதற்குப்பின் சாதி உணர்வு சொல் அடிப்படையிலும், நிகழ்ச்சி அடிப்படையிலும், பெயர் அடிப்படையிலும் தோன்றாதவாறு பிற புதினங்களை அவர் படைத்துச் செல்கிறார்.

மு. வ. தம் புதினங்களில் பலமுறை பற்பலவாறு எடுத்துக் காட்டிய இரண்டு குறுந்தொகைப் பாடல்களுள் ஒன்று 'யாயும் ஞாயும் யாராகியரே' என்பது. சாதி உறவற்ற உண்மை அன்பை, உண்மைக் காதலை உணர்த்துவதாலேயே அவர் அடிக்கடி இந்தப் பாடலைச் சுட்டியுள்ளார் எனக் கருதலாம்.

## சமய நெறிகள்

'தம்பிக்கு' என்னும் நூலின் இறுதியில் தற்காலத் தாழ் விலிருந்து மீண்டு தமிழன் உயர்வதற்கான ஆக்க வேலை

---

75 க. த. திருநாவுக்கரசு; மு.வ. நினைவு மலர்; ப. 107
76 மு. வ.; பாவை; ப. 126

முறைகளாகப் பத்துக் கட்டளைகளை வழங்குகிறார். அவற்றுள் இரண்டாவது கட்டளை; 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற செம் மொழியைப் போற்று என்பது.

''உருவ வழிபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் கோயிலுக்கும் அவ்வளவாகப் போவது கிடையாது. ஆனால் சில உருவங்களில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. புத்தர் உருவம், நடராசர் உருவம், தட்சிணாமூர்த்தி உருவம் இவற்றில் தனி ஈடுபாடு உண்டு. எப்போதாவது கோயிலுக்குப் போனால், போகும்போது தட்சிணாமூர்த்தி உருவத்தைப் பார்த்தால் சில நிமிடம் கண்மூடி ஏதாவது ஒரு நல்ல பாட்டை மனத்துக்குள் நினைத்துப் பார்ப்பேன். இதுதான் என் வழிபாடு. பூ இட்டு வழிபடுவது எல்லாம் என் மனைவிதான்' என்று எளிய வழிபாட்டு முறையைப் பற்றிக் கூறினார்.''[77]

'நல்வாழ்வு' என்னும் அவர் நூலின் முதல் கட்டுரையாக அமையும் 'வழிபாடு' அவர்தம் சமயவழிபாட்டு நெறிகளைத் தெளிவாகவும், தொகுப்பாகவும் தருகிறது.

''பல பொருள்களைப் பற்றியும் அவற்றின் தோற்றம் இயக்கம் முடிவுகளைப் பற்றியும் ஆராயும்போது எப்படி என்ற வினாவுக்கு ஆங்காங்கே விடை காண ஆராய்ச்சி உதவுகிறது. ஏன் என்ற வினாவுக்குப் பல இடங்களில் விடைகாண முடியவில்லை......

தத்துவ ஞானிகள் சிலர் பக்திப் பாடல்கள் பாடி அவற்றின் வாயிலாகத் தம் அநுபவங்களை உணர்த்தியிருக்கிறார்கள். அவை உள்ளத்தால் உணரத்தக்கனவாக உள்ளன.

அவற்றின் பிழிவாக உள்ள உண்மை, பரம்பொருள் ஒன்று உண்டு என்பதும். அது சிந்தையும் சொல்லும் கடந்த ஒன்றாக உள்ளது என்பதும், அந்தக் கடவுளின் நெறியில் அன்பும் உண்மையும் ஒளிர்கின்றன என்பதும், வாழ்க்கையை அந்த நெறியில் அமைத்து நடத்தினால் எளிதாக அமையும் என்பதும் ஆகும்...

உருவ வழிபாடா, அருவ வழிபாடா எது சிறந்தது என்று போராட வேண்டிய தேவை இல்லை... உள்ளத்தில் கடவுள்

---

77 இரா. மோகன்; மு. வ. நினைவு மலர்; ப.174

நெறி பதிவது ஒன்றுதான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

மக்களிடையே வேறுபாடு உண்டாக்குவது, மக்களைப் பிரித்துப் பூசல் விளைக்கத் தூண்டுவது எதுவாக இருந்தாலும் அதற்கும் கடவுள் நெறிக்கும் தொடர்பு இல்லை என்று ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு சமயத்திற்கும் தனித்தனியே ஒரு கடவுள் இல்லை என்ற தெளிவு வேண்டும்... நாம் எந்தக் கடவுளை வழிபடுகிறோமோ, அந்தக் கடவுளே மற்றச் சமயத்தாரையும் படைத்துக் காத்து வருபவர் என்ற உண்மையைத் தெளிய வேண்டும். இந்தக் கோயிலில் எந்தப் பரம்பொருள் இருப்பதாக நம்புகிறோமோ அந்தப் பரம்பொருளே மற்றத் தெய்வநிலைக் கட்டடங்களிலும் இருப்பதாக உணரவேண்டும்... அவரே உலகங்களில் உள்ள எல்லா உயிர்களிலும் உயிராய் இருந்து இயங்குபவர் என்னும் தெளிவு பெறுவதே கடவுள் நெறியின் முதல் படியாகும்.

...சடங்குகள் எல்லார்க்கும் தேவை என்றோ, எல்லாக் காலத்திற்கும் தேவை என்றோ வற்புறுத்தக் கூடாது.

......கடவுள் நெறிக்கு உதவும் வழிவகைகள் என்று ஏற்படுத்தப் பட்டவைகளே தவிர அவைகளே கடவுள் நெறி அல்ல. ......கடவுள் நெறிக்குத் தவிர வேறு எதற்கும் முதன்மை தரல் ஆகாது.

...கடவுளின் அருளைப் பொருள் செலவிட்டு விலைக்கு வாங்கிவிட முடியும் என்ற மூடநம்பிக்கை கொண்டு செய்வது பொருந்தாது. கடவுள் நாம் கொடுக்கும் கைப் பொருளை (லஞ்சத்தை) வாங்கிக் கொண்டு, அதற்குக் கைமாறாக நமக்கு உதவுவார் என்று எண்ணுவது அறியாமை.

...............கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்து, பொதுமையான ஆட்சி புரியும் ஒரு பெருஞ்சக்தி என்று உணர வேண்டும்.

.........கடவுளின் ஆட்சி முறையை, வாழ்க்கையைக் கொண்டு உள்ளத்தால் உணரும் மெய்யுணர்வே சிறந்தது. ...........அந்த உணர்வு பெற்றவர்கள் வாழ்வே தொண்டாக மலரும்."

என்னும் இந்தச் சமய வழிபாட்டு உண்மைகளைத் தம் புதினங்களில் பற்பல கதைமாந்தர் வாயிலாகப் பற்பலவாறு மு. வ. எடுத்துரைக்கிறார்.

தமிழினம் சிதைந்துபோனதற்குரிய பல வழிகளில் அது மேற்கொண்டுவரும்,கண்மூடி வழிபாட்டு வாழ்வும் ஒன்றாகும். கடவுள் படைப்பின் உண்மைகளை உணர்ந்து அதன்படி வாழ்வதே உண்மை வழிபாடு ஆகும். 'தாளை வணங்குதல்' என்னும் வள்ளுவத் தொடர்க்கும், மு. வ. இந்த விளக்கத்தையே, தம் புதினங்களில் தருகிறார்.

இந்தியத் தத்துவஞானம் மெய்யுணர்வுக் காட்சிகளை ஆத்திகக் காட்சிகள், நாத்திகக் காட்சிகள் எனும் இருவகையில் நோக்கும். வேதங்களை ஏற்றுக் கொண்ட சமயங்கள் ஆத்திக சமயங்கள் என்றும் அவற்றை மறுத்தவை நாத்திக சமயங்கள் என்றும் அதுகூறும். 'வேதம் புதுமை செய்' என்னும் பாரதி கருத்தைச் செயல் படுத்துவதுபோல ஆத்திக, நாத்திகத்திற்குப் பல இடங்களில் புதிய விளக்கம் தந்து செல்கிறார் மு.வ.

மு.வ.வின்கயமை நாவலில் வெங்கடேசன், நல்லய்யனோடு நிகழ்த்தும் பின்வரும் உரையாடல் இந்த உண்மையை மேலும் தெளிவு செய்யவல்லது.

''கடவுள் நம் தலைவர். தலைவரின்......நோக்கத்தை மறந்தாலும் துன்பமே; மறுத்தாலும் துன்பமே. ஒரு தொழிற்சாலையில் வேலைசெய்யப் போகிறவர், அதன் தலைவருடைய நோக்கத்தை அறிந்துதான் வேலை தொடங்க வேண்டும். இல்லையானால் துன்பம்தான். இதைமறந்து பேசுகிறாய். நீ உண்மையை உணரவில்லை. பிரகாசமும் உன்னைப்போல்தான். அவன் தன் வாழ்வில் அறம் விளங்கவேண்டும் என்று தன்னளவில் அமைதியாகப் பார்த்துக் கொண்டு மற்றவர்களின் வாழ்வில் தலையிடாமல் இருக்கிறான். நீ உன்னையும் மறந்து, மற்றவர்களின் வாழ்விலும் அறம் விளங்கவேண்டும் என்று அலைகிறாய். நீங்கள் இருவருமே கடவுளின் நோக்கத்தை உணராதவர்கள்; நாத்திகர்கள்.''[78]

புரை தீர்ந்த நன்மை பயப்பதே அறம். எல்லோரும் எப்போதும் எங்கும் விரும்புவதே அறம். ''பொய் சொல்லக் கூடாது' என்று அறநூல் சொல்கிறது. அது விதி ஆயிற்று, எப்படி ஆயிற்று? பொதுவாக எல்லோருக்கும் அதனால் நன்மை இருக்கிறது. அதனால் எல்லோரும் போற்றும் விதி

78 மு. வ; கயமை; ப.193

ஆயிற்று. பொய்சொல்லி வாழ்கிறவனும் தன்னிடம் யாரும் பொய் சொல்லக் கூடாது என்று எதிர்பார்க்கிறான்; தன் மனைவி, மக்களும் தன்னிடம் பொய் சொல்லக் கூடாது என்கிறான். அதனாலேயே அது இயற்கைச் சட்டம் என்று ஏற்படுகிறது. விபசாரியும் தன்மனைவி ஒழுங்காக வாழவேண்டும் என்றும், தன்மக்கள் ஒழுங்காக வாழவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறான்''[79] எனப் பொய்யாமை பற்றி 'நெஞ்சில் ஒரு முள்' புதினத்தில் வலியுறுத்துவதைக்காணலாம். கடவுள் நெறியாகிய அறநெறி பற்றி 'அல்லி'யில் பின்வருமாறு கூறுகிறார்.

''கடவுள் வழிபாடு தியானம் என்று சொல்லிக் கடவுளின் பெயர்களைச் சொல்லி, பலவாறு அவரைப் புகழ்ந்து கொண்டிருப்பதால் பயன் இல்லை. கடவுள் நெறியாகிய அறநெறியில் நின்றது எவ்வளவு, நிற்காதது எவ்வளவு, செய்த செயல்களிலும், எண்ணிய எண்ணங்களிலும் நல்லவை எவ்வளவு, தீயவை எவ்வளவு என்று ஆராய்ந்து இறைவனிடம் முறையிட்டால்தான் பயன் உண்டு. இல்லாவிட்டால் மனம் தூறு வாராப் பழைய சாக்கடையாகவே இருக்கும்.''[80]

மனத்தால் செய்யும் வழிபாட்டு நெறி பற்றி மு. வ., தம் 'மண்குடிசை' புதினத்தில் கூறுவதாவது:

''மனக்கண் முன் வருவித்து உயர்ந்த பண்புகளையும் அறவுரைகளையும் நினைத்துப் போற்றுதல்...... மூன்றாவது... காலங்கள், இடங்கள், நிகழ்ச்சிகள், அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய ஆறனையும் ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து ஆங்காங்கே கடவுள் — கடவுள் ஆட்சி — இருப்பதை உணர்தல். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றிலும் அவர் ஆட்சியை உணரவேண்டும்.

இனி நான்காவது ... வகையில் உலகத்தை மனத்துக்குள் வருவிக்காமல், மனத்தை உலகத்தில் விட்டு அங்கங்கே கடவுள் ஆட்சியை உணரவேண்டும். அறிதல், எண்ணுதல், நினைத்தல் என்ற மூன்றில் ஒன்றாக எதையும் உணரவேண்டும். அறிதல் நிகழ்காலம் பற்றியது; எண்ணுதல் எதிர்காலம் பற்றியது; நினைத்தல் இறந்தகாலம் பற்றியது; இந்த மூன்றிலும் கடவுளின் ஆட்சியை உணர வேண்டும்.

---

79 மு. வ; நெஞ்சில் ஒரு முள்; ப.321
80 மு. வ; அல்லி; ப. 114.

ஐந்தாவது முறைதான் இவ்வளவுக்கும் பயனாக விளங்க வேண்டியது. கண்களை மூடியிருக்கத் தேவையில்லை; மூலை வீடு தேவையில்லை; உலகத்தில் திரியலாம்; தொழில் செய்யலாம். அங்கங்கே பார்ப்பவை, கேட்பவை... வாழ்க்கைப் போராட்டம், காதல் காமம், உயிர் இல்லாத தீ, நீர், காற்று முதலியவற்றின் இயக்கம் ஆகிய எல்லாவற்றிலும் கடவுளின் ஆட்சியை உணர்தல் இது.

கண்ணில் காண்பதுன் காட்சி கையால் தொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொடு ஐந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேநின் அருள்வடி வாகுமே.

இதுதான் வளர்ந்த பூசை.''[81]

இப்படி எண்ணி இருந்து மனத்தளவில் செய்யும் வழிபாட்டு நெறி ஒன்றை, மண்குடிசையில் வகுத்தளித்த மு. வ., மெய்யப்பனுக்கு இறுதியில் தந்த கடிதத்தின் வழி இன்னும் எளிய, இனிய வழிபாட்டு வாழ்வொன்றை நமக்குக் காட்டு கின்றார்.

மண்குடிசையில் கொடிய கதைமாந்தனாக அமைந்த கேசவராயனே மெய்யப்பன்மீது கொலைக் குற்றம் சுமத்தி, அவன் பல்லாண்டு சிறையில் வாடுமாறு செய்கிறான். அதனால் கேசவராயன் மீது பகையும் அவன் குடும்பத்தார் மீது வெறுப்பும் இயல்பாக மெய்யப்பனிடம் குடி கொண்டன. அந்தக் கடிதக் குறிப்பு, மெய்யப்பனுக்கு நல்வழி காட்டிய மெய்கண்டார்தம் உறவினனே, கேசவராயன் எனக் குறிப் பிட்டு மேலும் தொடர்கிறது.

''இனிக் கேசவராயனைப் பற்றிய உன் பார்வை மாறும்; உன் எண்ணம் மாறும்; பழைய பகை நெஞ்சம் போய்விடும். எனக்கு உறவு என்று அறிந்ததனாலேயே இவ்வளவு மாறுதல் என்றார். அவன் கடவுளுக்கு உறவினன், கடவுளின் படைப்பு என்று உணர்ந்தால் எவ்வளவு மாறுதல் ஏற்படும்? அவ்வாறு உணர்வதால், உன் மன நோய் தீருமானால், இந்த மருந்து எவ்வளவு உயர்ந்த மருந்து... இப்படிப் பொல்லாதவர்களுக்கு இடம் தருவதால் கோழையாகி விடுவோம் என்று ஓர் எண்ணம்

81 மு. வ.; மண்குடிசை; பக். 229—231

தோன்றக் கூடும். அது தவறான எண்ணம். நாம் அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு இந்த உலகத்தில் இடம் இருக்கிறது; சமுதாயம் இடம் தருகிறது. அதனால் அவர்கள் வாழ முடிகிறது.''[82]

ஆத்திகம், நாத்திகம் பற்றியும் அவற்றுக்கு இடையே அமைந்த வேறுபாடுகளையும் மு.வ. தம் புதினங்களில் கூறுகிறார். ஆத்திகம் பற்றிய கருத்துக்களை 'நெஞ்சில் ஒரு முள்', 'கயமை', 'வாடாமலர்' ஆகிய புதினங்களில் பின்வருமாறு விளக்கமாகக் கூறுகிறார்.

''ஊரெல்லாம் நெருஞ்சியும் முள்ளியும் இருக்கலாம் என்றும், என் தோட்டத்தில் மட்டும் சந்தனமும் பலாவுமே இருக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்ப்பது தன்னலம் தவிர வேறுஇல்லை. கடவுளின் படைப்பில் நன்மை, தீமை பிரிக்க முடியாதபடி கலந்திருக்கின்றன. இரண்டிலும் நமக்குப் பங்கு உண்டு. ரோஜாச் செடியில் மலர் மட்டுமே வேண்டும்; முள் வேண்டா என்று விரும்புவதில் பயனில்லை. கடவுளின் படைப்பை உள்ளபடியே மதித்து வாழ்வதுதான் ஆத்திகம். கடவுளின் உருவத்தைமட்டும் வழிபடுவது ஆத்திகம் அல்ல; அவருடைய படைப்பின் உண்மைகளை உணர்ந்து மதித்து வாழ்வதே ஆத்திகம். ஆகையால் உலகில் உள்ள குறைகள் உன் மனைவியிடமும் இருந்தால், அது இயற்கை என்று எண்ணிக் கொண்டு வாழ்க்கை நடத்து.''[83]

''ஆடம்பர உடையை வெறுப்போடு பார்க்கும் பார்வை வரவேண்டும். சமுதாயத்தின் அமைதிக்கு இடையூறான குற்றமான ஆடை என்று கருதும் மனப்பான்மை வரவேண்டும். எளிய ஆடையைப் பார்க்கும்போது புத்தர் படத்தையும் காந்தி படத்தையும் பார்த்து மதிப்பது போன்ற மனப்பான்மை வளர வேண்டும். அதுதான் நல்ல ஆத்திகம் என்றார்.''[84]

பொதுவுடைமையும் ஒத்த வாழ்க்கை நிலையும் அமைந்த பிறகுதான், கடவுளின் உண்மைத் தன்மையை உணர்ந்து

---

82 மேற்படி; ப. 503
83 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 473
84 மு.வ ; வாடா மலர்; ப. 174

உண்மையான ஆத்திகராக இருக்க முடியும். அதுவரையில் ஆத்திகம் கிரகணமாகத்தான் இருக்கும் என்கிறான்.''[85]

நாத்திகம் பற்றிய கருத்துக்களை மு வ. 'கயமை', 'நெஞ்சில் ஒரு முள்' ஆகிய புதினங்களில் கூறியுள்ளார். அவையாவன:

''நான் அதனால் சொல்லவில்லை. கடவுள் இருக்கிறான் என்று கண்மூடித் தன்மையாக நம்பினால் மட்டும் போதாது; கடவுளின் நோக்கம் இன்னது என்று உணர்ந்து நெறியோடு நடக்க வேண்டும். அப்படி நடக்காதவர்கள் நாத்திகர்கள் என்று நான் சொல்வது வழக்கம்.''[86]

''இப்படிப்பட்ட பூசை வழிபாடு எல்லாம் உயர்ந்த நெறி களுக்குப் படிகளாக ஏற்படுத்தப்பட்டவை. ஆனால் பெரும் பாலோர் படிகளிலேயே நின்று விடுகிறார்கள். கரையேறுவ தில்லை. எது கரை, எது வழி, எது குறிக்கோள் என்றும் அறியாமலே பலர் கண்மூடி வாழ்கிறார்கள். கண்மூடி வாழ்வே முத்திநெறி என்றும் நம்புகிறார்கள். நாத்திகர் களாய் வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது உண்மை சொன்னால், சொல்கிறவர்களையே பழிப் பார்கள்.''[87]

மு. வ., நெஞ்சில் ஒரு முள், கள்ளோ?காவியமோ?, கயமை, வாடாமலர் ஆகிய புதினங்களில் ஆத்திக, நாத்திக நெறிகளுக்குரிய வேறுபாடுகளைப் புலப்படுத்துகிறார்.

''ஆத்திகம் நாத்திகம் என்பலற்றிற்கே அவர் புது விளக்கம் கொடுத்திருக்கிறார். தெரியுமா? இது கடவுளின் குடும்பம் என்று எண்ணித் தன்னைச் சிறிதளவாவது மறந்து மற்றவர் களுக்கு உதவத் தெரிந்தவன் ஆத்திகனாம். எந்நேரமும் தன்னைப் பற்றியே எண்ணித் தற்பெருமையுடன் வாழ்கிறவன் நாத்திகனாம்.''[88]

---

85 மு வ.; கயமை; ப. 219

86 மேற்படி; ப. 193

87 மு. வ.; நெஞ்சில் ஒரு முள்; பக். 411—412

88 மேற்படி; ப. 322

"......காலத்துக்கு ஏற்றபடி முன்னேறாமல் வாழ்ந்தால் நெறியான வாழ்வாம். நல்லது என்று தெரிந்ததை வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் நூல்களில் மட்டும் படித்து மேடைகளில் மட்டும் பேசிக் கொண்டிருந்தால் ஆத்திகமாம். கடவுளை நம்பி வழிபட்ட போதிலும் கற்றபடி வாழத் தொடங்கினால், சொன்னபடி செய்யத் தொடங்கினால் நாத்திகமாம் என்றார் அப்பா."[89]

"வாழ்க்கை வேறு, சமயநெறி வேறு என்று, 'இருவேறு உலகத்தியற்கை'யாக மக்கள் வாழ்கிறார்கள். வாழ்க்கையில் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம். பூசையறையிலும் கோயிலிலும் மட்டும் சமயம் இருந்தால் போதும் என்று நடக்கிறார்கள். வாழ்க்கையில் நாத்திகம்; பூசையறையிலும் கோயிலிலும் மட்டும் ஆத்திகம்; இப்படி வாழும் மக்களிடையே சமய உண்மைகளை வற்புறுத்திப் பேசினால், என்னைக் கல்லெடுத்து அடித்துத் துரத்துவார்களே."[90]

"கடவுளிடம் பக்தி செலுத்தினால் அதுவே போதும் என்ற எண்ணம் பலரிடம் இருக்கிறது. பக்தி வேண்டும். தன்னலமான பக்தி கூடாது. இந்தச் சமுதாயமே கடவுளின் குடும்பம் என்ற எண்ணம் ஏற்படாமல், மற்றவர்கட்கு உதவியாக வாழாமல், வெறும் பக்தி இருந்தால் பயனில்லை என்றுணரச் செய்ய வேண்டும். அதை ஆத்திகர்கள் செய்யத் தவறிவிட்டால், நாத்திகர்கள் தோன்றி அடிப்படையையே ஆட்டி வைப்பார்கள். இங்கே பாருங்கள். எவ்வளவு சடங்கு! எவ்வளவு பூசைகள் காலையில் நடந்தன. ஆனால் மாலையில் வீண் ஆடம்பரம். ஏழைகளுக்கு உதவாத வீண் செலவுகள்."[91]

மு.வ. ஆத்திகம், நாத்திகம்பற்றிக் கூறியதோடல்லாமல் ஊழ்வினை பற்றியும் கூறியுள்ளார். அதனைத் தம் 'கயமை' புதினத்தில் பின்வருமாறு கூறுவதைக் காணலாம். அவர் சமயத்தை அறிவியல்போல் எண்ணிய திறம் ஈண்டு நோக்கத்தக்கது.

"'நான் ஊழ்வினையை நம்புகிறவன். அதனால் பொறுத்திருக்கிறேன்'...... 'நாங்களும் ஊழ்வினையை நம்புகிறோம்',

89 மு. வ.; கள்ளோ? காவியமோ?; ப. 73
90 மு. வ.; கயமை; ப. 262
91 மு.வ.; வாடா மலர்; ப. 173

'உங்கள் நம்பிக்கை, சிறுபிள்ளைகளின் நம்பிக்கைபோல் கண்மூடி நம்பிக்கை. நாம் தும்பியைப் பிடித்து வதைத்தால், மறு பிறவியில் நாம் தும்பியாகி, தும்பி மனிதனாகி நம்மைப் பிடித்து வதைக்கும் என்று நம்புகிறீர்கள். உங்கள் ஊழ்வினை தனியாட்களுக்கே பாவமும் புண்ணியமும் அளந்து தரப்படும் என்பது. ஒருவன் கிணறு வெட்டும் இடத்தில் நீர் உப்பாக இருந்தால் அது அவன் செய்த பாவம் என்று சொல்லும் அளவில் உங்கள் ஊழ்வினை நின்று விடுகிறது. ஏழைகளை ஒதுக்கித் தள்ளவும், அறிவில்லாதவர்களை நசுக்கி அழிக்கவும் உங்கள் ஊழ்வினை பயன்படுகிறது. சுருட்டுக்கும் சுருட்டு பிடிப்பவனுக்கும் மட்டுமே நீங்கள் உறவு காட்டுகிறீர்கள். அவனைச் சுற்றி உள்ளவர்களுக்கும் அந்தப் புகை பரவுகிறது என்று நான் சொல்கிறேன்.

ஆணவர்மேல் நோவதைவிட ஆணவர் போன்றவர்கள் வாழ்வதற்கு இடம்தரும் இந்தச் சமுதாயத்தை நோவுதலில் பயன் உண்டு. இது பணவேட்டைச் சமுதாயம். உழைப்புக்கேற்ற வருவாய், உழைப்பில் நம்பிக்கையில்லை; லஞ்சம் கடவுளுக்குச் சமம்... ஆதலில் லஞ்சம் கொடுப்போர் வாங்குவோர் மலிந்தனர். இப்படி பல வருஷங்களாகச் செய்த வினையின் பயனாக ஆணவர் மலிந்து... இனிமேல் புதுவினை நல்லதாக விதைத்தால்தான் எதிர்காலத்தில் நன்மையை அறுவடை செய்ய இயலும்.''[92]

நம்பிக்கை வேண்டும். நல்லனவற்றில் நல்லவரிடத்தில் நம்பிக்கை வேண்டும். அப்போது வாழ்வில் அமைதி நிலவும். ''கெட்டவர்கள் ஒற்றுமையாய்த் தலைநிமிர்ந்து வாழும் நிலைமையும், நல்லவர்கள் ஒடுங்கி நிற்கும் நிலைமையும் மாறவேண்டும். அறநெறியில், — நல்வழியில் — பலர்க்கு நம்பிக்கை ஏற்பட்டால்தான் இந்த இயல்பான நிலைமை ஏற்படும்.''[93]

ஆனால் இத்தகு நல்ல நம்பிக்கைகளை மேற்கொள்ளாது மூட நம்பிக்கைப் பலவற்றுக்குத் தமிழர் ஆளாகிப்போயுள்ளனர். ''சடங்குகளே முதன்மையானவை என்று நம்பிவிடக் கூடாது. சடங்குகள் செய்வதே போதும் என்று எண்ணி விடல் ஆகாது......கடவுளின் அருளை இவ்வாறு பொருள்

92 மு.வ.; கயமை; ப. 215
93 மு. வ.; நல்வாழ்வு; ப. 22

செலவிட்டு விலைக்கு வாங்கிவிட முடியும் என்ற மூட நம்பிக்கை கொண்டு செய்வது பொருந்தாது.''[94]

எழில் என்னும் புனை பெயரில் தாம் 'அன்னைக்கு' எழுதிய கடிதங்களில், மூட நம்பிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டு எள்ளி நகையாடுகிறார்.

''கல்லூரிகளில் கல்லாதவர்களிடத்திலும், நாகரிகமே இல்லாதவர்களிடத்திலுமே மூட நம்பிக்கை வாழ்வதாக நான் இதுவரை எண்ணிக் கொண்டிருந்தேன். பல்லி சொல்லு வதைக் கேட்டுப் பதைப்பவர்களையும் பூனை குறுக்கே வரக் கண்டு கலங்குகின்றவர்களையும் மட்டுமே மூட நம்பிக்கை உடையவர்கள் என்று நம்பி வந்தேன்; இப்போதுதான் உண்மை தெரிந்து கொண்டேன். அடுக்கடுக்காக நூல்களை வாங்கிப் படித்தவர்களிடமும் பட்டம் பெற்றவர்களிடமும் மூட நம்பிக்கை வேறுவேறு வடிவில் வாழ்வதை உணர் கிறேன்.''[95]

அகல்விளக்கில் வேலய்யனின் மைத்துனனாக வரும் மாலன் கற்றவனாயினும் மூட நம்பிக்கைகள் பலவற்றால் தொல்லைகள் பலவற்றைத் தனக்குத் தானே உண்டாக்கிக் கொள்வதாகப் படைக்கப் பெற்றிருக்கிறான். தளரா முயற்சி யுடையவனாய் இருந்தும் இஷ்டசித்தி குளிகை, கிரக சாந்தி, பல்லி சொல்லும் பலன், பூசாரிகளுடைய பொய் இவற்றால் எல்லாம் அவன் துன்புறுவதாகப் படைக்கப்பட்டுள்ளான். இன்னும் பல புதினங்களில், தமிழர்தம், மூட நம்பிக்கைகள் மு. வ. வினால் எள்ளி நகையாடப்பட்டுள்ளன.

''மற்றவர்கள் யாருக்கும் சொல்லாதே. யான் எப்போதும் தேர்வுக்குமுன் ஒரு அர்ச்சனை செய்வது வழக்கம். அதோடு ஒரு பிரார்த்தனையும் செய்து கொண்டு, தேர்வு வெற்றி எனத் தெரிந்த உடனே போய் அந்தப் பிரார்த்தனையைச் செய்துவிட்டு வருவேன். எஸ். எஸ். எல். சி.யும் அப்படித்தான் தேறினேன். இப்போது அதற்காகத்தான் போகிறேன்— நீயும் தேர்வை முன்னிட்டு அர்ச்சனை செய். ஒரு பிரார்த் தனையும் செய்து கொள்' என்றான்.''[96]

---

94 மேற்படி; பக். 8—9

95 மு.வ.; அன்னைக்கு; ப.20

96 மு.வ.; அகல் விளக்கு; ப. 23

''ஆசிரியர் சொன்னாரா என்றேன். 'சோதிடம்' கேட்டேன் என்றான். சோதிடக்காரனுக்கு நீ எழுதியது எப்படித் தெரிந்தது என்று சிரித்தேன்.''[97]

''என்ன இருந்தாலும் கிரகம் கெட்டதாக இருந்தால், எழுதும்போது கெடுத்துவிடும்; நல்லபடி எழுதியிருந்தாலும் திருத்தும்போது கெடுத்துவிடும்; எண்களைக் குறைத்து விடும்.''[98]

''யாரோ சாமியார் ஒருவரை அழைத்துவந்து அவருக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்திருக்கிறார். பித்தளை யைப் பொன் ஆக்குவதற்கு என்று சொல்லி அந்தச் சாமியார், காசைக் கரி ஆக்கியிருக்கிறார்.''[99]

''உனக்குத் திருவுளச் சீட்டில் நம்பிக்கை இருக்கிறதா? என்றான். இல்லை என்றேன்.''[100]

''கடவுளிடத்திலும் கடவுளின் கூட்டமாகிய அறத்திலும் நம்பிக்கை உண்டு. அடுத்தபடியாக என்னிடத்தில் நம்பிக்கை உண்டு; உன்னிடத்தில் நம்பிக்கை உண்டு. உலகத்தில்...?''[101]

''குடும்பக் கடமைகள் பல இருக்கும்போது 'சடங்குகளி லும், பூசையிலும் மணிக்கணக்காகச் செலவழிக்காதே' என்றார். ஓய்விருக்கும்போது பக்திப்பாட்டுக்களைப் படித் தால் போதும் என்கிறார்.''[102]

''ஆனால் எங்கள் குடும்பத்துக்குப் பழக்கமான சோதிடர் இந்த ஆவணியில் முகூர்த்தப் பொருத்தம் இருப்பதாகவும் குருதசை பலமாக இருப்பதாகவும்...... லக்கினாதிபதி அந்த இடத்தில் பலமாகப் பார்க்கிறானாம்......''[103]

''பெரியவர்களுக்குக் காரணம் தெரிந்தால் கேட்டுத் தெரிந்துகொள். அந்தக் காரணமும் முந்திய காலத்துக்குப்

97 மேற்படி; ப. 186
98 மேற்படி
99 மேற்படி; ப. 332
100 மேற்படி; ப. 207
101 மேற்படி
102 மேற்படி; ப. 297
103 மேற்படி; ப. 255

பொருத்தமானதா என்று பார்; வேண்டுமா என்று பார்; இல்லையானால் விடு; கண்மூடிப்பின்பற்றிச் செய்யாதே.''[104]

''வழியில் சாலையோரமாக ஒருவன் 'இஷ்ட சித்தி குளிகை' என்று கூறிக்கொண்டிருந்தான்.''[105]

இத்தகு மூடநம்பிக்கை, மூடபக்தியின் ஆணிவேர் எது என்று எண்ணி அதனைக் களைந்து தமிழர்தம் அறிவார்ந்த நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறார். பொருள் வாய்ப்பின்மை, பொருளாதாரச் சமத்துவமின்மையே இவற்றுக் கெல்லாம் அடிப்படைக் காரணம் எனக் கருதுகிறார்.

வறுமை - பண வேட்டை - குறுக்கு வழி - சமுதாயச் சீர்கேடு இவை மூட பக்திக்கு வழிகோலுகின்றன. பொது உடைமையும் ஒத்த வாழ்க்கையும் அமைந்த பிறகே உண்மை வழிபாடு - ஆத்திக வழிபாடு அமையும் என்று மு. வ. கருதுகிறார். இக் கருத்து பின்வரும் ம. ரா. போ. குருசாமியின் தொகுப்புவழி நன்குத் தெளிவாகும்.

''இது பண வேட்டைச் சமுதாயம்! எப்படியாவது பணம் வேண்டும் என்று மக்கள் அலைகிறார்கள். பண்பைப் போற்றுவதில்லை; உழைப்பை நம்புவதில்லை; உழைப்புக்கு ஏற்ற வருவாய் போதும் என்று அமைவதில்லை; குறுக்கு வழிகளைத் தேடுகிறார்கள். கடவுளும், அருச்சனை முதலியவற்றை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு செல்வம் தருவார் என்று நம்பும் அளவுக்குப் போய்விட்டார்கள். அதனால் லஞ்சம் கொடுப்பவர்கள் மலிந்தார்கள்; லஞ்சம் வாங்குபவர்களுக்கு வாழ்வு ஏற்பட்டது. இப்படிப் பல வருஷங்களாகச் செய்த வினையின் பயனாக, ஆணவர் போன்றவர்கள் தோன்றிவிட்டார்கள். இனிமேல் புதுவிதை நல்லதாக விதைத்தால்தான் எதிர்காலத்தின் நன்மையை அறுவடை செய்ய முடியும். பொறுத்தே ஆகவேண்டும்......................அன்றாடப் பேறுகளை எண்ணி உருகுவார் இல்லை தீடீரென்று வருவாய் மிகுதியானால் புதிய நன்மை கிடைத்தால் எதிர்பார்க்காதது வந்து சேர்ந்தால் தெய்வத்தின் பெருங்கருணை என்கிறார்கள். அன்றாட வாழ்வின் நன்மைகளை எண்ணிப் போற்றுவதில்லை. கடவுள் நமக்கு மட்டும் மிகுதியான நன்மை செய்து மற்ற

---

104 மு.வ.; மலர் விழி; ப. 174

105 மு.வ ; அகல் விளக்கு; ப.121

வர்களை ஏங்க விடுவாரோ என்று எண்ணிப் பார்க்காமல், கடவுளைப் போற்றுகின்றார்கள்...... ஏழை மக்களும்...... குறுக்குவழி தேடுகிறார்கள். ஆடம்பர அர்ச்சனை செய்து கடவுளின் அருளைப் பெற்றால்தான் நன்மைகள் கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள்...... பொது உடைமையும் ஒத்த வாழ்க்கை நிலையும் அமைந்த பிறகுதான், கடவுளின் உண்மைத் தன்மையை உணர்ந்து உண்மையான ஆத்திகராக முடியும். அதுவரையில் ஆத்திகம் கிரகணமாகத்தான் இருக்கும்.''[106]

'அன்னைக்கு' என்னும் தம் கடித நூலில், தமிழினத்தின் துயரத்தைப் போக்க, துன்பத்தைப் போக்க முயல வேண்டும், பேச்சு, தலையங்கம், கொள்கைப் பரப்பு, இவை வேண்டா என்று கூறித் தமிழினத்தின் தனிக்குறையைப் பின்வருமாறு மு. வ. காட்டுகிறார்.

''வயிற்றுக்கவலை, வீட்டுக் கவலை என்று பலவகைப் பெயர்களால் சொல்ல வேண்டாம். பணக்கவலை என்று ஒரு சொல்லால் குறிக்கலாம். இது குறைந்துவிடும் என்று பொதுமக்கள் நம்புகிறார்களா? இல்லை. உலகம் தலை கீழாக அமைந்திருக்கின்றதே! உழைக்காத மக்கள் இன்பமாக வாழ்வதைப் பொதுமக்கள் கண்ணால் பார்க்கின்றார்கள். தாம் எவ்வளவோ உழைத்தும் வயிற்றுக்குக் குறை, உடைக் குறை, கல்விக்குறை, முதலான எல்லாக் குறையும் தமக்கே இருப்பதையும் பொதுமக்கள் உணர்கிறார்கள். இந்த நிலைமை இருந்தால் பொதுமக்களுக்கு எப்படி நல்லெண்ணம் பிறக்கும். இதைத்தான் நான் மாற்ற வேண்டும் என்று சொல்கின் றேன்.''[107]

''பணம் மேலோங்கி உள்ளவரையில் பணத்திற்குச் சட்டமும் நீதிமன்றமும் அரசாங்கமும் துணையாக உள்ள வரையில், எங்கும் ஊழல் இருந்தே தீரும். அது கோயிலை யும் விடாது.''[108]

''பணத்தின் ஆட்சி உள்ளவரையில் கடவுள் என்றோ, காதல் என்றோ இனிமேல் என் எதிரில் பேசாதே. பணத்தை

---

106 ம.ரா.போ. குருசாமி; மு நூ; ப. 174
107 மு.வ.; அன்னைக்கு; பக். 46—47
108 மு.வ.; கயமை; ப. 152

வழிபடுகிறவன் ஆண்டவனுக்கு ஆளாக முடியாது என்றா ராம் ஒருவர்.''[109]

''அவன் சொல்வதும் உண்மைதான்! அண்ணா, இன்றைக்குப் பணம் கொடுத்தால் அறிவாளிகள் சொன்னபடி பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்; செய்கிறார்கள். ஆகை யால் அறிவும் பணத்துக்குத் தோற்றுத்தானே வருகிறது என் றாள் அவள்.''[110]

''நாம் உழைக்க வேண்டும். உழைப்புக்கேற்ற கூலி வர வேண்டும். இப்படி எதிர்பார்ப்பதுதான் கடமை. அதை விட்டுவிட்டு எதிர்பாராமல் பணம் வந்து குவிய வேண்டும் என்று ஏங்குவது பாவம்.''[111]

இந்தப் பணக் கேட்டினைத் தம் புதினங்களில் பலவாறு இடித்துரைக்கிறார் மு.வ.

''உழைப்பை நம்புவதில்லை. உழைப்புக்கு ஏற்ற வருவாய் போதும் என்று அமைவதில்லை. குறுக்குவழிகளைத் தேடு கிறார்கள். கடவுளும் அர்ச்சனை முதலியவற்றை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு செல்வம் தருவார் என்று நம்பும் அளவிற் குப் போய்விட்டார்கள்.''[112]

''தேர்வில் தேர்ச்சி பெறுதல் முதல், வழக்கில் எதிரியைத் தோற்கடித்தல் வரையில் எதற்கும் கடவுள் லஞ்சம் வாங்கிக் கொண்டு வேண்டியதைச் செய்வார் என்று நம்புகிறார்கள். கடவுளைப்பற்றி ஊறிப்போன இந்த எண்ணமே, அதிகாரி களைப் பற்றியும் இருக்கிறது என்றார்.''[113]

''மேற்கு நாடுகளில் இந்த ஒழுக்கங்கள் இயல்பாக இருப்பதற்குக் காரணம் உண்டு. இங்கு இல்லாமைக்குக் காரணமுண்டு. அங்கே பிறருக்கு உதவி செய்வதே கடவுளுக்கு விருப்பமானது என்ற நம்பிக்கையின்மேல் சமயம் வளர்ந் திருக்கிறது. இங்கே இந்த உண்மை, இலைமறை காய்போல் உள்ளதே தவிர வெளிப்படையாக இல்லை. நேர்மாறாகப்

109 மு.வ.; மலர்விழி; ப. 93
110 மு.வ ; பெற்றமனம்; ப. 288
111 மு.வ.; அகல் விளக்கு; ப. 207
112 மு வ ; கயமை; ப. 217
113 மு.வ.; நெஞ்சில் ஒரு முள்; ப. 412

பிறருக்குத் தீமை செய்தாவது பணம் சேர்த்து அர்ச்சனை, அபிஷேகம் செய்வதைக் கடவுள் விரும்புவார் என்ற மூட நம்பிக்கை வளர்ந்திருக்கிறது.''[114]

தான் வாழ்கின்ற சமுதாயத்திற்கு வழிகாட்டிச் செல்பவனே சிறந்த படைப்பாளன் எனும் கொள்கையை மு.வ.வின் படைப்புகளில் காணமுடிகிறது. அவ் வகையில் தமிழ் இனத்தின் நிறைகள் எவை; குறைகள் எவை அவற்றிற்குக் காரணங்கள் யாவை, நீக்கக் கூடிய நெறிகள் யாவை என்பன போன்றவற்றை மிகத் தெளிவாக விளக்கிச் சென்றுள்ளார். தம் இனம் என்பதற்காக அல்லது தாம் 'தமிழர்' என்பதற்காகத் தமிழினத்தைப் புகழாது, உண்மையில் இன்றைய நிலை என்ன? தாழ்ந்தமைக்குக் காரணங்கள்; உயர்த்துவது எங்ஙனம் என்பனவற்றை வெளிப்படப் புதினங்களில் மொழிந்துள்ள திறம் போற்றுதற்கு மட்டுமின்றிப் பின்பற்ற வேண்டியதுமாம்.

திருக்குறளைப் பின்பற்றி நடந்தாலே தமிழ் இனம் உலகின் மிக உன்னத இனமாக உயர்ந்துவிடும் என்பதில் தமக்குரிய ஆழ்ந்த நம்பிக்கையைப் பலவாறாக உணர்த்தியுள்ளார் மு.வ. பெண்மை நலம் காப்பதில், உயர்த்துவதில் தான் தமிழின முன்னேற்றம் உண்மையானதாக, உறுதியானதாக நிற்கும் என்பதையும் சுட்டத் தவறவில்லை. வேண்டாத சாதிப்பாகுபாடுகளும் சமயம் என்ற பெயரில் நிலைத்து வேர் கொண்டுள்ள மூடநம்பிக்கைகளும் அறவே ஒழிந்தால் தான் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கும் என்பதும் மு.வ.வின் அசைவில் எண்ணமாகத் திகழ்வதை அவர் புதினங்கள் புலப்படுத்துகின்றன.

---

114 மு வ.; அகல் விளக்கு; ப.141

## கருவி நூற் பட்டியல்

கீழ்வரும், டாக்டர் மு.வ.வின் அனைத்துப் படைப்பு களும் தாயக வெளியீடாக; சென்னை, பாரி நிலையத்தை விற்பனை உரிமையாளராகக் கொண்டுள்ளன.

அகல் விளக்கு; மூ.ப. 1966
அந்த நாள்; ஆ.ப. 1964
அல்லி; ஐ.ப. 1974
கயமை; மூ.ப. 1969
கரித்துண்டு; ஐ.ப. 1969
கள்ளோ? காவியமோ?; ம.ப. 1970
செந்தாமரை; எ.ப. 1964
நெஞ்சில் ஒரு முள்; மூ.ப. 1963
பாவை; 1967
பெற்றமனம்; ஐ.ப. 1970
மண் குடிசை; இ.ப. 1964
மலர் விழி; ஏ.ப. 1969
வாடா மலர்; மூ. ப. 1972

## துணை நூற் பட்டியல்


அண்ணாவின் முத்துக் குவியல்; அன்புப் பழம் நீ (தொகு); சென்னை; பாரி நிலையம்; டிச. 1971.

அன்னைக்கு; மு. வரதராசன்; சென்னை; பாரி நிலையம்; ஆ.ப. 1956.

எழுபதுகளில் கலை இலக்கியம்; லக்ஷ்மி சுந்தரம் (பதி); பெங்களூர்; காவ்யா வெளியீடு; மு.ப. டிச. 1982.

கட்டுரைகள்; பாரதியார்; சென்னை; இன்பநிலையம்;1963

சிவகாமியின் சபதம்; கல்கி; சென்னை; மங்கள நூலகம்; ஆ.ப. 1975.

டாக்டர் மு.வ; இரா. தண்டாயுதம்; சென்னை; தமிழ்ப் புத்தகாலயம்; மு.ப. 1975.

தம்பிக்கு; மு. வரதராசன்; சென்னை; பாரி நிலையம் 1972.

தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு; திரு.வி. கலியாண சுந்தரனார்; சென்னை; அரசி புக் டிப்போ; 1969.

தமிழர் மதம்; மறைமலையடிகள்; சென்னை; கழகம்; 1965.

தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்; க.ப. அறவாணன்; சென்னை; ஐந்திணைப் பதிப்பகம்; 1987.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்; மு வரதராசன்; சென்னை; பாரி நிலையம்; ஐ.ப.பிப். 1959.

நல்வாழ்வு; மு. வரதராசன்; சென்னை; பாரி நிலையம்; மு.ப சூன். 1973.

நாவலும் வாழ்க்கையும்; கா. சிவத்தம்பி; சென்னை; தமிழ்ப் புத்தகாலயம்; மு.ப.பிப்.1978.

படித்திருக்கிறீர்களா?; க நா. சுப்பிரமணியம்; சென்னை; நேஷனல் புக் டிரஸ்ட்; 1957.

பாரதிதாசன் கவிதைகள்; பாரதிதாசன்; ராமச்சந்திரபுரம்; செந்தமிழ் நிலையம்; 1978.

பெருந்தகை மு வ.; சி. பாலசுப்பிரமணியன்; சென்னை; கழகம்; 1976.

பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பிலக்கியம்; க.த. திருநாவுக்கரசு; சென்னை; பாரி நிலையம்; 1984.

மு.வ. நினைவு மலர்; முத்து சண்முகன், சு. வேங்கடராமன் (பதி); மதுரை; மதுரைப் பல்கலைக் கழகம்; சன 1976.

மு.வ. முப்பால்; ம ரா.போ. குருசாமி; கோவை; நரேந்திர சிவம் பதிப்பகம்; மு.ப. 1977.

யான் கண்ட மு.வ.; இரா மோகன்; மதுரை; சர்வோதய இலக்கியப் பண்ணை; 1975.

வாழும் வள்ளுவம்; வா.செ. குழந்தைசாமி; சென்னை; பாரதி பதிப்பகம்; மு.ப. 1987.

வெள்ளிக்கிழமை; மு. கருணாநிதி; சென்னை; பாரதி பதிப்பகம்; நா.ப.மே. 1983.

# சிறப்புச் சொல்லகராதி

(எண்—பக்க எண்)

அகத்திணை 44, 111
அகநானூறு 40
அகிலன் 7
அண்ணா 25, 26, 28
அப்பர் 17
அருட்பா 67
அறவாணன், கா. ப. 74, 75
அன்பழகன், க. 4, 30
அன்பு உள்ளம் 20
ஆத்திகம் 117—119
ஆர். வி. 20
இட்டளி 41
இராமலிங்கர் 24, 66, 81
இலட்சிய நோக்கு 19
இளங்கோ 1, 37, 93
இளம்பூரணர் 22
உணவுக்கடை 41
உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் 22
எவ்வழி அறிதும் 47
எழில் முதல்வன் 18
ஓவச்செய்தி 44
கந்தர் அலங்காரம் 67
கருணாநிதி, மு. 25, 27, 29
கருநாடக இசை 17
கல்கி 25, 27, 29
கல்யாணி 20
காந்தியடிகள் 83
குயிலன் 20
குருசாமி ம.ரா.போ. 123
குலசேகரர் 37
குறிஞ்சிப்பாட்டு 44
குறுந்தொகை 47, 49, 72, 111
கூட்டுச்சமுதாயம் 81
கொங்குதேர் வாழ்க்கை 44
சங்க இலக்கியம் 1, 47, 48, 72
சங்கப் பாடல்கள் 44
சங்கப் புலவர்கள் 1
சண்முக சுந்தரம், ஆர். 20
சந்திர மோகன் 20
சமூகச் சிக்கல் 19
சரத்சந்திரர் 20
சாத்தனார் 78
சாதிக்பாட்சா, எஸ்.ஜே. 5
சாமி 20
சாமிநாதைய்யர், உ.வே. 24, 28
சிலப்பதிகாரம் 1, 16, 22, 47, 58, 63
சிவகாமியின் சபதம் 19, 27
சிவத்தம்பி, க. 6
சீனிவாசன் 20
சுத்தானந்த பாரதி 20
சுந்தரவடிவேலு, நெ.து. 5
சுப்பிரமணியம், க.நா. 4
சூடளக்கும் கருவி 42
செந்தார்ப் பைங்கிளி 44
சேதுப்பிள்ளை 29
சேதுராமன் 20
ஞானி 6, 8
தண்டாயுதம், இரா. 77
தணிக்கையர் 42
தமிழ்நெஞ்சம் 44, 90
தமிழ்மறை 93
தமிழர்மதம் 23
தனிப்பாடல் 42

தாயுமானவர் 17, 65, 66, 81
திருக்குறள் 1, 33, 43, 47, 49-58, 65, 72, 93—97, 110, 114, 126
திருநாவுக்கரசர் 83
திருநாவுக்கரசு, க.த. 5, 76
திருப்பாவை 37
திருப்புமுனை 21
திருவள்ளுவர் 1, 43, 77—80, 82, 105
திருவள்ளுவரும் வாழ்க்கை விளக்கமும் 49, 78
திருவாசகம் 63
திருவாய்மொழி 37, 67
திரு.வி.க. 25, 27—29, 43, 81
துர்க்காதாஸ், சுவாமி 20
துரைக்கண்ணன், நாரண. 20
தேவார இசை 17
தேவாரம் 63
தொல்காப்பியம் 22
நடேச ஐயர் 20
நல்வாழ்வு 112
நற்றிணை 1, 49, 72
நாடிக்குழாய் 42
நாத்திகம் 117—119
நாலடியார் 67
நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் 67
நுண்ணிதின் மகிழ்ந்தன்று 47
நூற்றாண்டுத் தமிழ் நாவல் 18
நெடுந்தொகை 72
பகவத்கீதை 57, 58
பட்டினத்தார் 68
பணக்கேடு 125
பதிற்றுப்பத்து 16
பரிதிமாற் கலைஞர் 22
பரிபாடல் 16
பனிப்பழம் 41
பாண்டியன் 20
பாரதிதாசன் 73, 93
பாரதியார் 4, 17, 24, 43, 68, 81, 114,
புத்துணர்ச்சி 21
புதினநடைப் புரட்சி 19
புரட்சிக் கொள்கை 19, 20
புறநானூறு 44
பொய்யாமொழி 37
பொற்—கையர் 31
மணிவாசகர் 65
மரியம் அல்லோத் 76
மறைநூல் 93
மறைமலையடிகள் 22, 23, 28
மாயாவி 20
மீட்டுருவாக்கம் 39
முத்தையா, கண. 51, 30
முளிதயிர்பிசைந்த 47
முழுவிடுதலை 19
மூடநம்பிக்கை 121, 123
மேதாவி 20
மோகன், இரா. 6, 41, 77
யாயும்ஞாயும் யாராகியரோ 47, 48, 111
ரெங்கமணி 20
வாசன் 20
வாழ்க்கைத் துணைநலம் 55
வாழ்வியல் நூல் 95
விடுகைத்தாள் 42
வில்வபதி, கோ. 10
வெங்கடரமணி, கே.எஸ். 18
வெங்கடேசன் 20
வெள்ளிக்கிழமை 27
வேங்கடசாமி, மயிலை. சீனி. 5
ஜகதீஸ் 20
ஷெரீப் கா. மு. 20

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சமயச் சொல்லகராதி | ... | 35-00 |
| 2. | தொல்காப்பியம்—உரியியல் | ... | 20-00 |
| 3. | மங்கலதேவி கண்ணகி கோட்டம் | ... | 15-00 |
| 4. | தமிழில் கதைப்பாடல் | ... | 25-00 |
| 5. | வாத்திய மரபு | ... | 20-00 |
| 6. | குத்பு நாயகம் ஆய்வுரை | ... | 15-00 |
| 7 | உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு | ... | 15-00 |
| 8. | தமிழ் தந்த வ. உ. சி. | ... | 15-00 |
| 9. | தொல்காப்பியம் — எச்சவியல் | ... | 45-00 |
| 10. | மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | ... | 15-00 |
| 11. | உலக முதன்மொழி தமிழ் | ... | 12-00 |
| 12. | மகாமதிப்பாவலர் | ... | 11-00 |
| 13. | உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் | ... | 12-00 |
| 14. | தமிழர் கூத்துக்கள் | ... | 25-00 |
| 15. | செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | ... | 15-00 |
| 16. | மருந்து செய்முறைகள் | ... | 45-00 |
| 17. | அகலமும் ஆழமும் | ... | 12-00 |
| 18. | தமிழ் நாவல்கள் (அகர வரிசை) | ... | 40-00 |
| 19. | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ... | 35-00 |
| 20. | எண்பத்திரண்டில் தமிழ் | ... | 90-00 |
| 21. | மொழிபெயர்ப்பியல் | ... | 10-00 |
| 22. | நெல்லை மாவட்ட நாட்டுப்புறத்தெய்வங்கள் | ... | 15-00 |
| 23. | செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... | 25-00 |
| 24. | விவிலியம்-திருக்குறள்-சைவசித்தாந்தம் -ஓர் ஒப்பாய்வு | ... | 20-00 |
| 25. | டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | ... | 10-00 |
| 26. | தேவநேயம் பாவாணரின் சொல்லாய்வு | ... | 10-00 |
| 27. | இனிக்கும் இராசநாயகம் | ... | 12-00 |
| 28 | பாவாணரும் தனித்தமிழும் | ... | 50-00 |
| 29 | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-2 | ... | 22-00 |
| 30. | தமிழர் இசை | ... | 70-00 |
| 31. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | ... | 12-00 |
| 32. | வர்ம சூத்திரம் | ... | 10-00 |
| 33. | தமிழ் இலக்கியக் கொள்கை — தொகுதி-9 | ... | 20-00 |
| 34. | தொல்காப்பியம்-வினையியல் | ... | 20-00 |
| 35. | தன்வந்தரி குழந்தை வாகடம் | ... | 14-00 |
| 36 | தொல்காப்பியம்-பெயரியல் | ... | 12-00 |
| 37. | தமிழரின் தாயகம் | ... | 10-00 |
| 38. | தொல்காப்பியம்-விளிமரபு | ... | 6-00 |
| 39. | தொல்காப்பியம்-வேற்றுமை மயங்கியல் | ... | 12-00 |
| 40. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-1 | ... | 12-00 |
| 41. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | ... | 10-00 |
| 42. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... | 15-00 |
| 43. | திராவிட மொழி இலக்கியங்கள் | ... | 35-00 |
| 44. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... | 12-00 |
| 45. | தமிழ்ச்சுவடிகள் அட்டவணை | ... | 6-00 |
| 46. | Tamilnadu-Bengal Cultural Relations | ... | 35-00 |
| 47. | Tamil Verse in Translation | ... | 40-00 |
| 48. | Education&Vocation (Heritage of the Tamils) | ... | 50-00 |
| 49. | Tolkappiyam—(Phonology & Morphology) | ... | 25-00 |
| 50. | Heritage of the Tamil-Temple Aris | ... | 50-00 |
| 51. | Karaikkal Ammaiyar | ... | 6-00 |
| 52. | A Tamil Reader. vol 1&2 | ... | 65-00 |
| 53. | பண்டைத்தமிழர் தொழில்கள் | ... | 45-00 |